# மன்னா

# மடுமாதா திருத்தலத்தில் ஆடித் திருவிழா சிறப்பாக நடைபெற்றது!







வேதசாட்சிகளின் நிலமாம் மன்னார் மண்ணின் ஆன்மீக வரலாற்றுச் சிறப்புமிக்க மருதமடு மாதா திருத்தலத் திருவிழா 02.07.2018 திங்கட்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. காலை 06.15 மணிக்கு திருவிழாத்திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ தலைமையில், கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்கலாநிதி மக்ஸ்வெல் சில்வா, இலங்கையின் பல மறைமாவட்டங்களிலுமிருந்து வருகை தந்திருந்த அருட்பணியாளர்கள் இணைந்து திருவிழாக் கூட்டுத் திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.

இத் திருவிழாத் திருப்பலிக்கு பெருந்தொகையான திருப்பயணிகளும், நீதித்துறை சார்ந்த முக்கிய பணியாளர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், மன்னார் அரச கட்டமைப்பின் பல்வேறு பணிநிலை அதிகாரிகளும், பிரதேச சபை உறுப்பினர்களும், முப்படையின் பிரதேச பணி நிலை அதிகாரிகளும், துறவிகளும் குருக்களும் கலந்து கொண்டனர்.

தமிழ், சிங்களம், இலத்தீன் ஆகிய மும் மொழிகளிலும் நடைபெற்றது. தமிழ், இலத்தின் மொழிகளிலான வழிபாட்டை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களும், சிங்கள மொழியிலான வழிபாட்டை கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்கலாநிதி மக்ஸ்வெல் சில்வா அவர்களும் முன்னெடுத்துச் சென்றனர். திருவிழாவுக்கு வந்திருந்த அனைவரையும், திருப்பலியின் தொடக்கத்தில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் வரவேற்றார். திருப்பலி முடிவில் அன்னையின் திருச்சுரூவப் பவனியும், ஆசீரும் இடம் பெற்றது.

## பம்பைமடு பங்கில் புதிய ஆலயம் திறப்பு





பம்பைமடு பங்கு, சாம்பல் தோட்டம் புனித காணிக்கை மாதா ஆலயம் புதிய இடத்தில், புதுப்பொழிவுடன், அழகுற நிர்மாணிக்கப்பட்டு காட்சியளிக்கின்றது.

இப்புதிய ஆலயத்தின் அபிஷேக விழாவில் எம் ஆயர் மேன்மை தங்கிய இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் 'வறோட்' பாண்ட் வாத்திய குழுவின் இசையோடு பங்கு மக்கள், பணியாற்றும் துறவறத்தார் புடைசூழ பங்குத்தந்தை அருட்பணி. ஜெஸ்லி ஜெகானந்தன் அடிகளாரால் வரவேற்கப்பட்டார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## புதிய உதயம் முள்ளிக்குளப் பங்கு

**மன்னார் மறைமாவட்டத்தின் 45வது பங்கு**

மன்னார் மறைமாவட்டத்தின் 45வது பங்கு 11.07.2018 புதன் கிழமை உதயமாகியுள்ளது. இதுவரை காலமும் சிலாவத்துறைப் பங்கின் அருட்பணி எல்லைக்குள் உள்ளடக்கப்பட்டிருந்த முள்ளிக்குளம், காயக்குளி, மன்னார், புத்தளம் எல்லையில் அமைந்துள்ள, பூக்குளம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக முள்ளிக்குளம் தூய பரலோக மாதா பங்கு உருவாக்கப்பட்டுள்ளது.

மன்னார் ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் முள்ளிக்குளம் வருகைதந்து புதிய பங்கைப் பிரகடனப்படுத்தி, இப்பங்கின் முதல் பங்குத் தந்தையாக அருட்பணி பீ.லோறன்ஸ் லியோன் அடிகளாரை கத்தோலிக்க திருச்சபையின் மரபுக்கொப்ப நியமனம் செய்து நன்றி திருப்பலியை நிறைவேற்றினார். இப் பங்கிற்கு வருகை தந்த ஆயரையும், புதிய பங்குத் தந்தையையும் பங்கின் நுழைவாயில் கிராமமான காயக்குளி பிரதான வீதியில் வைத்து இக்கிராம மக்கள் வரவேற்பளித்த பின்னர் உந்துருளிப் பவனியாக




முள்ளிக்குளம் வரை அழைத்துச் சென்றனர். பின் பாடசாலை மாணவர்களின் இன்னியம் மகிழ்வொலியோடு ஆலய முன்றல் வரை வரவேற்பளித்த பின்னர், இக்கிராமத்தில் கலைஞர்கள் கவிபாடி அழைத்துச் சென்றனர். அதன் பின் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

குருக்கள், துறவிகள், இறைமக்கள், அரச, அரச சார்பற்ற முதன்மைப் பணிநிலை பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வாழ்க்கைப் பெற்றான் கண்டல் புனித நீக்கிலார் ஆலய அர்ச்சிப்பு வீழா





அளவக்கைப் பங்கின் துணை ஆலயமான வாழ்க்கைப் பெற்றான் கண்டல் தூய நீக்கிலார் ஆலயப் பங்குச் சமுகம் ஞாயிற்றுக்கிழமை மாலை (17.06.2018) மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களுக்கு வரவேற்பளித்ததோடு, புதிதாக அமைக்கப்பட்ட புனித நீக்கிலார் ஆலயத்தையும் மன்னார் ஆயர் அவர்கள் ஆசீர்வாதித்து, திருச்சபையின் திரு வழிபாட்டு திருமரபிற்கேற்ப ஆரம்ப வழிபாடுகளை முன்னெடுத்து ஆலயம், திருப்பீடம், நற்கருணைப் பேழை ஆகியவற்றை முறைப்படி அர்ச்சித்துப் புனிதப்படுத்தினார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## இறை ஆசீரோடு மன்னா பணி ஆரம்பம்


அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா
தொலைபேசி இல: 077-4471522
E-Mail : fr.lucksilva@gmail.com
mannamnrc@gmail.com




**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002002978

## புதிய உதயம் மடு றோட் பங்கு






மடுத்திருப்பதிக்குச் செல்லும் பாதை ஆரம்பிக்குமிடத்தில் அமைந்துள்ள மடுறோட் புனித சித்தாந்திரை மாதா ஆலயம் மன்னார் மறைமாவட்டத்தின் 44வது புதிய பங்காக 08.07.2018ஆம் திகதியன்று பிரகடனப்படுத்தப்பட்டது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## சுதேச குருக்கள் துறவியர் தினம்

Indigenous Clergy/ Religious Sunday

**யூலை 29**



நமக்குப் பணிபுரியும் சுதேச (சொந்த நாட்டை, பிரதேசத்தைச் சேர்ந்த) குருக்கள், துறவியரின் இறை அழைத்தலுக்காகச் செபிக்கவும், இவர்களின் உருவாக்கத்திற்காக தாராள நன்கொடைகளை வழங்கவும் இறைமக்களாகிய நாம் முன்வருவோமாக!

**மையப் பொருள்**

"தூய வாழ்வினூடாக சீடத்துவத்திற்கு அழைப்பு"

"Call to discipleship through saintly life"

# மன்னா
## மனப்பொழிவு
## பதிப்பாசிரியர் பகர்வது

# மன்னார் திரு அவையின் நம்பிக்கை குறியீடுகள்

### திருமறைக்கான இரத்த சாட்சியம்:

*யூலை மாதம் 29ஆம் திகதி சுதேச குருக்கள் துறவிகள் தினம் கொண்டாடப்படுகின்றது. எமது மண்ணில் இருந்து உருவாகிய குருக்கள் துறவிகளைத் தான் நாம் சுதேசகுருக்கள், துறவிகள் என அழைக்கின்றோம். எமது மன்னார் பூமி வேதசாட்சிகளின் இரத்தம் தோய்ந்த மண் நூற்றுக்கணக்கான எம் மக்களின் உயிர், அவர்களின் விசுவாச வாழ்வு, இறை பக்தி, இறை நம்பிக்கை, இறைபயம், கிறீஸ்தவ அர்ப்பணம், ஆன்மீக ஆழம், கிறீஸ்தவ விழுமியங்கள் ஆகியவற்றை உரமாகக் கொண்டது. இவர்களின் இரத்த சாட்சியமே அன்றும் இன்றும் எம் மன்னார் திருஅவையின் வளர்ச்சியின் அடித்தளமாக இருந்து வருகின்றது. எம் மன்னார் தளத்திரு அவை இலங்கை திரு அவையில் முன்மாதிரிகையாக திகழ்வதற்கு எமது வேதசாட்சிகளின் இரத்த சாட்சிய வரலாற்று பின்னணி முக்கியமானதாக விளங்குகின்றது.*

### இறை மக்களின் ஆழமான விசுவாச வாழ்வு:

*"பேதுரு நீ பாறை, இந்த பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்" இறைமக்களின் ஆழமான விசுவாச வாழ்வு, ஆண்டவர் எம் மறை மாவட்டத்திற்கு கொடுத்த வரம் சொத்து எனலாம். அன்று நூற்றுக்கணக்கானவர்கள் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் தம் உயிரை தியாகம் செய்தார்கள். இன்றும் எத்தனையோ குடும்பங்கள், பெற்றோர்கள், இளையோர்கள், மாணவர்கள், குழந்தைகள், முதியவர்கள் தம் விசுவாச வாழ்வை சமூக வாழ்விலும், திரு அவையின் பணியிலும் பக்திச்சபைகளிலும் வெளிப்படுத்துகின்றார்கள்.*

### கலை, கலாச்சார, பண்பாட்டு வளர்ச்சி

*மன்னார் திரு அவையின் பல பாரம்பரிய பங்குகளில் விசுவாசத்தை வெளிக்காட்டும் கத்தோலிக்க பாரம்பரிய கலை, இலக்கிய வடிவங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இவ்வாறு மன்னார் மக்களின் வாழ்வின் அனைத்து துறைகளிலும் சிறப்பாக கலை கலாச்சார, பண்பாட்டு வடிவங்களில் விசுவாசத்தின் கூறுகள் இழையோடி இருப்பது அதன் மேன்மையின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றன.*

### மன்னா பத்திரிகை:

*மன்னா பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு 1986இல் அருட்பணி பிலிப் அடிகளார் பொறுப்பாக இருந்தார். முதன் முதலில் இதற்கு மன்னா எனப் பெயரிட்டவர் அருட்பணி. கிறிஸ்ரியன் வாஸ் அடிகளாராவார். இரண்டு வருடங்கள் போர்க்காலத்தில் தடைப்பட்ட மன்னா பத்திரிகை மீண்டும் அருட்பணி. நவரெட்ணம் அடிகளாரின் முயற்சியினால் வெளிவந்தது. 1997ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற அருட்பணி. அந்தோனிதாஸ் டலிமா அடிகளார் மாதத்திற்கு ஒருமுறை வெளிவரும் A3 அளவில் மாற்றினார். அன்றைய காலங்களில் 6,8 பக்கங்களோடு 2000ஆம் ஆண்டு வரை வெளிவந்த பத்திரிகை, பின்பு அருட்பணி. பா. கிறிஸ்துநேசன் அடிகளாரின் வரவில் அது 16 பக்கங்களோடு வகையிலும் தொகையிலும் வளர்ச்சி கண்டுள்ளது. ஆகவே மன்னா பத்திரிகை எம் மக்களின் விசுவாசத்தின் வெளியீடு.*

### இறை அழைத்தலும், குருத்துவ துறவற வாழ்வும்:

*இறை அழைத்தலின் விளைநிலம் எம் மன்னார் மறைமாவட்டம். பல ஆண்டுகளுக்கு முன் வெளிநாட்டிலிருந்து அருட்பணியாளர்கள் பணியாற்ற இங்கு வருகை தந்தார்கள். இன்று எம் மறைமாவட்டம் நூற்றுக்கணக்கான குருக்கள், துறவியரை எம் மறைமாவட்டத்திலிருந்து துறவற சபைகளுக்கும் கடல் கடந்த பணியகங்களுக்கும் வழங்கிக்கொண்டேயிருக்கின்றது. அறுவடையின் ஆண்டவருக்கு நன்றி கூறுவோம். இரத்த சாட்சியத்தை நினைவு கூர்வோம். வேதசாட்சிகள் புனிதராக செபிப்போம். எம் விசுவாசத்தை பாதுகாப்போம், அதனை கலை இலக்கிய பாரம்பரியங்களில் வெளிப்படுத்துவோம். வீட்டுக்கு ஒரு மன்னா பெறுவோம் வாழ்வடைவோம். இறை அழைத்தலை ஊக்கப்படுத்துவோம், எம் குருக்கள் துறவிகளுக்காக செபிப்போம், அவர்களை அன்பு செய்வோம், தியாகம் நிறைந்த அவர்களது பணியில் கரம் தொடுப்போம், உடனிருப்போம்.*

***"நீங்கள் என்னை தேர்ந்துகொள்ளவில்லை, நான்தான் உங்களை தேர்ந்து கொண்டேன்"***

***மீண்டும் மறுமடலில் சந்திப்போம்***
***உங்கள் அன்பின் பணியாளன்***
***அருட்பணியாளர் அ. லக்ஸ்ரன் டி சில்வா***
***பதிப்பாசிரியர் மன்னா***

## புரட்டாதி 1ஆம் திகதி ஆரம்பமாகின்றது!
# குறுங்கால இறையியல் கற்கைநெறி

**மன்னார் மறைமாவட்ட புனித யோசவ்வாஸ் இறையியல் கல்வியகம்.**

**குறுங்கால இறையியல் கற்கை நெறிக்கான விண்ணப்பம்**

இக் குறுங்கால இறையியல் கற்கைநெறிக்கான விண்ணப்பப் படிவங்களை உங்கள் பங்கு அருட்பணியாளரிடமிருந்து பெற்று 31.07.2018 செவ்வாய்க் கிழமைக்கு முன்னதாக, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறுங்கால இறையியல் கற்கை நெறி எனக் குறிப்பிட்டு இயக்குனர், அருட்பணி. அ. டெஸ்மன் குலாஸ், புனித. யோசவ்வாஸ் இறையியல் கல்வியகம்,
இல-135, தாழ்வுபாடு வீதி, மன்னார் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**அனுமதிக்கட்டணம்**

இக் குறுங்கால இறையியல் கற்கை நெறிக்கான சலுகைக் கட்டணமாக ரூபா. 250.00 செலுத்தப்படல் வேண்டும்.

**நடைபெறும் இடம்**

மன்னார் பேராலய மண்டபம்,
புனித செபஸ்தியார் பேராலயம், மன்னார்.

**நடைபெறும் காலம்**

01.09.2018 சனிக்கிழமை

**நடைபெறும் நேரம்**

காலை 10.00 மணி

**குறுங்கால இறையியல் கற்கைநெறியில் கற்பதற்கான அடிப்படைத் தகைமைகள்:**

பங்கு அருட்பணியாளரின் சிபாரிசின் பேரில் ஆர்வமுடையோர் அனைவரும்.
18 வயதிற்கும் 70 வயதிற்கும் இடைப்பட்டோர்.
துறவிகள் தங்களது சபை மேலாளர்களின் சிபாரிசோடு இக் கற்கை நெறியில் கலந்து கொள்ளலாம்.

**கால எல்லை:**

இக் குறுங்கால இறையியல் கற்கை நெறி சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 11.00 மணி வரை நடைபெறும்.
12 சனிக்கிழமைகளை இக் குறுங்கால இறையியல் கற்கைநெறி உள்ளடக்கியதாக இருக்கும்.

**சான்றிதழ்**

இக் குறுங்கால இறையியல் கற்கை நெறியின் இறுதியில் பரீட்சை நடைபெறும்.
இப்பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் மதிப்பெண்களைப் பெறுபவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

***அலுவலக முகவரி***

**இயக்குனர் : அருட்பணி. அ. டெஸ்மன் குலாஸ்,**
புனித யோசவ்வாஸ் இறையியல் கல்வியகம்,
இல: 135, தாழ்வுபாடு வீதி, மன்னார்.
தொ. 077-3077134, 071-8612610

## அமரர் செபஸ்ரியான் குரூஸ் அடிகளாரின்
# இரண்டாம் ஆண்டு நினைவு



மன்னார் மறை மாவட்டத்தின் வங்கலைப் பங்கு மகனும் திருவுளப்பணியாளர் சபைக் குருவுமாகிய அருட்பணி. எல். செபஸ்ரியான் குரூஸ் அடிகளாரின் இரண்டாம் ஆண்டு நிறைவு இம்மாதம் யூலை 19ஆம் திகதி ஆகும்.

அன்னாரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதியில் இளைப்பாற செபிக்கும்படி மன்னா இறைமக்களைக் கேட்டு நிற்கின்றது.

# மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2018

### யூலை

02. மடுமாதா திருவிழா
06. செபமாலை அன்னைத் திருவிழா - பாலையடி புதுக்குளம்
- மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை நியமனம் பெற்ற தினம் (1992)
08. இயேசுவின் திருஇருதயப் பெருவிழா - சிதம்பரபுரம்
- புனித தோமையார் - கல்நாட்டி - மடுமாதா ஆலயம் - மகாறம்பைக்குளம்
- புனித தோமையார் திருவிழா - முருங்கன்
10. புனித ஆரோக்கிய அன்னை திருவிழா - நானாட்டான் பங்குத் திருவிழா
13. நல்லாயன் கோவில் திருவிழா - மென்டிஸ்பண்ணை
- புனித செபஸ்ரியார் திருவிழா - மருதமடு
14. புனித கார்மேல் அன்னை - நாகர் இலுப்பைக்குளம்
15. தூய குழந்தை இயேசு திருவிழா - மன்னார்.
- புனித மரிய கொறற்றி திருவிழா - பெரிய பண்டிவிரிச்சான்
- புனித பற்றிமா அன்னை ஆலயம் - அண்ணாநகர்
16. புனித கார்மேல் அன்னைத் திருவிழா - கார்மேல்நகர் (பொற்கேணி), இளமருதங்குளம், ஆவணம், அளவக்கை, பறப்பாங்கண்டல்
- கார்மேல் சபை அருட்சகோதரிகள் விழா
- புனித கப்பலேந்தி மாதா திருவிழா - பெரிய நொச்சிக்குளம்
22. புனித பற்றிமா அன்னை திருவிழா - அண்ணா நகர்
25. புனித யாகப்பர் - கொக்குப்புடையான், நறுவிலிக்குளம், பறப்பாங்கண்டல், விடத்தல்தீவு, முருங்கன் கமம். கட்டுக்காரன் குடியிருப்பு, சிறுநீலாசனை, சிவபுரம்
26. புனித அன்னம்மா - கொக்குப்படையான், வங்காலை, பூவரசன்குளம்
28. புனித சதாசகாய மாதா ஆலயம் - கந்தபுரம் வேப்பங்குளம்.

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2018

### ஓகஸ்ட்

05. புனித மரிய மாதா - மாளிகைத்திடல்
- புனித அந்தோனியார் திருவிழா - பெரியகட்டு
- மடுத் திருப்பதியின் திருவிழாவிற்கான நவநாள் ஆரம்பம்
06. தூய குழந்தை இயேசு - மூன்றாம்பிட்டி
07. புனித அந்தோனியார் திருவிழா- பள்ளக்கமம்
10. புனித லோறன்ஸ் திருவிழா- தலைமன்னார் மேற்கு
15. புனித மரியன்னை விண்ணேற்பு பெருவிழா - மருதமடு திருவிழா
18. புனித மடுமாதா சிற்றாலயம் - குட்செட் றோட்
19. புனித வேளாங்கண்ணித் திருவிழா
- வைத்தியசாலை (மன்னார்)
20. புனித வேளாங்கண்ணி - தம்பனைக்குளம்
21. தூய குழந்தை இயேசு சிற்றாலயம் - கள்ளியடிப்பிட்டி
- மடு அன்னை திருவிழா - சிதம்பரபுரம் (ஓமந்தை)
22. புனித பரலோக அன்னை திருவிழா - கோமரசன்குளம், பறப்பாங்கண்டல் - வேதசாட்சிகளின் இராக்கினி அன்னை ஆலய திருவிழா - தோட்டவெளி - புனித அன்னை தெரேசா மறைபரப்பு அருட்சகோதரிகள் விழா
24. புனித பார்த்லேமியு திருவிழா - ஓலைத்தொடுவாய்
25. தூய கிறிஸ்து அரசர் திருவிழா - பெரியமடு
- மடுமாதா - தங்கநகர்
- புனித யோசேவ்வாஸ் ஆலயம் - தச்சன்குளம்
26. சதாசகாயமாதா - கணேசபுரம், வெள்ளாங்குளம்
- புனித அன்னை திரேசா திருவிழா - துட்டுவாகை
28. புனித அந்தோனியார் திருவிழா - உயிர்த்தராசன்குளம்
- அளவக்கை பங்குத் திருவிழா
30. தூய குழந்தை இயேசு திருவிழா - மடுக்குளம்
31. புனித சவேரியார் ஆலயம் - சுந்தரர்புரம், ஆட்காட்டிவெளி

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

- *மன்னா நிர்வாகம்* -

# பாரி ஒரு நாள் திருப்பயணம் பற்றி கர்தினால் சாந்த்ரி

## - திருத்தந்தை பிரான்சிஸ் -



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், யூலை 07, இத்தாலியின் பாரி நகருக்கு மேற்கொண்ட ஒரு நாள் திருப்பயணம் பற்றி, கீழை வழிபாட்டு முறை பேராயத் தலைவர், கர்தினால் லெயோனார்தோ சாந்த்ரி தலைமையிலான குழு, செய்தியாளர்கள் கூட்டத்தில் விளக்கியது.

மத்திய கிழக்கின் கிறிஸ்தவ சமூகத் தலைவர்கள் மற்றும், பிற கிறிஸ்தவ சபைகளின் முதுபெரும் தலைவர்களோடு, திருத்தந்தை, பாரி நகரில் கலந்துரையாடியது பற்றி பேசிய கர்தினால் சாந்த்ரி அவர்கள், மத்திய கிழக்கின் தற்போதைய சூழலை எதிர்கொள்வதில், கிறிஸ்தவ சபைகளின் தலைவர்களோடு ஒருமைப்பாட்டை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது என்று தெரிவித்தார்.

பாரி நகரில் இடம்பெற்ற இந்த சந்திப்பில், இஸ்லாம் மற்றும் யூதமதப் பிரதிநிதிகள் சேர்க்கப்படாதது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த கர்தினால் சாந்த்ரி அவர்கள், கிறிஸ்தவ சபைகளுக்கு இடையே உருவாக்கப்படும் இந்த ஒருமைப்பாடு மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில், பிற மதத்தவரை ஒதுக்குவதாக இல்லை எனத் தெரிவித்தார்.

இஸ்லாம் மற்றும் யூதமத பிரதிநிதிகள் சேர்க்கப்படுவது, உண்மையில் நல்ல பரிந்துரை என்றுரைத்த கர்தினால் சாந்த்ரி அவர்கள், முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள், புனித புமிக்கு மேற்கொண்ட திருத்தூதுப்பயணத்தில் நாசரேத்திலும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எகிப்துக்கு மேற்கொண்ட திருத்தூதுப்பயணத்தில், Al-Azhar பல்கலைக்கழகத்திலும் இத்தகைய சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன என்று கூறினார்.

யூலை 7ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனித நிக்கொலசின் திருப்பண்டங்கள் வைக்கப்பட்டிருக்கும் பாரி பசிலிக்காவுக்குச் சென்று அமைதிக்காகச் செபித்ததோடு, அந்நகர் கடற்கரையின் திறந்த வெளி அரங்கில், விசுவாசிகளோடும், கிறிஸ்தவ சமூகத் தலைவர்களோடும், பிற கிறிஸ்தவ சபைகளின் முதுபெரும் தலைவர்களோடும் இணைந்து, அமைதிக்கான செபவழிபாட்டில் கலந்து கொண்டார். உள்ளூர் நேரம் பதினொரு மணியளவில், கிறிஸ்தவ சபைகளின் தலைவர்களோடு, பூட்டிய அறைக்குள் கலந்துரையாடல்களை நடத்தினார் திருத்தந்தை.

பின், கிறிஸ்தவ சபை தலைவர்களோடு இணைந்து, பாரி பேராயர் இல்லத்தில் மதிய உணவை அருந்திய பின், அங்கிருந்து ஹெலிகாப்டரில் புறப்பட்டு, மாலை 5 மணி 15 நிமிடங்களில், வத்திக்கான் வந்தடைந்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# புலம்பெயர்ந்தோர் சார்பில் போராடும் தென்கொரிய ஆயர்

புலம்பெயர்ந்தோரை வரவேற்க மறுப்பது மனித மனசாட்சிக்கு எதிரான செயல் என்றும், குறிப்பாக, இது கிறிஸ்தவர்களின் மனச்சாட்சிக்கு எதிரான குற்றம் என்றும் தென் கொரிய நாட்டிற்குள் நுழைய விரும்பிய 500க்கும் அதிகமான புலம்பெயர்ந்தோரை, அந்நாட்டு அரசு ஜேஜீ தீவில் தடுத்து வைத்திருப்பதைக் குறித்தும், தன் கருத்துக்களை, மேய்ப்புப்பணி மடல் வழியே வெளியிட்ட, ஜேஜீ ஆயர் பீட்டர் காங்வூ இல் அவர்கள் இவ்வாறு கூறினார்.

ஜப்பான் காலனித்துவ அடக்குமுறைக்குப் பயந்து, கொரிய நாடுகளைவிட்டு வெளியேறிய மக்களை நாம் நினைவில் கொள்ளவேண்டும் என்று, ஆயர் காங்வூ இல் அவர்கள் தன் மடலில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது உலகெங்கும் புலம்பெயர்ந்துள்ள 70 இலட்சத்திற்கும் அதிகமான கொரிய மக்களுக்கு கொடுமைகள் நிகழ்வதைக் கேள்விப்பட்டால் தங்களுக்கு எவ்வளவு தூரம் பாதிப்புக்கள் உருவாகும் என்பதை, இந்நாட்டு மக்களும், அரசும், சிந்திக்க வேண்டும் என்று, ஆயர் காங்வூஇல் அவர்கள் தன் மடலில் எடுத்துரைத்துள்ளார். ஏமன் நாட்டிலிருந்து தென் கொரியாவுக்குச் செல்லும் மக்களுக்கு கடவுச் சீட்டு தேவையில்லாத நிலையில், கடந்த யூன் 1ஆம் திகதி முதல், அந்நாட்டு மக்களுக்கு கடவுச் சீட்டு தேவை என்பதை அரசு அறிவித்துள்ளது என்று ஆசிய செய்தி கூறுகின்றது. தற்போது, தென்கொரியா நாட்டில் புகலிடம் கோரும் மக்களின் எண்ணிக்கை 35,000 இற்கும் அதிகம் என்று ஆசிய செய்தி மேலும் கூறிப்பிடுவது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது.

# காவல் துறையின் சித்திரவதைகள் நிறுத்தப்பட வலியுறுத்தல்

இலங்கையில் காவல்துறையின் தடுப்புக்காவலில் அப்பாவி பொது மக்கள் சித்திரவதைப்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டிய சட்டங்களையும், ஏனைய முயற்சிகளையும் எடுக்குமாறு, சமயத் தலைவர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

கண்டியில், கத்தோலிக்கத் திரு அவையின் மனித உரிமைக்கான அலுவலகம் நடத்திய நிகழ்வில் பேசிய அதன் ஆர்வலர்கள், தடுப்புக்காவலில் இடம்பெறும் முறைகேடான நடவடிக்கைகள் குறித்து புலன் விசாரணை நடத்துவதற்கு, இதுவரை எவ்வித பலனுள்ள அமைப்புமுறை இல்லையென குறை கூறியுள்ளனர்.

1994ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட, சித்திரவதை தடுப்பு விதிமுறை, முறைகேடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு இதுவரை தவறியுள்ளது என்றும் அவர்கள் கூறினர்.

ஒருவர் சித்திரவதைக்கு உள்ளாகும்போது, ஒவ்வொரு மனிதரும் புண்படுகிறார் என்றும் காவல்துறையால் பெண்கள் கடும் சித்திரவதைக்கு உள்ளாகின்றனர் என்றும் அந்நிகழ்வில் கூறப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய புத்தமத தலைவர் வணக்கத்திற்குறிய மங்கள தேரர் அவர்கள், இலங்கையில் சித்திரவதைகள் தொடர்ந்து இடம்பெறுவது குறித்து ஐ.நா.வும் பல்வேறு பன்னாட்டு மனித உரிமை நிறுவனங்களும் கவலை தெரிவித்து வருகின்றன எனத் தெரிவித்தார்.

# திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி....

“இயேசுவுக்கு நீங்கள் வழங்கும் பதிலுரை, தற்காலிக கணக்கீடுகளாலும், உங்கள் வசதி வாய்ப்புக்களாலும் கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கக்கூடாது, வாழ்நாள் முழுவதும் அவருக்காக இயல்பாக வாழுகின்ற நிலை வேண்டும்”

“உயிர்த்த இயேசுவின் விண்ணேற்றம், இறைவனுடன் அவரது வாழ்வின் முழுமையில் நாமும் பங்கேற்போம் என்ற உறுதியை வழங்குகின்றது”

“உலகில் அன்பு பரவும் பொருட்டு இறைவா, எங்கள் இதயங்களை மாற்றியமைத்தருளும்”

“இறைவன் ஒருவரே நமக்கு உண்மையான மகிழ்வை வழங்குவார். செல்வம், இன்பம், அதிகாரம் போன்ற இவ்வுலகின் காரியங்களில் மகிழ்வைத் தேடி, நேரத்தை வீணாக்குவது பயனற்றது”

“நீங்கள் செபிக்கும்போது, இயேசுவோடு ஒன்றித்திருங்கள். அதேவேளை, அமைதிக்காக உழைப்பதோடு, ஏழை எளியோருடன் அக்கறையுள்ளவர்களாக செயற்படுங்கள்”

“தூய ஆவியாரால் நாம் வழிநடத்தப்பட்டு அவர் விரும்பும் இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட அனுமதிப்பதை விட, மேலான சுதந்திரம் எதுவும் இல்லை”

“புனித பாத்திமா அன்னையே, எம் தாய் மரியே, எம்மை நோக்கியும், எம் குடும்பங்களை நோக்கியும், எம் நாடுகளை நோக்கியும், இவ்வுலகை நோக்கியும் உமது பார்வையைத் திருப்பியருளும்”

# புலம்பெயர்ந்தோருக்கு பணி புரிய அரசை வலியுறுத்தும் ஆயர்கள்

அடைக்கலம் தேடி ஐரோப்பாவுக்குள் நுழையும் புலம்பெயர்ந்தோர் காப்பாற்றப்பட வேண்டும் என்ற விண்ணப்பத்துடன், 38,000க்கும் மேற்பட்டோரின் கையெழுத்துக்களுடன் கடிதம் ஒன்றை சுவிஸ்சர்லாந்து அரசிடம் சமர்ப்பித்துள்ளது அந்நாட்டு தலத்திரு அவை. புலம்பெயர்ந்தோரின் துன்பங்கள் குறித்து சுவிஸ்சர்லாந்தோ, ஐரோப்பிய நாடுகளோ தங்கள் கண்களை மூடிக்கொண்டு, பாராமுகமாய் இருக்கமுடியாது என்ற கருத்தை வலியுறுத்தி சமர்ப்பிக்கப்பட்டுள்ள சுவிஸ்சர்லாந்து ஆயர்களின் விண்ணப்பத்திற்கு, வாழ்வுக்கு மீட்பளிக்க பாதுகாப்பான வழிகள் என்று தலைப்பிடப்பட்டுள்ளது. மனிதாபிமான பாரம்பரியத்தைக் கொண்டுள்ள சுவிஸ்சர்லாந்து நாடு ஐரோப்பாவின் தென்பகுதியில் புலம்பெயர்ந்தோர் முகாம்களில் வாடும் மக்கள் தங்கள் வாழ்வை நல்ல முறையில் தொடர உதவவேண்டும் என அதில் குறிப்பிட்டுள்ளனர் ஆயர்கள்.

ஐ.நா.வின் புலம்பெயர்ந்தோருக்கான அவையின் பரிந்துரைகளைப் பின்பற்றி, துன்புறும் மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகளை, சுவிஸ்சர்லாந்து அரசியல் தலைவர்களிடம் வலியுறுத்தியுள்ள ஆயர்கள், புலம்பெயர்ந்தோரின் பணியில் தங்களை முற்றிலுமாக ஈடுபடுத்தியுள்ள திருஅவை அதிகாரிகள், அரசின் முயற்சிகளிலும் உதவ எப்போதும் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளனர்.

# மங்களூரு மறைமாவட்டத்தின் புதிய ஆயர் பால் சல்தான்ஹா

இந்தியாவின் மங்களூரு மறைமாவட்டத்தின் ஆயராகப் பணியாற்றிய அலாய்சியஸ் பால்டி சூசா அவர்களின் பணி ஓய்வை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உரோம் உர்பானியாவின் பாப்பிறை பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் 54 வயது நிரம்பிய அருள்பால் சல்தான்ஹா அவர்களை, மங்களூரு மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமித்துள்ளார். 1964ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி மங்களூரு மறைமாவட்டத்தின் கின்னிகோலி என்ற ஊரில் பிறந்த புதிய ஆயர் சல்தான்ஹா அவர்கள் 1991ஆம் ஆண்டில் அருட்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

உரோமையின் உர்பானியாவின் பாப்பிறை பல்கலைக்கழகத்தில், இறையியலில் முனைவர் பட்டமும், பெங்களூரு இறையழைத்தல் பயிற்சி நிறுவனத்தில் உளவியலில் சான்சிதழ் படிப்பும் முடித்துள்ள இவர், மங்களூரு மறைமாவட்டத்தில் முக்கிய பொறுப்புக்களை வகித்த பின்னர் 2015ஆம் ஆண்டு உர்பானியாவின் பாப்பிறை பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியைத் தொடங்கினார்.

இப்பல்கலைக்கழகத்தில் துணை ஆன்மீக இயக்குனராகவும் பணியாற்றிய மங்களூரு புதிய ஆயர் பால் சல்தான்ஹா அவர்கள் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், உலக ஆயர்கள் மாமன்ற பொதுச் செயலகத்தின் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டார்.

# ‘இறைவா உமக்கே புகழ்’, ஒரு வழிகாட்டி கர்தினால் பரோலின்

மனித குலத்திற்கு தொடர்ந்து சவால்கள் விடுத்து வரும் சுற்றுச்சூழல் ஆபத்துக்களைக் குறித்து, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ‘இறைவா உமக்கே புகழ்’ என்ற திருமடலில் கூறியுள்ள கருத்துக்கள், உலகின் அனைத்து தரப்பினராலும் வரவேற்கப்பட்டு வருகிறது என்று, திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

2015ஆம் ஆண்டு மே மாதம் வெளியான ‘இறைவா உமக்கே புகழ்’ திருமடலின் மூன்றாம் ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் வண்ணம், உரோம் நகரில் நடைபெறும் ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கில், திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள் வழங்கிய உரையில் இவ்வாறு கூறினார்.

இத்திருமடல் வழியே திருத்தந்தை பகிர்ந்துள்ள கூற்றுகள், அறிவியல் நிறுவனங்களாலும், மத நம்பிக்கை கொண்ட அனைத்து மக்களாலும் வரவேற்கப்பட்டுள்ளன என்று கர்தினால் பரோலின் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

திருமடலில் கூறப்பட்டுள்ள பல்வேறு கருத்துக்களில் மூன்று அம்சங்களை தனிப்பட்ட முறையில் தான் குறிப்பிட விழைவதாக கர்தினால் பரோலின் அவர்கள் தன் உரையில் கூறினார்.

நமது பொதுவான இல்லமான பூமிக்கோளம் சந்தித்து வரும் பல்வேறு நெருக்கடிகளை, தகுந்த தருணத்தில் வெளிச்சமிட்டுக்காட்டியுள்ளது திருத்தந்தையின் இத்திருமடல் என்பதை, முதல் அம்சமாக, கர்தினால் பரோலின் அவர்கள் குறிப்பிட்டார். உண்மையான மத நம்பிக்கையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் இணைத்துப் பேசியிருப்பது, இத்திருமடலின் இரண்டாவது சிறப்பு அம்சம் என்று கர்தினால் பரோலின் அவர்கள் கூறினார். மூன்றாவதாக, மனித வாழ்வு, கடவுள், அயலவர், உலகம் என்ற மூன்று தொடர்புகள் வழியே இயங்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தும் இத்திருமடல், இம்மூன்று உண்மைகளை இணைத்துப் பார்க்கும் கண்ணோட்டம், ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் எனும் இயலாக இத்திருமடலில் கூறப்பட்டுள்ளது என்று



கர்தினால் பரோலின் அவர்கள் தன் உரையில் எடுத்துரைத்தார்.

‘இறைவா உமக்கே புகழ்’ - ஒரு வழிகாட்டி

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது ஒரு நீண்ட பயணம் என்பதால், இப் பயணத்தில் நம்மை வழிநடத்த ‘இறைவா உமக்கே புகழ்’ என்ற திருமடல் பெரும் உதவியாக இருக்கும் என்று கர்தினால் பரோலின் அவர்கள் கூறினார்.

இத்திருமடலை மையப்படுத்தி நடைபெறும் பன்னாட்டு கருத்தரங்கில் பொருள்நிறைந்த விவாதங்களும், முடிவுகளும் உருவாக, தான் வாழ்த்துவதாக கர்தினால் பரோலின் அவர்கள் தன் உரையின் இறுதியில் கூறினார்.

# மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!



மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவைச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும். மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். நன்றி!

**- மன்னா நிர்வாகம்.**

# ஆன்மீகத்தை நோக்கி

அருட்பணி. ம. நிர்மலராஜ் (செ.தா)

### முன்னுரை

மனித வாழ்வில் தேடல்கள் அதிகமாகி விட்டது. மனித இனம் பிறந்தது முதல் இறக்கும் வரை இவ்வுலகிலே எதனையோ தேடிக்கொண்டு வாழ்கிறார்கள். எனவே தான் மனித வாழ்க்கையின் பெரும்பகுதி தேடுகின்ற வார்த்தைக்குள் அடங்கி விடுகிறது. ஆகவே தான் "தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியிருக்கும்" என்ற கவிஞனின் வைரவரிகள் நம்மையும் தேடலைப்பற்றி சிந்திக்க அழைப்பு விடுக்கின்றது. இன்றைய மனிதன் இந்நவநாகரிக உலகிலே புகழைத்தேடுகின்றான். பொன்னைத் தேடுகின்றான், மண்ணைத் தேடுகின்றான், ஆனால் தனது வாழ்வின் முழுமையின் நிறைவைத் தேட மறக்கின்றான். இங்குதான் "ஆன்மீகம்" என்ற வார்த்தையின் உட்பொருளைப் பற்றிய சிந்தனை நம்மை இறை ஒன்றிப்பின் நிறை வாழ்விற்கு அழைத்துச் செல்கின்றது.

### ஆன்மீகம் என்றால் என்ன?

ஆன்மீகத்தைப் பற்றி பேசுவது எளிதான செயல் அல்ல. "ஆன்மீகம்" என்றால் என்ன என்பது பற்றிய ஒத்த கருத்து இன்னும் உருவாகவில்லை. எனவே தான் ஆன்மீகம் பற்றி ஒருவர் கூறுவதை மற்றவர் மறுக்கக்கூடும் என இறையியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சிலர் ஆன்மா எனும் சொல்லை அடிப்படையாகக் கொண்டு ஆன்மீகத்தைப் புரிந்து கொள்கின்றார்கள். அவர்கள் மனிதரை உடல் ஆன்மா என்று கூறுவதையிட்டு, உடல் சாராதவற்றை "புறம்" சாராதவற்றை ஆன்மீகமாக சொல்லுகிறார்கள். சிலர் உலகத்தை துறந்து தம்மையே ஒறுத்து கடும் தவ முயற்சிகளில் ஈடுபடுவதை ஆன்மீகமாகக் கொள்கின்றார்கள். இன்னும் பலருக்கு நீண்ட செபம் ஆழ்ந்த தியானம் ஆன்மீகமாக உள்ளது. வேறு சிலருக்கு சமய முறைமைகள் சமய சடங்குகள் வழிபாட்டு முறைகளில் ஈடுபடுவதை ஆன்மீகமாகக் கருதுகின்றார்கள். இன்னும் சிலர் 1கொரி,13:1-3 இல் உள்ள இறைவார்த்தையின் உண்மையில் வாழ்வது ஆன்மீக வெளிப்பாடு ஆகும் என்று கூறுகின்றார்கள். ஆயினும் ஆன்மீகம் என்றது ஒரு வாழ்க்கை முறை, வாழ்வின் நெறி, அது இறைவனின் திருவுளத்தைத் தேர்ந்து அதனைச் செயலாக்குவதில் தன்னையே பலியாக்கும் ஒரு புனித நிலை. அது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் தம்மை வழிநடத்தும் இறைவனுக்கு ஒருவர் கொடுக்கும் பதில் மொழி, அது இறைவனின் திருமுன்னிலையில் அவரின் விருப்பத்தைத் தெரிந்து கொண்டு அதை நிறைவேற்றும் நோக்கில் வாழும் ஒரு புனித பயணம். "என்னை அனுப்பினவர் என்னோடு இருக்கின்றார். அவர் என்னைத் தனியாக விட்டு விடுவதில்லை. நானும் அவருக்கு உகந்தவற்றையே எப்போதும் செய்கின்றேன்" என்னும் இயேசுவின் வாக்குகள் ஆன்மீகம் என்றால் என்ன என்பதை தெளிவாக்குகிறது.

### கிறிஸ்தவ ஆன்மீகம்

கிறிஸ்தவ ஆன்மீகம் என்பதை ஆவிக்குரிய வாழ்வு என்றும் இயேசுவின் உளப்பாங்கிற்கு ஏற்ற வாழ்வு என்றும் சொல்லலாம். மனிதரோடும், மனிதருக்குள்ளும் இருக்கும் தூய ஆவி



அனைத்தையும் கற்றுத் தருபவர். (யோவா 17:17) முழு உண்மையை நோக்கி வழிநடத்துவார். (யோவா 13:16) அவர் வெளிப்படுத்தும் உண்மைக்கு ஏற்ப வாழ்பவர்களே தூய ஆவியின் மக்கள். இவ்வாறு வாழ்வதே ஆன்மீக வாழ்வு. அது போல கிறிஸ்துவின் உளப்பாங்கை (Spirit) அவரது வாழ்க்கையின் மன நிலையில் தம்மையும் இணைத்து சிந்தித்து செயற்படுவதையும் ஆன்மீகம் எனலாம்.

### இயேசுவின் ஆன்மீகம்

இயேசுவின் ஆன்மீகம் என்றால் என்ன என்பது பற்றி பல்வேறு கோணங்களில் பார்க்க முடியும் என்றாலும் இறைவனின் திருமுன் நின்று அவர் விருப்பத்தை உணர்ந்து அதன் படி வாழ்தலே ஆன்மீகம் என்று இயேசு தன் தந்தையின் திருவுளத்தை தேர்ந்து தெளிந்து அதை செயலாக்கத்திலே கொண்டவராக தம்மையே பலியாக்கிய நிலையை இயேசுவின் ஆன்மீகம் எனலாம். இங்கு இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுதலே இயேசுவின் இலட்சிய வாழ்வாக அமைந்தது.

ஆகவே தான் அவர் உலகிற்கு வந்த போது உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகிறேன் (எபி10:7-9) என் விருப்பத்தை நாடாமல் என்னை அனுப்பியவரின் விருப்பத்தையே நாடுகிறேன் என்ற இயேசுவின் தெய்வீக வார்த்தைகள் தமது வாழ்வின் முழுமை, நிறைவு, ஆன்மீக உணர்வுகள் அனைத்தும் தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதில் அடங்கியுள்ளதைக் காணலாம்

### பொதுநிலையினரின் ஆன்மீகம்

பயணம் செய்யும் திரு அவையில் பலதரப்பட்ட நிலையினர் பணி செய்தாலும் இறைமக்கள் குடும்பத்தில் பெரும் பங்கு வகிப்போர் பொதுநிலையினரே, ஆன்மீகம் பற்றிய அவர்களது சிந்தனைச் சிதறல்கள்.. 40 வயதான 03 பிள்ளைகளின் தாய் உண்மைச் செல்வமாகிய இயேசுவை சார்ந்து வாழ்வதும், என்னால் முடிந்தளவு மக்களுக்கு உதவி செய்து வாழ்வதும் அதன் மூலம் காணமுடியாத கடவுளுக்கு வழிபாடு செய்வதுமே ஆன்மீகமாகும். 18 வயதான A/L மாணவி இறைவன் என்னும் இலக்கை அடைவேன் என்னும் நம்பிக்கையோடு வாழ்வது எனது ஆன்மீகம். 30 வயதான வியாபாரி சிக்கல் நிறைந்த வியாபார உலகில் செய்தொழிலே எனது ஆன்மீகம். 40 வயதான தகப்பன். மனசாட்சி தரும் சுதந்திர உயர்வுடன் வாழ்வில் ஈடுபாடு கொள்வதும், குழந்தைகளை நல்வாழ்வுக்கு வழி நடத்திச் செல்வதும் எனது ஆன்மீகம் மேற்கூறப்பட்டவை பொதுநிலையினரின் வேறுபட்ட கருத்துக்களும் மாறுபட்ட சிந்தனைகளுமாயினும் திருஅவையின் வரலாற்றில் குறிப்பாக இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளின் படி திருஅவை எண் 31 இன் படி பொது நிலையினர் திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவின் உடலோடு ஒருங்கிணைக்கப்பட்டு, கிறிஸ்துவின் அரச குருத்துவ இறைவாக்குப் பணி வாழ்வுக்கு அழைக்கப்படுகின்றனர்.

ஆயினும், திரு அவை எண் 40 இன் படி தலையாகிய கிறிஸ்துவோடு தான் கொண்டுள்ள ஒன்றிப்பில் இருந்தே பொதுநிலையினர் தம் மறைத்தூதர் பணிக்கான உரிமையையும் கடமையையும் பெறுகின்றனர். ஆகவே எத்தகைய நிலையிலும், பணியிலும், பதவியிலும் இருப்பினும் கிறிஸ்தவ வாழ்வின் முழுமைப் பணிக்கு பொதுநிலையினர் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

### நிறைவு

மாறிவரும் உலகில் மனிதம் பேணப்பட மனித வாழ்வு வளம்பெற ஆன்மீகம் என்ற வாழ்க்கை முறை அளவை எல்லோரின் வாழ்விலும் தேவையும், அவசியமானதுமாகும். நாம் தேர்ந்தெடுத்த வாழ்க்கையின் நிலைக்கு ஏற்ப எம்மை நெறிப்படுத்தி வாழும்போது நிச்சயம் அது எம் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் வளமையைக் கொடுக்கும். ஏனெனில், ஆன்மீகத் தேடல் ஒரு கிறிஸ்தவனின் வாழ்வு, அது எல்லா வேளைகளிலும் தேடப்பட வேண்டும். ஏனெனில் இந்த ஆன்மீக வாழ்க்கை முறை ஒரு கிறிஸ்தவனை உண்மையும், நேர்மையும், புனிதமும் நிறைந்த அன்பிய வாழ்விற்கு அவனை அழைத்துச் செல்லும் ஒரு புனித திருப்பயணம். இது எல்லோருடைய வாழ்விலும் தேடப்படும் விரும்பப்படும் ஒரு ஆன்மீக ஏக்கம்.

**மன்னா வாசகர்களே!**
**எம்மோடு ஒத்துழையுங்கள்!**

பங்குகளில் நேரடியாகவும், பிற இடங்களில் தபால் மூலமாகவும் மன்னாவைப் பெறும் அன்புக்குரிய மன்னா வாசகர்களே, மன்னா பத்திரிகைக்கான பணத்தை விரைவாகச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்!

# திருச் செபமாலை புதிய அமைப்பு முறை

### தொடக்கச் செபம்

**முத:** தந்தை, மகன் தூய ஆவியாரின் பெயராலே.
**எல்:** ஆமென்
**எல்:** எல்லா நன்மைகளும் நிறைந்த அன்பு இறைவா, கெட்ட மனிதரும், நன்றி இல்லாத பாவிகளுமாயிருக்கிற எங்கள் மீது அளவில்லாத மாட்சி கொண்டிருக்கிற உம்முடைய திருச்சந்நிதியிலே இருந்து செபம் செய்ய தகுதி அற்றவர்களாய் இருந்தாலும் உம்முடைய அளவில்லாத இரக்கத்தில் நம்பி கொண்டு உமது மாட்சிக்காகவும் அன்னை மரியாவின் புகழ்ச்சிக்காகவும் ஐம்பத்து மூன்று மணி செபமாலை தொடுக்க ஆசையாய் இருக்கிறோம். இந்த செபத்தை பக்தியோடு செய்து எவ்வித கவனச் சிதறல்களும் இல்லாமல் முடிக்க உம்முடைய அருளை எங்களுக்குத் தந்தருளும் ஆமென்.

### தூய ஆவியார் செபம்

**எல்:** தூய ஆவியாரே எழுந்தருளி வாரும். விண்ணகத்திலிருந்து உமது பேரொளியின் அருட்சுடர் எம்மீது அனுப்பிடுவீர். எளியோரின் தந்தையே வந்தருளுவீர். நன்கொடை வள்ளலே வந்தருளுவீர். இதய ஒளியே வந்தருளுவீர். உன்னத ஆறுதலானவரே, ஆன்ம இனிய விருந்தினரே, இனிய தன்மை தருபவரே, உழைப்பின் களைப்பைத் தீர்ப்பவரே, வெம்மை தணிக்கும் குளிர் நிழலே, அழுகையில் ஆறுதல் ஆனவரே, உன்னதப் பேரின்ப ஒளியே, உம்மை நம்புவோரின் இதயத்தின் ஆழம் நிரப்பிடுவீர். உமது அருள் ஆற்றல் இல்லாமல் மனிதரில் எதுவுமில்லை. மாசு கொண்டதை கழுவிடுவீர். வரட்சி உற்றதை நனைத்திடுவீர். காயப்பட்டதை ஆற்றிடுவீர். வணங்காதிருப்பதை வளைத்திடுவீர். குளிரானதை குளிர் போக்கிடுவீர். தவறிப் போனதை ஆண்டருளுவீர். இறைவா உம்மை நம்பும் அனைவருக்கும் உமது ஏழு கொடைகளையும் வழங்கிடுவீர். புண்ணிய பலன்களையும் வழங்கிடுவீர். இறுதியில் மீட்பை அளித்து அழிவில்லாத இன்பமும் அருள்வீரே. ஆமென்.

### நம்பிக்கை அறிக்கை

**எல்:** விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகிறேன். அவருடைய ஒரே மகனாகிய இயேசு கிறிஸ்துவையும் நம்புகிறேன்.
**(பிறந்தார் எனச் சொல்லும் வரை எல்லாரும் தலை வணங்கவும்)**
இவர் தூய ஆவியால் கருவுற்று கன்னி மரியாவிடம் இருந்து பிறந்தார். பொந்தியு பிலாத்துவின் அதிகாரத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையப்பட்டு இறந்து அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். விண்ணகத்திற்கு எழுந்தருளி எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்றார். அங்கிருந்து வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க வருவார். தூய ஆவியாரை நம்புகிறேன். புனித கத்தோலிக்க திரு அவையை நம்புகிறேன். புனிதர்களின் உறவு ஒன்றிப்பை நம்புகிறேன். பாவ மன்னிப்பை நம்புகின்றேன். உடலின் உயிர்ப்பை நம்புகின்றேன். நிலை வாழ்வை நம்புகின்றேன் ஆமென்.

### இயேசு கற்பித்த செபம்.

**முத:** விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே,
உமது பெயர் தூயது எனப் போற்றப் பெறுக!
உமது ஆட்சி வருக!
உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல,
மண்ணுலகிலும் நிறைவேறுக!
**எல்:** எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத்
தாரும்.
எங்களுக்கு எதிராக குற்றம் செய்வோரை
நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும்.
எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும்.
தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும் ஆமென்.

### மங்கள வார்த்தை செபம்:

**முத:** அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசீர் பெற்றவர் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.
**எல்:** புனித மரியே, இறைவனின் தாயே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும் ஆமென்.

### திருத்துவப் புகழ்

**முத:** தந்தைக்கும், மகனுக்கும் தூய ஆவியாருக்கும், மாட்சி உண்டாவதாக.
**எல்:** தொடக்கத்திலே இருந்தது போல இப்பொழுதும்
எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக ஆமென்.

### பாத்திமா அன்னை செபம்:

**எல்:** ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். எங்களை நரக நெருப்பிலிருந்து மீட்டருளும். எல்லாரையும் விண்ணுலகப் பாதையில் நடத்தியருளும். உமது இரக்கம் யாருக்கு அதிகத் தேவையே அவர்களுக்கு சிறப்பான உதவி புரியும்.

### வாழ்க அரசியே செபம்:

**எல்:** வாழ்க அரசியே! தயை மிகுந்த அன்னையே, எங்கள் வாழ்வே, இனிமையே, தஞ்சமே வாழ்க! தாயகம் இழந்த ஏவாளின் மக்கள் நாங்கள், தாயே என்று உம்மை கூவி அழைக்கின்றோம். கண்ணீரின் பள்ளத்தாக்கில் இருந்து உம்மை நோக்கி கதறி அழுது, பெருமூச்சு விடுகிறோம். ஆதலால் எங்களுக்காக பரிந்துரைக்கும் தாயே, அன்புடன் எம்மை கடைக்கண் பாரும். உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவை, எங்கள் இம்மை வாழ்வின் இறுதியில் காணச் செய்யும். கருணையின் உருவே! தாய்மையின் கனிவே இனியக் கன்னித் தாயே!

**முத:** இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நங்கள்
தகுதி பெறும் படியாக
**எல்:** இறைவனின் புனித அன்னையே, எங்களுக்காக
வேண்டிக் கொள்ளும்.

### இறுதி செபம்

**எல்:** அதிதூதரான புனித மிக்கேலே, வானதூதர்களான புனித கபிரியேலே, இரபேலே, திருத்தூதர்களான புனித பேதுருவே, பவுலே, யோவானே, யாக்கோபே! நாங்கள் எத்தனை பாவிகளாய் இருந்தாலும், நாங்கள் மன்றாடிய இந்த ஐம்பத்து மூன்று மணி செபத்தையும் உங்கள் புகழ்ச்சியோடு ஒன்றாக சேர்த்து புனித அன்னை மரியாவின் திருப் பாதத்தில் காணிக்கையாக வைக்க உங்களை மன்றாடுகிறோம் ஆமென்.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# சிறுக்கண்டல் பங்கில் ஆயருக்கு மகத்தான வரவேற்பு






மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிமேதகு லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களை வரவேற்கும் நிகழ்வானது 10.06.2018 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இன்நிகழ்வானது முருங்கன் நகர மத்தியில் ஆரம்பித்து முருங்கன் சிலாவத்துறை வீதியூடாக முன்னே மாட்டுவண்டிப் பவனியும், அதனைத்தொடர்ந்து உளவு இயந்திரங்களின் பவனியும், அதனைத் தொடர்ந்து முச்சக்கரவண்டிகளின் பவனியும், அதனைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிள்களின் பவனியுமாக வித்தியாசமான முறையில் பவனி அமைந்திருந்தது.

அதனைத் தொடர்ந்து ஆயர் தந்தை அவர்கள் தனது வாகனத்தில் வந்து இறங்கியவுடன் பரிகாரிகண்டல் பாடசாலையின் இன்னிய வாத்தியம் முழங்க, கவிகள் பாடப்பட மாலை அணிவிக்கப்பட்டு சிறுவர்களின் மலர் தூவலின் மத்தியில் சிறுக்கண்டல் பங்கு ஆலயத்திற்கு அழைத்து வரப்பட்டு திருப்பலி இடம்பெற்றது.

திருப்பலியைத் தொடர்ந்து சிறிய கலை நிகழ்வுகளும், ஆயர் கௌரவிப்பும் இடம் பெற்றது. இன்நிகழ்வுகளை பங்கு சமூகத்தோடு இணைந்து பங்குத்தந்தை அருட்பணி. V. எமில் எழில்ராஜ் அவர்கள் சிறப்பான முறையில் ஒழுங்கமைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.தகவல்- N. றெஜினோல்ட் றோய், சிறுக்கண்டல்.

# சின்னப்பண்டிவிரிச்சான் புனித அந்தோனியார் சிற்றாலய திறப்பு விழாவும் திருவிழாவும்



மன்/ சின்னப்பண்டிவிரிச்சான் கிராமத்தில் புதிதாகச் சிற்றாலயம் அமைக்கப்பட்டு சென்ற 24.06.2018 அன்று மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி விக்ரர் சோசை அவர்களினால் திறந்துவைக்கப்பட்டது. பின்பு திருச்சூருபங்கள், பலிமேடை போன்றவை ஆசீர்வதிக்கப்பட்டது. திருவிழாத்திருப்பலியைக் குருமுதல்வர் அவர்களே தலைமையேற்று நடாத்தினார். அவருடன் தட்சனா மருதமடுப் பங்குத்தந்தை அருட்பணி. வசந்தன் (அ.ம.தி) அவர்களும் பண்டிவிரிச்சான் பங்குத்தந்தை அருட்பணி சவுல்நாதன் அவர்களும் இணைந்து கொண்டனர்.

குருமுதல்வர் தமது மறையுரையின் போது புனித அந்தோனியார் வாழ்ந்த இடம், பிறந்தவீடு, திருமுழுக்கு கொடுக்கப்பட்ட ஆலயம் அமைந்துள்ள லிஸ்பானியா நாட்டிற்கு தான் செல்வதற்கான சந்தர்ப்பம் தமக்குக் கிடைத்ததாக தமது சொந்த அனுபங்களை முன்வைத்து மறையுரையாற்றினார்.

இத்திருவிழாத் திருப்பலியில் பெரியபண்டிவிரிச்சான் திருக்குடும்பக் கன்னியர் சபை அருட்சகோதரிகள், அயல் கிராமப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அயல்கிராம மக்கள் அனைவரும் பெருமளவில் கலந்து சிறப்பித்தனர். திருப்பலி முடிவில் திருச்சூருப ஆசீரை குருமுதல்வர் அவர்கள் வழங்கினார். இறுதியில் பங்குத்தந்தை அவர்களினாலும் ஆலய மேய்ப்புப்பணிச் செயலாளர் A. J. அல்மேடா அவர்களினாலும் நன்றியுரை வழங்கப்பட்டது. இறுதியில் தாகசாந்தியும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

*தகவல் - சி. வி. யோட்ஸ், சின்னப்பண்டிவிரிச்சான்.*

# டிலாசால் தின நிகழ்வும் யூபிலி விழாவும்

மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் 25.05.2018 அன்று டிலாசால் நிகழ்வும் பிரதி அதிபர் அருட்சகோதரர் K.S. யோகநாதன் அவர்களின் வெள்ளி விழா சிறப்பு நிகழ்வுகளும் இடம் பெற்றன. அன்றைய தினத்தில் கலைப்பிரிவு மாணவர்களான, யேசுதாசன் கிளின்ரன் டலிமா, அந்தோனி கிஷாந், கிருஷாந்தன் ஆகியோரது சித்திரங்கள், சிற்பக் கண்காட்சியும் இடம்பெற்று அனைவரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பிரதி அதிபர் அருட்சகோதரர் K.S. யோகநாதன் அவர்களின் துறவற வாழ்வின் 25 வருட நிறைவினை ஒட்டி அவரது பணிவாழ்வுக்கு நன்றி கூறியும் இறையாசீர் வேண்டியும் அருட்பணி டலிமா அவர்களால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலி வேளையில் தனது துறவற அர்ப்பணத்தை புதுப்பித்து அருட் சகோதரர் யோகநாதன் தொடர்ந்து தனது பணி அர்த்தமுள்ளதாய் அமைய செபிக்கும்படியாகவும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து அருட்சகோதரரை அவரது குடும்பத்துடன் வாழ்த்திவரவேற்று மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி சமூகம் சிறு கலை நிகழ்வில் அவரை வாழ்த்திப்பாராட்டி நன்றி தெரிவித்தார்கள். மதிய விருந்துடன் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

# மன்னார் மாவட்டச் செயலராக மோகன்ராஜ் நியமனம்



மன்னார் மாவட்டச் செயலராக கிறிஸ்தோப்பர் மோகன்ராஜ் கடமைகளைப் பொறுப்பேற்றார். மேலதிக மாவட்டச் செயலர் அதிகாரிகள், உத்தியோகஸ்தர்களால் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. சர்வமதத் தலைவர்கள் ஆசியுரை வழங்கினர்.

"மன்னார் மாவட்டம் மூன்று மதங்கள் வாழும் அமைதியான பூமி முன்பிருந்த அதிகாரிகளால் நல்ல வளர்ச்சி கண்டுள்ளது. கிராமங்களையும் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும் வகையில் பணிசெய்ய வேண்டும்" என்று தனது முதலுரையில் மோகன்ராஜ் தெரிவித்தார்.

கிறிஸ்தோப்பர் அன்ரன் மோகன்ராஜ் தனது முதலாவது நியமனத்தை கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளராகப் பெற்றார். பின்னர் வடக்கு கிழக்கு மாகாணத்தின் கைத்தொழித்துறை திணைக்களத்தினுடைய மாகாண ஆணையாளராகவும், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளராகவும், கோப்பாய் பிரதேச செயலாளராகவும் முல்லைத்தீவின் மேலதிக மாவட்ட செயலாளராகவும், வடமாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

# குத்துச்சண்டையில் தேசிய சாதனை




மன்/கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் மகாவித்தியாலய மாணவன் மதுரை வீரன் தர்சன் கடந்த 02.07.2018 அன்று கொழும்பு றோயல் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட குத்துச்சண்டைப் போட்டியில் 18 வயதின் கீழ் 64 கிலோ எடைப்பிரிவில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்று சாதனைப்படைத்து பாடசாலைக்கும் மடுவலயத்துக்கும் எமது மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

மன்னார் மாவட்ட பாடசாலைகள் வரலாற்றில் தேசிய மட்டத்தில் குத்துச்சண்டையில் வெற்றி பெறுவது இதுவே முதல் வரலாறாகும். இந்த வகையில் இவருக்கான பயிற்சிகளை வழங்கிய பயிற்சி ஆசிரியர்களான திரு. N. நிக்சன் ரூபராஜ், திரு. M.M. சுரங்க, மற்றும் அதிபர் ஆசிரியர்களையும் மன்னா பெருமையுடன் வாழ்த்துகின்றது.

# குருத்துவம் திருமணம் கொடையும் மறைபொருளும்

**நூல் வெளியீடு**




அருட்பணி தேவரட்ணம் செல்வரட்ணம் அடிகளார் எழுதிய "குருத்துவம் திருமணம் கொடையும் மறைபொருளும்" நூல் வெளியீடு 28 மே 2018 அன்று கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் அதிபர் அருட்பணி T.J பிரபாகரன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ் ஆயர் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இந்நூலுக்கான வெளியீட்டுரை யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி. ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் வழங்கி இந்நூலை வெளியிட்டு சிறப்பித்தனர்.

# முத்தரிப்புத்துறையில் முப்பெரும் நிகழ்வுகள்






இம் முப்பெரும் நிகழ்வுகளை முத்தரிப்புத்துறை புனித செங்கோல் மாதா பங்குச் சமூகம் 13.06.2018 புதன்கிழமை அன்று தமது பங்கில் முன்னெடுத்துச் சென்றது.

ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகைக்கு மாபெரும் வரவேற்பளித்தனர். ஆலயத்திற்கான அடிக்கல் நடுகை செய்யப்பட்டது. புனித அந்தோனியார் சிற்றாலயத்தை, ஆயர் அவர்கள் அர்ச்சித்து திறந்து வைத்தார். தமது பங்கிற்கு, மன்னார் மறைமாவட்டத்தைப் பணிப்பொறுப்பேற்றதன் பின் முதன் முதலாக வருகை தந்த மன்னார் ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகைக்கு மாபெரும் வரவேற்பளித்தனர்.

அன்று மாலை முத்தரிப்புத்துறை நானாட்டான் பிரதான வீதியில் அமைந்துள்ள அருவியாற்றுப்பாலத்தில் வைத்து பங்குத்தந்தை அருட்பணி எ. டெனி கலிஸ்ரஸ் அடிகளாரும் பங்கின் அருட்பணிப் பேரவையினரும் வரவேற்று, உந்துருளிகள் அணிவகுத்துவர, ஆயர் அவர்களை அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் தமது கிராமத்தின் நடுப்பகுதி வரை அழைத்துவர அங்கிருந்து அரிப்பு பாடசாலையின் இசைக்குழு மேற்கத்திய இசைக்கருவிகளின் மகிழ்வொலியோடு ஆலய பிரதான நுழைவாயில் வரை அழைத்து வந்தனர். அங்கிருந்து முத்தமிழ்க் கலைஞர்களும், ஊர்ப்பெரியவர்களும் கவிபாடி தங்கள் கரங்களால் அதற்கு தாளமிசைத்து மெரூகூட்டி அழைத்து வந்தனர். ஆலயத்தை வந்தடைந்த பின் ஆயர் அவர்கள் இறைமக்களுக்கு ஆசீர் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, தற்போதுள்ள பழைமை வாய்ந்த பங்கு தலைமை ஆலயம் மக்களின் பயன்பாட்டிற்குப் போதாமல் இருப்பதால், புதிய ஆலயத்தின் தேவை கருதி புதிய ஆலயத்திற்கான அடிக்கல் வைக்கப்பட்டது. இறைவேண்டுதலின் பின் ஆயர் அவர்களும் அங்கு வருகை தந்திருந்த முதன்மை விருந்தினர்களும் அடிக்கல் வைத்தனர்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# புதுமையும், பழைமையும் நிறைந்த ஆலயம் மீண்டும் வணக்கஸ்தளமாகியது!





மாந்தை பங்கு, தேனுடையான் முள்ளிக்கண்டல் எனும் இடத்தில் திருத்தூதரான புனித பிலிப்பு அப்போஸ்தலரின் ஆலயம் 1886 ஆம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததற்கான ஆதாரங்கள் இலங்கை பாராளுமன்ற வர்த்தமானியத்தின் பதிவில் காணக்கூடியதாக உள்ளது.

1964ஆம் ஆண்டு புயலில் இவ்வாலயம் சேதமடைந்தது. இப்புயலின் பின்பு இங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்கள் இவ்விடத்தை விட்டு மன்னார், ஆவணம், முருங்கன் ஆகிய இடங்களில் குடியமர்ந்தனர்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# உங்கள் திருமண வாழ்க்கை தூய்மையாய் இருக்கட்டும்

பரஸ்பர அன்பு, மரியாதை, மன்னிப்பு மேலோங்கி, கடவுளின் சித்தத்தை எல்லாவற்றிலும் புரிந்து தம்பதியர் செயற்படும் நிகழ்டமே திருமண வாழ்க்கை என்பதாகும். இயேசுவின் ஆழமான அன்பை உணர்ந்து, தமது திருமண வாழ்விலே தம்பதியர் தங்கள் மத்தியில் இயேசுவின் பிரசன்னம் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தபின்தான் தம்பதியர் திருமண உறவில் புனிதம் என்ன என்பதை உணர முடியும்.

இந்த இறைவார்த்தையை இதயத்தில் இருத்துங்கள். "நீங்கள் யாருக்கும் எதிலும் கடன்படாதீர்கள், ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதே நீங்கள் செலுத்த வேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும்" (உரோ 13:8)

திருமணவாழ்வில் தம்பதியர் அனேக தவறான வாழ்க்கை நெறிகளைப் பின்பற்றி தவறானவற்றை சரியெனக் கருதி இறுதியில் தங்களுடைய கபடற்ற உள்ளத்தை களங்கமாக்குகின்றனர். நவநாகரீக போக்கு என்னவென்றால் "உண்டு, குடித்து களித்திரு" இது பெருந்தீனி விரும்பல் கொள்கைக்கு சரியான உதாரணமாக உள்ளது.

இந்த எண்ணம் தம்பதியரை அளவுக்கதிகமாக சிற்றின்ப ஆசைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவைத்து மிருககுணத்தை புகுத்துகிறது. பின்னர் அவர்கள் கடவுளின் சித்தத்தைவிட பிறரின் கருத்துக்களுக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இது மிகவும் வேதனைக்குரியது இப்பேர்ப்பட்ட உல்லாச வாழ்வில் செபம் தொலைந்து விடுகிறது. அன்பு அற்றுப்போகிறது, தற்பெருமை மட்டுமே தலைதூக்குகிறது. இப்பேர்ப்பட்ட பொருள் சார்ந்த வாழ்வில் துன்பத்திற்கு அர்த்தமே இல்லை.

ஏதேன் தோட்டத்தின் நடுவில் இருந்த மரத்தின் கனியை மட்டும் உண்ணலாகாது என்று கடவுள் ஆதாமிற்குக் கட்டளைக் கொடுத்தார். தற்போது சிலருக்கு இயல்பான சந்தேகம் கூட வரலாம். பின்னர் ஏன் கடவுள் அனைவரையும் படைத்து நம் அனைவருக்கும் சுதந்திரத்தையும், சுயசித்தத்தையும் கொடுத்திருக்கிறார். அதனிமித்தம் நமக்கு நல்லது எது என தெரிந்திருக்க வேண்டும் அதனால் நல்லவற்றை ஏற்று தீமையை ஒதுக்க நாம் தயாராக இருக்க வேண்டும். "உன் அருவருக்கத்தக்க செயல்களாகிய விபச்சாரங்களையும் காமக் கனைப்புகளையும் பரந்த வெளியில் குன்றுகளின் மேல் நீ செய்த கீழ்த்தரமான வேசித்தனத்தையும் நான் கண்டேன், ஐயகோ! எருசலேமே! நீ தூய்மை பெறுவது எந்நாளோ? (எரே 13:27) நம்மில் உள்ள இருளான எண்ணங்கள் நம்மை பொருளாசை உடையவர்களாயும் உலகப்பற்று உடையோராகவும் மாற்றுகிறது. நம்மில் உள்ள இருளான எண்ணங்கள் அழிவை, சேதத்தை உண்டாக்கி நம்முடைய ஆன்மீக ஒளியில் வேதனையைக் கொண்டுவருகிறது. நான் தவறு செய்ததை யாரும் பார்க்கவில்லை நான் செய்வது யாருக்கும் தெரியாது என நினைக்கும் போதும் கூட ஆண்டவர் கூறுவது சூரியனைவிட அவருடைய கண்கள் பத்தாயிரம் மடங்கு ஒளி படைத்தவை (சீரா 23:19) கடவுள் பார்க்காமல் யாரும் எதையும் செய்துவிட முடியாது. அதனால்



தம்பதியர் தொடர்ந்து திருமண தூய்மையைக் காத்துக்கொள்ள செபிக்க வேண்டும். இவர்கள் வாழ்வில் திருமண தூய்மையின் சக்திக்கு எதிராக எதுவுமே இல்லாதிருக்கட்டும். கடவுளின் பிரசன்னத்தோடும் தாம்பத்திய வாழ்வை தொடங்கினால் மட்டுமே தம்பதியர் தங்கள் அடிப்படையான இயற்கைக்கு எதிரான ஆசைகள், அவர்களின் பெருமைகளிலிருந்து வெளிவர முடியும் பழமொழி சொல்கிறது, தற்புகழ்ச்சி வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும்" கடவுள் தான் ஒரு நபருக்கு வாழ்க்கைத் துணைவன், துணைவியைக் கொடுப்பாராயின் அவர் தவறாகத் தேர்தெடுக்கமாட்டார். இவர்கள் திருமணத்திற்குப்பின் இருவரல்ல ஒருவர். மரணம்வரை தம்பதியர் ஒன்றாய் இணைந்திருக்க கொடுக்கப்படும் அழைப்பு தான் திருமணம் ஆகும். நம்பிக்கை கொள்ளாத கணவர், நம்பிக்கை கொண்ட தம் மனைவியால் தூயவராகிறார். அப்படியே நம்பிக்கை கொள்ளாத மனைவி, நம்பிக்கை கொண்ட கணவரால் தூயவராகிறார்" (1கொரி 7:14)

ஒருசில சமயங்களில் பல பலவீனங்கள் உடைய கணவன் ஒரு பெண்ணுக்கு அமைய வாய்ப்பிருக்கிறது. தன்னுடைய செபத்தினாலும் அன்பான நடத்தையினாலும் நல்ல பெண்மணி தன்னுடைய கணவரை மனமாற்றி அதன் வழியாய் தனக்குரியவராக மாற்ற வேண்டும்.

வார்த்தையின் வழியாக அல்ல மாறாக செயல்களின் வழியாக அவன் மாற முயற்சிக்க வேண்டும்.

இந்த நாட்களிலே ஊடகங்களின் பயன்பாட்டினால் அச்சகங்களும் சரி தொலைநுட்ப சாதனங்களும் கூட குடும்ப உறவை வெகுவாக பாதிக்கின்றன. தவறான பாலியல் சம்பந்தப்பட்ட நெருக்கமானவைகளை சின்ன குழந்தைகள் கூட கேட்டும் ஊடகங்களில் பார்த்தும் தங்களுடைய கள்ளம் கபடமற்ற தன்மையை இழந்து விடுகின்றனர். தவறான ஊடகங்களிலிருந்து வரும் தீமைகளிலிருந்து அவர்களைத் தூர வைப்பது மிக அவசியமாகும் சமூக வலைதளங்கள் சில குடும்ப உறவுகளில் பரத்தமை தேவையற்ற திருமண உறவுக்கு புறம்பான உறவுகளிலே பாசத்தைக் கொண்டு வந்து துன்பத்தை ஏற்படுத்துகின்றன. அவைகள் குடும்பங்களில் இருக்கும் அமைதியையும் சந்தோஷத்தையும் குலைக்க சாத்தானின் சதியேயன்றி வேறொன்றுமில்லை எனவே நல்ல மக்கள் ஊடகங்களில் ஊடுருவிப் பரவிகிடக்கிற இப்பேர்ப்பட்ட காட்சிகள் மற்றும் சத்தங்களினின்று விலகி இருக்க வேண்டும்.

தவக்கால நோன்பு நாட்களில் பெரும்பாலும் மாமிச உணவைத் தவிர்ப்பது வழக்கம். இன்றைய சூழலில் தேவையற்ற இச்சைக்குரிய எண்ணங்களைக் கொண்டு வருகின்ற Whatsapp மற்றும் Facebook போன்ற அனேக வலைத்தளங்களில் தீயவற்றை நம்மில் கொண்டு நிரப்புகின்றவற்றை தவிர்க்க வேண்டும். இயேசு எந்நாளும் உங்களோடு இருக்க இதை செய்ய உங்களால் முடியுமா? இடைவிடாத செபம், உறுதியான திடமனது, அசைக்க முடியாத மனவுறுதியோடு கூட நமது தாம்பத்திய வாழ்வைப் புதுப்பிக்க முடியும். நமது இல்லங்களில் கொடுமை, தீட்டானவை துன்மார்க்கம் போன்றவை உட்புகாது நேர்மையின் இல்லிடங்களாக நம் இல்லங்கள் திகழட்டும். "பொருளாசையை விலக்கி வாழுங்கள் உள்ளதே போதும் என்றிருங்கள்" (எபி 13:5)

கடவுள் அவரவருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையைத் தருகிறார். திருமணமான நபர் பிற ஆண்களை அல்லது பெண்களை மனதில் இருத்தி பகற்கனவு காணும் போது அவன் அல்லது அவளுடைய வாழ்வு இருளில் மூழ்கிவிடுகிறது. இந்த இருளில் கடவுளைப் பார்க்க முடியாது. இவ்வாறான சூழ்நிலை எங்கள் வாழ்வில் நிகழாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் தலைக்கு மேலாக ஒரு பறவை பறக்குமானால் தீமையானது எதுவும் உங்களுக்கு நேரிடாது.

ஆனால் அது உங்கள் தலையில் அமர்ந்து எச்சம் இடுமானால் எங்கள் முகம், மற்றும் தலை அழுக்காகிவிடும் அதுபோல திருமணமான நபர் தனது வாழ்க்கைத் துணையைத் தவிர்த்து வேறு ஒருவரை விரும்புவாரானால் மனவறை தூய்மையற்று எல்லா அசுத்தங்களும் நிறைந்திருக்கும்.

எல்லாரும் தூய்மையோடு வாழ முயற்சிக்க வேண்டும் இறைவார்த்தைக் கூறுகிறது "அடுத்திருப்பவன் மனைவியோடு உடலுறவு கொள்பவனும் அந்தப் பெண்ணும் கொலை செய்யப்பட வேண்டும்" (லேவி 20:10) அதனால் கவனமுடன் எச்சரிக்கையுடன் வாழுங்கள். தூய ஆவியில் நிறைந்து வாழுங்கள் கடவுளின் சித்தத்திற்கு புறம்பான எதையும் செய்ய வேண்டாம். திருமண வாழ்க்கையின் புனிதத்தை செபத்தாலும் தவத்தாலும் காத்துக்கொள்ளுங்கள்.

# குடும்பம் என்னும் கோவில்கள் அழியலாமா ?

**அருட்பணி M. நிர்மலராஜ் CR**

### முன்னுரை

மனித வாழ்வு இறைவனின் கொடை, இந்த வாழ்க்கையில் இல்லறம் இனிமை நிறைந்தது. புனிதம் சேர்ந்தது. குடும்பம் என்ற கோவில் கூட்டுறவின் பெருமையை தன்னகத்தே கொண்டது. எனவே தான் குடும்பம் ஒரு கோவில் என்றும், குடும்பம் என்பது ஒரு குட்டித் திருச்சபை என்றும், குடும்பம் என்பது ஒரு பல்கலைக்கழகம் என்றும் பல சான்றோர்கள் சாட்சியம் பகர்ந்துள்ளார்கள்.

இன்னும் சிலர் "வீடு கற்களால் கட்டப்படுவது, குடும்பமோ இதயங்களால் கட்டப்படுவதாகும்" என்றும் குடும்பத்தின் மேன்மையையும் தரத்தினையும் உயர்த்திப் பேசுகின்றார்கள். ஆயினும் இன்று குடும்பம் என்ற வாழ்வுக்குள் சந்தேகம் என்ற சூறாவளியும், அலட்சியம் என்ற நிலநடுக்கமும், பிள்ளைகள் பெரும் பாரமாகவும், மனைவியானவள் சுமையாகவும் காரண காரியம் தேடப்பட்டு குடும்ப வாழ்வு அதன் புனிதத்துவத்தையும் மேன்மையையும் இழந்து வருகின்றது.

### பரிசுத்த விவிலியத்தில்

'தந்தை வழி' சமுதாயமாக விளங்கிய இஸ்ராயேல் குலத்தில் தந்தையும் தாயும் மிகச் சிறப்பான இடம் வகித்தார்கள். குடும்பத்தின் எல்லா உரிமைகளும் தந்தையிடம் இருந்தது. தந்தையாரை ஆசீர்வதிக்கிறாரோ அவர் மேன்மை அடைவார். அவர்களின் வாக்கு மிகவும் முக்கியமாக கருதப்பட்டது. ஆபிரகாம் முதல் பல இஸ்ராயலேரின் வாழ்க்கையிலும் இந்த உண்மையைக் காணலாம். (மகனை உருவாக்கும் ரெபேக்கா ஆதியாகமம் 23ஆம் அதிகாரம்) (அன்னாள் 1 சாமுவேல் 1ஆம் அதிகாரம்) தாயும் முக்கியத்துவம் பெறுகிறார்கள். எனவே தான் கவிஞுனின் வைரவரிகளில்.

**"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பதினிலே"**

எனவே தான் குடும்ப வாழ்வில் அன்னையின் தியாகமும் அளவு கடந்த பாசமும் ஒரு குழந்தையை சமூகத்தில் வாழ்வு பெறச் செய்கின்றது.

வரலாற்றிலிருந்தே குடும்பம் என்ற கோவிலில் தாயும் தந்தையும் தெய்வமாக மதிக்கப்படுகின்றார்கள். இன்னும் போற்றப்படுகின்றார்கள். அதனால் தான் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற வழக்கு நம்மில் நிலவுகின்றது. எனவே தான் குழந்தையின் முதற் பள்ளி "தாயின் மடி" என்கின்றார் திருத்தந்தை 10ம் பத்திநாதர்.

### தந்தையின் கடமையும் பொறுப்பும்

குடும்பம் என்ற குழுவை ஒழுங்கு செய்பவரும், அதனை உரிய முறையில் பாதுகாத்து நடத்தும் பொறுப்பும், கடமையும் குடும்பத் தலைவருக்கே உரியது. தந்தையின் அன்பும் தியாகமும் பிள்ளைகளை நேரிய வாழ்விற்கு இட்டுச் செல்லும். ஆபிரகாம் லிங்கன் தன் மகனின் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் "என் மகனை அவனின் சொந்தக் கால்களில் நிற்பதற்கு கற்றுக் கொடுங்கள்" என்று எழுதினாராம். பண்டிதர் நேரு அவர்கள் சிறையிலிருக்கையில் தன் மகள் இந்திராகாந்திக்கு எழுதிய கடிதங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அது சிறந்த இலக்கியமாக திகழ்கின்றது. அந்த கடிதங்களே இந்திராவை ஒரு இரும்பு பெண்மணியாக உருவாக்கியது. எனவே தான் "தந்தையோடு கல்வி போகும்" என்பார்கள். "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்பார்கள். தந்தையின் தலையான கடமை தமது பிள்ளைகளை கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறப்படையச் செய்வது. ஆனால் இன்று பல குடும்பங்களில் பல தந்தையர்கள் தமது கடமையையும் பாரிய பொறுப்புக்களையும் மறந்து சுய இன்பங்களுக்கு அடிமையாகியும், பொறுப்பற்ற தன்மையிலும் முறையற்ற உயர்ச்சிகளை அடையத் துடிப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

ஆசிரியர் ஒரு மாணவரிடம் " தண்ணீருக்குள் வாழும் உயிரினம் மூன்று எது என்று கேட்கின்றார். மாணவன் கூறுகின்றான்: "ஒன்று தவளை, இரண்டாவது மீன், மூன்றாவது எங்க அப்பா" என்று கூறினான். இன்று பல குடும்பங்களில் தந்தையர்களின் தடுமாறிய வாழ்க்கை முறை குடும்பங்களில் பல சீர்கேட்டை உருவாக்குகின்றது.

### தாயெனும் தெய்வம்

தூய அகுஸ்தீனார் ஆயர் பொறுப்பேற்ற சமயத்தில் விழா மேடையில் வீற்றிருந்தார். அப்போது பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்த தன் தாயிடம் தம் முத்திரை மோதிரத்தைக் காட்டினாராம்.

"அம்மா! உங்கள் மகன் ஆயராகி விட்டேன் பாருங்கள்" என்பது தான் அதன் பொருள். அவரின் தாயார் பதிலுக்கு தன் விரலில் அணிந்திருந்த தம் திருமண மோதிரத்தைக் காட்டினாராம்.

"இப்படிப்பட்ட ஆயரான உம்மை பெற்று வளர்த்ததே இந்த தாய்தான்" என்பது அதற்குப் பொருள். பிள்ளையின் பெருமை தாயின் கையிலும், தாயின் பெருமை பிள்ளையின் கையிலும் இருக்கின்றது. இதை ஒவ்வொரு தாயும் பிள்ளையும் உணர வேண்டும். எனவே தான் திருத்தந்தை 10ம் பத்திநாதரின் கூற்றுப்படி

*"ஒரு மனித சமூகம் சுமூகமாக இயங்குவதற்கு அடிப்படையும் உயிரோட்டமுமாக இயங்குவது குடும்பமாகும்."*

திருச்சபை இன்று குடும்பத்தின் மூலமாகத்தான் மீட்புப் பணியை இவ்வுலகிற்கு வழங்கி வருகின்றது. எனவே தான் "தந்தை அகலாகவும் தாய் அதிலுள்ள எண்ணெயாகவும் இவர்களின் குழந்தைகள் ஏரியும் திரிகளாகவும் இருந்தால் அகல்விளக்கின் ஒளி போல குடும்பம் பிரகாசிக்கும்" என்று பகர்கிறது பாலஸ்தீன பழமொழி. எனவே தான் குடும்ப உறவில் கணவன் மனைவிக்கிடையே விட்டுக்கொடுத்தும், ஏற்றுக்கொண்டும், புரிந்து கொண்டும் வாழும் போது குடும்பம் என்ற பூங்காவனத்தில் மகிழ்ச்சியும் அன்பும் பெருக்கெடுக்கும்.

### குடும்பத்தில் முதியோர்

வயது முதிர்ந்தவர்கள் குடும்பத்திற்கு அணிகலன்கள் போன்றவர்கள். அவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள். போற்றிப் புகழப்பட வேண்டியவர்கள். இன்றைய இளைய தலைமுறையினர் இதை உணர்கின்றார்களா? நிச்சயமாக இல்லை, முதியவர்களை சுமையாக கருதுகின்றனர். வேண்டாத பொருளாக செல்லாக் காசாக ஒதுக்கிவிடுகின்றனர். முதியோர் பழுத்த அனுபவமுடையவர்கள், அறிவு முதிர்ந்தவர்,அவர்களைப் பேணிப்பாதுகாக்காமல் இருப்பதே துன்பத்தைத்தரும்.

"தீயினால் சுடப்பட்டவனுக்கு உய்வுண்டு பெரியோரை பழித்தவனுக்கு உய்வில்லை" என்பார்கள். உலகை அறிந்து உணர்ந்த மூத்தோரது நட்பு சிறந்த வாழ்விற்கு வழிவகுக்கும். வந்த நோயை போக்குவதாகவும் இனி வருகின்ற நோயையும் தடுப்பதாகவும் அமையும், இன்றைய இளையோர் தம்மை விட வயதாலும்,அறிவாலும், அனுபவத்தாலும் முதிர்ந்த பெரியோர்களுடன் நட்புக் கொள்ள வேண்டும். அவர்கள் காட்டுகின்ற நல்வழியில் நடக்க வேண்டும். அப்படி நடந்தால் குடும்பமானது கோயிலாக மலரும்.

### அன்பு தான் அடித்தளம்

குடும்பம் என்ற கோவில் அன்பு என்ற பண்பால் தினமும் ஆராயப்பட வேண்டும். அன்பு எனும் நூலில் கட்டப்பட்ட கதம்ப மாலைதான் குடும்பம், சமுதாயத்தின் அச்சாணியான குடும்பத்திற்கு அன்புதான் அடித்தளமாக அமைகின்றது. அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்றார் வள்ளுவர்.

குடும்பத்தின் நல்லறம் என்பது முதியோர்களின் வழிகாட்டலிலும், தாய் தந்தையின் தியாகத்திலும், சகோதர சகோதரிகளின் பாசத்திலும் பர்ணமிப்பதாக இருக்க வேண்டும். "Family is nothing else but adjustment" என்பது பொன் மொழி.

எனவேதான் குடும்ப வாழ்வில் உண்மை அன்பை கணவன் மனைவியிடையே ஆழப்படுத்தும் போது வாழ்க்கை மகிழ்ச்சியில் ஊன்றூறி மன அமைதி பிறக்க வழிகோலும்.

புனித யோசவ்வாஸ் ஆண்டு சிறப்புக் கட்டுரை

# புனித யோசவ்வாஸ் அடிகளாரின் மறைக்கல்வி அளித்தல் முறைகள்

- திரு. கி. சாள்ஸ் பங்கிராஸ், யாழ்ப்பாணம்

"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் நான் உங்களுக்கு கட்டளையிட்டயாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும் படி கற்பியுங்கள்" என்ற ஆண்டவர் இயேசுவின் பணிப்புக்கு ஏற்ப திருத்தூதர் காலம் தொடக்கம் திருச்சபை நற்செய்தி அறிவிப்புப் பணியைத் தனது முதன்மையான பணியாகச் செயற்படுத்தி வருகின்றது.

திருத்தூதர்கள் உலகின் பல்திசைநாடுகளுக்கும் சென்று நற்செய்தியை அறிவித்தார்கள். அறிவிக்கப்பட்ட நற்செய்தியில் நம்பிக்கை கொண்டவர்களிடம் அதை உறுதிப்படுத்தவும், அமுல்படுத்தவும் திருத்தூதர்கள் வழியாக அரும் அடையாளங்கள் இடம்பெறலாயிற்று. போதனைகளால் மட்டுமல்ல தமது வாழ்வாலும் சான்று பகர்ந்தார்கள். திருமுகங்கள் எழுதி கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை மேலும் அமுல்படுத்தினார்கள். தவறுகளைச் சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்தினார்கள்.

திருத்தூதர்களைத் தொடர்ந்து நற்செய்தி அறிவிப்புப் பணியிலும் (யையும்) நம்பிக்கையை வளர்க்கும் பணியிலும்(யும்) காலத்துக்குக்காலம் திருச்சபைத் தந்தையர்களாலும், மறைபரப்பாளர்களாலும் புதிய வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. காலத்துக்குக்காலம் மறைபரப்பாளர்களாக உலக நாடுகளிடையே பணியாற்றியவர்கள் அந்தந்த நாட்டு மக்களின் மொழி, பண்பாடு கலாச்சாரங்களுக்கு இசைய மறை அறிவுப்புப் பணியையும் மறையைக் கற்பிக்கும் பணியையும் செயற்படுத்தி வந்துள்ளனர். பிரதேச மக்களின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றுக்கு தம்மை பழக்கப்படுத்திக் கொண்டு செயற்பட்டார்கள். இவ்வாறாக பணிபுரிந்த மறைப் பணியாளர்களின் வரிசையில் 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இந்தியாவிலும் இலங்கையிலும் மறைப்பணியாற்றிய புனித யோசவாஸ் அடிகளாரும் ஒருவராவார்.

இலங்கையின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படும் இவரால் ஆற்றப்பட்ட மறைப்பணியையும் குறிப்பாக மக்களின் நம்பிக்கையை வளர்ப்பதற்கு அடிகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### *1. புனித யோசவ்வாஸ் அடிகளாரின் பிறப்பும் சிறுபராய வாழ்வும்*

இந்தியாவில் கோவாவில் பெனோலிம் என்னும் இடத்தில் கிறிஸ்தோப்பர்வாஸ், மரியடி மிராண்டா தம்பதியர்களுக்கு மகனாக யோசேவ்வாஸ் 1651ஆம் ஆண்டு சித்திரை மாதம் 21ஆம் நாள் பிறந்தார். இவருக்கு சகோதர சகோதரிகள் ஐவர் உண்டு. பிராமண வர்க்கத்தைச் சேர்ந்தவர். சிறுவயதிலேயே சுதேச மொழியான கொங்காணியையும் போர்த்துக்கேய மொழியையும் கற்றுக்கொண்டார். காரிருள்கலைய மெல்லிய ஒளிக்கதிர்களைப் பரப்பிப் படிப்படியாக மேலெழும் கதிரவன் பார்முழுவதிற்கும் தன் ஒளியைச் பரப்பிப் பிரகாசிப்பது போல சிறுவன் யோசவாஸ் நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வயதிலும் உடலிலும் வளர்ந்தது போல கல்வி அறிவிலும் ஆன்மீகத்திலும் வளர்ச்சியடைந்தார்.

இவரின் பெற்றோர் தங்கள் மகன் ஒரு குருவாக வரவேண்டுமென்ற ஆவலில் அவரைக் கடவுள் பக்தியில் பயிற்றுவித்து வரலாயினர். சிறுவன் யோசவ்வாஸ் பெற்றோரின் விருப்பத்திற்கு அமைந்தவராக முழுமனதுடன் பள்ளிப் படிப்புடன் இலத்தின் மொழியையும் கற்பதில் ஈடுபடலானார். அதற்கு மேலாக தேவ பக்தியில் வளர்ச்சி பெற செபம், தவம், தியானம் ஆகியவற்றில் அதிக நேரத்தைச் செலவளித்தார்.

### சிறுவயதிலேயே முன்மாதிரியாக வாழ்வு

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்னும் முது மொழிக்கு ஏற்ப சிறுவனான யோசவ்வாஸ் ஏனைய சிறுவர்களுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் ஓர் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். பலரும் சிறுவன் யோசவ்வாஸ் மட்டில் மதிப்பும், மரியாதையும் காண்பித்து வரலாயினர். அத்துடன் அவரது வாயில் பிறரை புண்படுத்தக்கூடிய எந்த ஒரு கடின வார்த்தைகளும் ஒருபோதும் வெளிவந்ததில்லை.

தினமும் அதிகாலையில் எழுந்து கோவிலுக்குச் சென்று திருப்பலியில் பங்குபெறுவார். அதன்பின்னர் பாடசாலைக்குச் செல்வார். வெளியில் செல்லும் பொழுதெல்லாம் தமக்குத்துணையாக திருச் செபமாலையைக் கொண்டு செல்வார். அத்துடன் செபித்துக் கொண்டும் செல்வார். இறந்தவர்களின் அடக்கச் சடங்குகளில் பங்குகொண்டு ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவார்.

சிறுவனான யோசவ்வாஸ் நறுமணம் கமழும் மலர்போல தமது வாழ்வாள் பலரைக் கவர்ந்தார். பள்ளிக்கூட மாணவர்கள் பலரும் இவரைப் பின்பற்றி செபமாலை செபிக்கவும், தினமும் திருப்பலியில் பங்கு கொள்ளவும் தொடங்கினார்கள். பூவோடு கூடிய நாரும் நறுமணம் பெறுவதுபோல அவரது பள்ளித் தோழர்களும் மணம் வீசும் மலர்களானார்கள். யோசவ்வாஸ் நடமாடும் மறைக்கல்விப் புத்தகம்போல வலம் வரலானார்.

### இறந்த ஆன்மாக்களுக்கான செபிப்பதில் தனித்தன்மை கொண்டவர்.

யோசவாஸ் இறந்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவதில் மிகவும் அதிகமான பிரியமுள்ளவராக விளங்கினார். தான் ஒருவர் மட்டும் ஆன்மாக்களுக்காக மன்றாடினால் போதாது என்பதை உணர்ந்தவராக இரவு வேளைகளில் தமது தோழர்களோடு புறப்பட்டு தெருவீதிகளில் திரிந்து வீடுகளில் உள்ளவர்களை உரத்த சத்தமாகக் கூப்பிட்டு மரித்த ஆன்மாக்களுக்காக செபிக்கும்படி சொல்லுவார். (இறந்த ஆன்மாக்களுக்காக மன்றாடும் நல்வழக்கத்தை இலங்கையில் அவர் பணிபுரிந்த காலத்திலும் நிலைநாட்டினார் என்று கூறப்படுகிறது.) இப்படியான வழக்கம் இக்காலத்திலும் இலங்கையில் பல பங்குகளில் கார்த்திகை மாதத்தில் இரவில் துக்கமணி அடித்து ஆன்மாக்களுக்காக செபிக்கும் வழக்கம் இருந்து வருகிறது குறிப்பிடத்தக்கது.



### குடும்பத்தினர் மத்தியில் உப்பாக ஒளியாக

யோசவ்வாஸ் தான் மட்டும் ஞான வாழ்வில் முன்னேறினால் போதாது தனது குடும்பத்தினர் உற்றார் உறவினர்களும் வளர்ச்சி பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசையுள்ளவராக இருந்தார். அவர்களுடன் பேசும்போதெல்லாம் ஞானவாழ்வு தொடர்பான விடயங்களையே பேசுவார். ஞானநூல்களில் உள்ள படிப்பினைகளை எடுத்துச் சொல்லுவார். தான் பெற்ற மறை அறிவை அவர்களும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே அவரது விருப்பமாக இருந்தது. இதனால் குடும்பத்தினர் இவர் மட்டில் தனியாக மதிப்பும் மரியாதையும் உள்ளவர்களாக இருந்தார்கள்.

### *2. குருவாக திருநிலைப்படுத்தப்படுதல், பணியில் சிறப்புறுதல்*

கோவையில் அமைந்துள்ள இயேசு சபையாரின் கல்லூரியில் பயின்றார். புனித தோமஸ் அக்குவைனஸ் கல்லூரியிலும் டோமினிக்கன் துறவி சபையினரால் கற்பிக்கப்பட்டார். 1676ஆம் ஆண்டில் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார். யோசவாஸ் தமது பணி வாழ்வில் இறை வார்த்தையைப் போதிப்பதில் சிறந்தவராக விளங்கினார். அதைவிடவும் மேலாக நற்செயல்கள் புரிவதில் அதிக விருப்பமுடையவராக அதில் மேன்மையுடன் விளங்கினார். இவரது இத்தகைய வாழ்க்கையால் பலர் கவரப்பட்டார்கள். தேனுள்ள மலரை தேனீக்கள் மொய்ப்பது போல மக்கள் பெருந்திரளாக இவரது வார்த்தைகளைக் கேட்பதற்காக சூழ்ந்து கொள்வார்கள். நகரத்தின் பிதாக்களும், செல்வந்தர்கள் பலரும் யோசவ்வாஸ் அடிகளாரைத் தங்கள் ஞான வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டனர். தங்கள் உள்ளத்தின் இரகசியங்களை அவருக்கு ஒழிவு மறைவின்றி வெளிப்படுத்துவர். அவரது ஞான அறிவுரைகளைக்கேட்டு மனம்மாறி பாவ அறிக்கை செய்து தமது வாழ்வை மாற்றிக்கொண்டனர்.

### தாழ்ச்சியின் வடிவம்

இவ்விதமாக பெரியோர், சிறியோர் என அனைவராலும்உயர்வாக மதிக்கப்படும் ஒரு குருவாகத் துலங்கினார். ஆனால் யோசவ்வாஸ் அடிகளார் புகழை, பெருமையை விரும்பியவரல்லர். தான் தங்கியிருக்கும் வீட்டிலேயே ஒரு சிறிய பள்ளிக்கூடம் நடத்தி அவ்வூர் இளைஞர்களுக்கு இலத்தீன் மொழியைக் கற்பித்து வந்தார். அத்துடன் மறைக்கல்வியும் கற்பித்தார். அவர்களிடையே இறை பக்தியை தூண்டி வளர்த்தார்.

### இலங்கை மக்களின் நிலை துணைபுரிய ஆவல்

16ஆம் நூற்றாண்டில் தொடக்க காலத்தில் போத்துக்கேயரின் வருகையால் இலங்கையில் போதிக்கப்பட்ட கிறிஸ்தவமறை தீவின கரையோரப் பகுதிகளில் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வளர்ச்சி பெற்றிருந்தது. மறைப்பணியாளர்கள் பலமுறைகளில் தம்பணிகளை சிறப்புடன் ஆற்றிவந்தனர். ஆனால் 17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒல்லாந்தரால் இலங்கையின் கரையோரப் பகுதிகள் கைப்பற்றப்பட்டன. அவர்கள் போத்துக்கேய ஆதிக்கத்தை இலங்கையிலிருந்து முற்றாக நீக்க வேண்டுமென்று தீவிரமாக செயற்பட்டனர். எனவே போத்துக்கேயரால் இலங்கையில் கொண்டுவரப்பட்ட கத்தோலிக்க மதத்தினரைக் கொடூரமாக துன்புறுத்தி முற்றாக அழித்துவிட முற்பட்டனர். கத்தோலிக்க மதம் தடைசெய்யப்பட்டது. கத்தோலிக்க ஆலயங்கள் பாடசாலைகள் பறிமுதல் செய்யப்பட்டன. ஒல்லாந்தரின் கல்வினிஸ்மதம் கடைப் பிடிக்கப்பட வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. கத்தோலிக்கர் நாடு கடத்தப்பட்டனர், சிறையிடப்பட்டனர்.. தண்டப் பணம் செலுத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். கத்தோலிக்க மறைப்பணியாளர்கள் அனைவருடம் நாட்டைவிட்டு துரத்தப்பட்டனர். குருக்களுக்கு மறைவிடம் கொடுக்கும் கத்தோலிக்கர்கள் தண்டிக்கப்பட்டனர்.

இலங்கையில் கத்தோலிக்க மக்கள் ஒல்லாந்தரால் அழிக்கப்படுவதையும், மக்களின் அவலநிலையையும் கோவாவிலிருந்து சீனா நாட்டிற்குச் சென்று திரும்பிச் செல்லும் வழியில் இலங்கையில் தங்கியிருந்தபோது தான் கண்களால் கண்டவற்றை குருவானவர் ஒருவர் மூலம் அறிந்துகொண்ட யோசவ்வாஸ் அடிகளார் இலங்கை மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற ஆசையினால் தூண்டப்பட்டார். இதன் காரணமாக தமது நெருங்கிய குருக்களின் ஆலோசனையைக் கேட்டு அறிந்து கொண்டார்.

இலங்கையில் ஆன்மீக வரட்சியில் பரிதவித்த மக்களை இறைவனின் மக்களாக மீண்டும் பிரகாசிக்கச் செய்ய ஆவலாயிருந்தார். இறைவனும் இலங்கை மக்கள் மட்டில் இரக்கம் கொண்டு அடிகளார் மூலம் அவர்களுக்குப் பணிபுரியச் சித்தமாயிருந்தார். யோசவ்வாஸ் அடிகளாரின் இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமென்று சிலுவையின் முன் அதிக நேரத்தைச் செலவிட்டு ஆண்டவரிடம் மன்றாடுவார்.

### இலங்கை நோக்கிய புறப்பாடு

1686ஆம் ஆண்டு பங்குனி மாதம் இலங்கை நோக்கிய தமது பயணத்தை ஆரம்பித்தார். தம்முடன் செபப்புத்தகத்தையும், திருப்பலிக்குத் தேவையான பொருட்களையும் மட்டுமே எடுத்துக்கொண்டார். வேறு எவற்றையும் அவர் எடுத்துக் கொள்ளவில்லை. உதவியாளர்களாக தனது சபைக்குரு ஒருவரையும், சகோதரன் ஒருவரையும் தம்முடன் அழைத்துக் கொண்டு புறப்படலானார். வரும் வழியின் முன்பு தான் மறைப்பணிபுரிந்த கன்னடப்பிரதேச மக்களை சந்தித்து அவர்களுக்கு மறைப்பணிகள் பல செய்தார். ஏறக்குறைய ஒன்பது மாதங்கள் அம்மக்களோடு தங்கியிருந்து அவர்கள் விசுவாச வாழ்வில் உறுதிப்படுத்தினார்.

1687ஆம் ஆண்டு தை மாதத்தில் கன்னடப் பிரதேசத்தை விட்டு காட்டுப்பாதைகள் வழியாக கால்நடையாகவே கடல் யாத்திரையாகவும் மலையாளப் பிரதேசத்திற்குள் சென்றார். அங்குள்ள கிறிஸ்தவகளைச் சந்தித்துக் கொண்டார். மேய்ப்பனில்லாத ஆடுகள் போன்று வாழ்ந்த அம்மக்களுக்கு போதனைகன் வழங்கியும், பாவசங்கீர்த்தனம், நற்கருனை ஆகிய அருட்சாதனங்களை வழங்கி அவர்களைத் தேற்றினார்.

மலையாளத்தில் தங்கியிருந்த காலத்தில் தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டார். திருவாங்கூர் பகுதியில் இருந்த இயேசு சபைக் குருக்களின் உதவியைப் பெற்றுக்கொண்டு இலங்கைக்குள் இரகசியமான முறையில் செல்வதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டார். ஒல்லாந்தருடைய சிறைக்கைதிகள் அணியும் எளிமையான உடையையும் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு பிச்சைக்காரன் வேடத்தில் இலங்கைக்குள் கடல் வழியாக காலடிவைத்தார்.

யோசவ்வாஸ் அடிகளார் மறைப்பணியில் அனுபவித்த துன்பங்கள் இடையூறுகள் அளவிட முடியாதவையாக. இருந்தபோதும் தமது முயற்சிகளில் தளர்வடையாது செயலாற்றி வந்தார். அன்றாட வாழ்வில் தனதும் தம்மோடு கூடவே பணிபுரிந்தவர்களினதும் தேவைகளை நிறைவு செய்வதற்கு எதுவுமே இல்லாத நிலை காணப்பட்டது. கடவுள் மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கை வீண் போகவில்லை. ஒருசில நல்ல உள்ளம் படைத்த கிறிஸ்தவர்கள் மூலம் கடவுள் அவர்களுக்கு உதவிகள் பல புரிந்தார்.

பரந்த நிலப்பரப்பில் எங்கும் சிதறி வாழ்ந்த கிறிஸ்தவர்களை தேடிக் கால்நடையாகவே சென்றார். ஆடுகளை தேடி அலையும் நல்ல ஆயனாய் மக்களைத் தேடிச் செல்வார். அவர்களுக்கு ஞான அறிவுரைகள் வழங்கி அவர்களிடம் காணப்பட்ட தவறான துர்க் குணங்களைத் திருத்தி உலகியல் போக்கில் வாழ்ந்தவர்களை ஞான வழியில் நடப்பதற்கு ஊக்கமூட்டுவார். தனது எளிமையான வாழ்க்கைமுறையில் மக்களின் மத்தியில் விரும்பப்படும் ஒருவராக விளங்கினார்.

புதிய இடங்களுக்குச் சென்றதும் தனது களைப்பைப் பாராது இளைப்பாற்றியைத் தேடாது உடனேயே மக்கள் பணியில் ஈடுபடுவார். இறைவார்த்தையைப் போதிப்பதும் அருட்சாதனங்களை வழங்குவதும் அவரது வழமையான செயற்பாடுகளாக இருந்தன. இவ்விதமாக ஓய்வின்றிச் சூழலும் கடிகாரம் போல பணிகள் புரிந்த போதும் தனிப்பட்ட ஆன்மீக வாழ்வில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டார். விடியற்காலையில் எழுந்து செபத்தில்,தியானம் செய்வதில், ஞானவாசனையில் ஈடுபடுவதில் தவறுவதில்லை.

தான் தங்கி இருக்கும் இடங்களில் உள்ள கிறிஸ்தவர்களை ஒன்று கூட்டி அவர்களுக்கு சாதாரண செபங்களைச் சொல்லிக் கொடுப்பார். மறை உண்மைகளை விளக்கிக்கூறுவார். அத்துடன் சிறுபிள்ளைகளை ஒன்றுகூட்டி பாடங்களை கற்பிப்பார். நற்கருனை, ஒப்புரவு அருட்சாதனங்களை வழங்கி ஊக்கமூட்டுவார். அதேவேளையில் நோயாளர்கள்,வயோதிபர்கள் உள்ள வீடுகளுக்கு சென்று அவர்களுக்கான சரீர உதவிகளை செய்வார். புண்களை தமது கைகளால் கழுவி மருந்து கட்டுவார். இரவு பகல் பாராது எவ்வேளையிலும் சகல மக்களுக்கும் தொண்டு செய்வதற்கு தயங்கமாட்டார்.

இப்படியாக பலதரப்பட்ட சேவைகளை ஓய்வின்றி செயற்பட்ட போதும் மூடப்பட்ட நிலையில் கவனிப்பற்று பாழடைந்து கிடந்த கோவில்களை புதுப்பித்து வழிபாட்டுக்கு ஏற்புடைய ஆலயங்களாக மாற்றியுள்ளார்.

ஆன்மீகப் பணிகளுடன் வேறுபல மக்கள் நலப்பணிகளும் அவரால் ஆற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவர்களில் சிலர் பெரும் கடன்களுக்கு ஆளாகி அவற்றிலிருந்து மீள முடியாதவர்களாக கடன் வழங்கியவர்களின் தொல்லைகள் நிமித்தமாக தங்கள் பிள்ளைகளை வேலையாள்களாக கொடுத்திருந்தார்கள்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)



# அதிர்வுகள் .....!

**அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்**

**சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 75**

# உயிரை மாய்க்க ஒருவருக்கும் உரிமையில்லை!

### *கண்கள் உண்டு, ஆனால், பார்ப்பதில்லை!*

இரு காதலர்கள் தற்கொலை செய்து கொள்வதற்காக மலை உச்சிக்கு ஏறிச் சென்றார்கள். இருவரும் கண்களை மூடிக்கொண்டு குதிப்பதற்குத் தயாரானார்கள். காதலன் முதலில் குதிக்கக் காதலி, "காதலுக்குக் கண்ணில்ல என்பதை உணர்ந்து கொண்டேன்!" என்று கூறிவிட்டுக் குதிக்காமல் இருந்துவிட்டாள். மலை உச்சியிலிருந்து கீழே போய்க்கொண்டிருந்த காதலன், "உங்களப்பத்தித் தெரியுமடி!" என்று கூறிக்கொண்டே முதுகில் மறைத்துக் கட்டிவைத்திருந்த பராசூட்டை விரித்துக்கொண்டானாம்!

### *தற்கொலையில் இலங்கை முதலிடத்தை நோக்கி முன்னேறுகிறதா!?*

இலங்கையில் 2013, 2014, 2015ஆகிய ஆண்டுகளில் 9,657பேர் தவறான முடிவெடுத்துத் தற்கொலை செய்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. 2013இல் 752 பெண்களும் 2,703 ஆண்களும், 2014இல் 660 பெண்களும் 2,484 ஆண்களும், 2015இல் 669 பெண்களும் 2,389 ஆண்களும் என மூன்று ஆண்டுகளிலும் 9,657பேர் தற்கொலை செய்து சாவடைந்துள்ளனர் என சட்டமும் ஒழுங்கும் அமைச்சு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் இத் தகவலை வெளியிட்டுள்ளது. 2013, 2014ஆகிய ஆண்டுகளில் இரத்தினபுரி பொலிஸ் பிரிவிலும் 2015இல் கண்டி பொலிஸ் பிரிவிலும் அதிகமான தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரிகின்றது.

மேலும், வவுனியாவில் தற்கொலைச் சம்பவங்கள் இவ்வாண்டின் தொடக்க மாதங்களிலேயே அதிகரித்துள்ள நிலையில் இதனைத் தடுப்பதற்கான வழிவகைகளை ஆராயும் கூட்டமொன்றில் வவுனியா பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் அகிலேந்திரன் கலந்து கருத்துரை வழங்கியுள்ளார். கடந்த 2017ஆம் ஆண்டில் வவுனியாவில் மட்டும் 429பேர் தற்கொலை செய்துள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலைத் தெரிவித்த அவர் இந்நிலை தொடருமானால் வினைத்திறனில்லாத சமூகமாக எம் சமூகம் விரைவில் மாறிவிடும் என்ற எச்சரிக்கையையும் விடுத்துள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்தின் அண்மைக்கால தகவல்களின்படி தற்கொலை செய்துகொள்பவர்கள் எண்ணிக்கையில் இலங்கை நான்காவது இடத்தில் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. மிகவும் ஆபத்தான நிலையில் நம் நாடும் நம் நாட்டு மக்களாகிய நாங்களும் உள்ளோம் என்ற சமிக்கையைத்தான் இது தெளிவாகக் காட்டி நிற்கின்றது.

### *தனிநபர், சமூகம் சார்ந்த காரணங்கள்*

தற்கொலை செய்துகொள்வதற்கான காரணிகளாகப் பொதுவாக தனிநபர் சார்ந்த காரணங்களாகவும், சமூகம் சார்ந்த காரணங்களாகவும் வகைப்படுத்திப் பார்க்கலாம். பரீட்சையில் சித்தியடையாமை, காதலில் தோல்வியடைதல், பொருளாதார நெருக்கீடு, தாய் தந்தையர் கடிந்து கொண்டது, வாங்கிய கடனைக் கட்டமுடியாமை, கொடுத்த கடனை மீளப்பெற முடியாது ஏமாற்றப்பட்டு விரக்தியடைதல் போன்ற காரணங்களை முன்வைத்துச் செய்யப்படும் தற்கொலைகள் தனிநபர் சார்ந்த காரணங்களால் செய்யப்படும் தற்கொலைகளாகும்.

கடன் தொல்லைகள், குடும்பத் தகராறுகள், பலாத்காரம் செய்யப்பட்டமை, ஏமாற்றப்பட்டமை போன்ற காரணங்களால் மேற்கொள்ளப்படும் தற்கொலைகள் சமூகம் சார்ந்த காரணங்களால் நடந்தேறுபவையாகும். இவற்றை இவ்வாறு பிரித்துப் பார்த்தாலும் இவை ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவையே. எக்காரணங்களை முன்வைத்து ஒருவர் தம் உயிரை மாய்த்துக் கொண்டாலும் தற்கொலைச் செயலானது கோழைத்தனமான, முட்டாள்தனமான, தீய, பாவச் செயலாகும்.

மேலும், 'சினிமாப் படங்களிலும், தொலைக்காட்சி நாடகங்களிலும் காண்பிக்கப்படும் தற்கொலைக் காட்சிகளும் எம் சமூகத்தில் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரிப்பதற்கு ஒரு காரணமாக இருக்கின்றது. அவ்வாறான காட்சிகள் மனதில் ஆழமாகப் பதிந்துவிடும். ஒரு நபருக்கு தன்னால் பிரச்சினைகளைக் கையாள முடியாத சந்தர்ப்பம் ஏற்படும்போது அவர் இலகுவாக இவ்வாறான முடிவுகளை எடுக்கத் தூண்டப்படுகின்றார்...' என வவுனியா பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் அகிலேந்திரன் மேற்சொன்ன கருத்துப் பகிர்வில் குறிப்பிட்ட விடயத்தை அனைவரும் கூர்ந்து நோக்கவேண்டி இருக்கின்றது.

### *எப்பிரச்சினைக்கும் தற்கொலை முடிவாகாது!*

பிரச்சினைகள் நீடிப்பதால் நெருக்கீடுகள் உருவாகின்றன. இந்நெருக்கீடுகள் மன உழைச்சலை – மனச் சோர்வினை பொதுவாக எல்லாருக்குமே ஏற்படுகின்றது. ஆனால் சிலருக்கே தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் வருகின்றது. இதற்கு அடிப்படையான முதல் காரணம் தங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைக்கு தற்கொலைதான் தீர்வு என மிகத் தவறான முடிவு எடுப்பதுதான்! தற்கொலை செய்து கொள்ள எண்ணுபவர்கள் 'தற்கொலை ஓர் உயிருக்குத்தான் முடிவே தவிர, பிரச்சினைக்கு அன்று!' என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்வார்களேயானால் இவ்வாறான தவறான முடிவுகளை எடுக்கமாட்டார்கள்.



தற்கொலை எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வாகாது என்பதை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். இவ்வாறான செயலால் இருப்பவர்களுக்கு இன்னுமின்னும் நெருக்கீடுகளை உருவாக்குமே தவிர இப்பாதகச் செயல் தீர்வினைத் தராது என்பதனைத் தனிநபர்களுக்கு ஊட்டவேண்டும். தற்கொலை செய்வதால் எதனையும் சாதித்துவிட முடியாது அல்லது அதனால் எதுவும் நடக்கப் போவதும் இல்லை. எனவே, தற்கொலை என்ற எண்ணத்தையே தனி மனிதர்கள் தம் எண்ணங்களில் இருந்து முற்றாக அகற்றிவிட, அழித்துவிட வேண்டும்.

அடுத்து, ஓர் உயிரின் பெறுமதி அவ்வுயிரை இழப்போருக்குத் தெரியாததுதான்! ஓர் இனிப்பைக்கூட பணம் கொடுக்காமல் வாங்கமுடியாது! அப்படியிருக்க, உயிரை இழப்பவர் எதுவுமே கொடுக்காமல் எம்முயற்சியும் செய்யாமல் வெறும் கொடையாகக் கிடைத்த இவ்வுயிரை எப்படி அநியாயமாக இழக்க முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்? இவ்வாறு பார்க்கும்போது தன் உயிரின்மேல் எவ்வதிகாரமும் இல்லாத மனிதன் தன்னுயிரை அநியாயமாக இழப்பதற்கும் உரிமை அற்றவன் என்பதும் உறுதியாகின்றது.

வாழ்க்கையின் நோக்கு, இலக்கு இல்லாததே இவ்வாறான தான்தோன்றித் தனமான முடிவுகளை எடுப்பதற்கான மற்றைய காரணமாகும். 'வாழ், வாழ விடு, வாழ வழி வகு' என்பார் அமரர் அருள்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளார் இத்தகைய பற்றுறுதி ஒருவரிடத்தில் இருக்குமென்றால் எத்தகைய நெருக்கடியான சூழலிலும் ஒருவர் வாழக்கூடிய வல்லமையைப் பெறுவார் எனத் துணிந்து கூறலாம்.

### *'கிழவனும் கடலும்!'*

தன் நாவலுக்கான நோபல் பரிசு பெற்ற ஏனெஸ்ட் ஹெமிங்வே என்ற நாவலாசிரியர் 'கிழவனும் கடலும்' என்றொரு நாவலைப் படைத்திருக்கின்றார். இலட்சிய வேட்கைக்கும், தன்னம்பிக்கைக்கும், விடா முயற்சிக்கும் முன்னுதாரணமான நாவல்தான் கிழவனும் கடலும்! கிழவன் ஒருவன் மீன்பிடிக்கச் செல்கின்றார். அவ்வாறு சென்று வலை விரித்தபோது ஒரு பெரிய விலாங்கு மீன் ஒன்று சிக்கிக்கொள்கின்றது. அதனைக் கரைக்குக் கொண்டுவருவதற்காக அம்முதியவர் சில நாள்களாகப் போராடி அவ்வலையைக் கரைக்குக் கொண்டுவருகின்றார். அவ்வாறு கரையொதுங்கிய வலையைப் பார்த்தபோது ஏற்கெனவே அம்மீனை ஏனைய மீன்கள் தின்றுவிட்ட நிலையில் அதன் பெரிய எலும்புகள்தான் வலையோடு கிடப்பது தெரிகின்றது!

இருப்பினும் அக்கிழவன் பெருமகிழ்ச்சி அடைகின்றார். காரணம் அக்கிழவனுக்கு அம்மீனினால் பணம் கிடைக்கவில்லையே தவிர தன் முயற்சியில் பெரும் வெற்றி பெற்றுவிட்டார். இலாபம் கிடைக்கவில்லையே தவிர தன் போராட்டத்தில் வெற்றி பெறுகின்றார். நாவலாசிரியரான ஹெமிங்வே, கடலுக்குள் இருந்த அக்கிழவனுக்காக அந்நாவலை எழுதவில்லை. கரைமேல் வாழும் நமக்காகத்தான் அதனை எழுதியிருக்கின்றார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இப் பூமியில் ஒவ்வொருவரும் வாழப்போவது ஒருமுறைதான் என்பதை ஒவ்வொருவரும் ஆழ்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும். மேலும் சவால்கள் ஊடாகத்தான் வாழ்க்கையை வாழமுடியும், வாழ்க்கையில் வெற்றிபெற முடியும் என்பதை உணர்ந்துகொண்டால் வாழ்க்கையை வாழ வழிவகைகளைத் தேடலாம். இவ்வாறு சிந்தனைசெய்வோமென்றால் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் அர்த்தமுள்ளதாகிவிடும்.

"திராட்சைப் பழம் நசுக்கப்படாமல் திராட்சை இரசம் உருவாகாது. மலர்கள் அரைக்கப்படாமல் வாசனைத் திரவியங்கள் கிடையாது. ஆகவே, உன் வாழ்க்கையில் அழுத்தங்கள் உள்ளன என்றால் பயப்படாதே அவை உன்னிடமுள்ள முதல்தரமானவற்றை வெளிக்கொண்டுவரும்" என்பார் அப்துல் கலாம்.

### *தன்னம்பிக்கையும் நகைச்சுவையுணர்வும் அவசியமானது!*

"தற்கொலை உணர்வு உள்ளவர்களுக்குத் தேவை தன்னம்பிக்கை. வாழ்வு என்பது ஒரு போர்க்களம். காயமில்லாத போர்க்களம் உண்டா? வாழ்வு என்பது ஒரு கடல். கொந்தளிக்காத கடல் உண்டா? வாழ்வு என்பது ஒரு வேள்வி. நெருப்பு இல்லாத வேள்வி உண்டா?" எனக் கேள்வி எழுப்பி தற்கொலைச் செயலுக்கு சாவுமணி அடிக்கின்றார் அருள்திரு வை. இருதயராஜ் அடிகளார். இவ்வாறு கூறுகின்ற அடிகள் தற்கொலை உணர்வு உள்ளவர்கள் நகைச்சுவை உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்கின்றார்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் இப்பணியாளர் இந்நகைச்சுவை உணர்வுக்குத் தன் நோயில் இருந்தே ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டுகின்றார். சந்திப்பவர்களிடம்,"நான் இருப்பதோ இக்கரை. போகவேண்டியதோ அக்கரை. உடம்பில் இருப்பதோ சக்கரை. இல்லை அதைப்பற்றி அக்கறை!" என துன்பத்தையும் நகைச்சுவையாகப் பகிர்ந்து கொள்கின்றார்.

### *கொலைகள் பாவமானது!*

கொலைகளில்; ஒருவரின் உயிரை இன்னொருவர் பறிப்பது (கொலை), ஒருவர் தானே தன்னைக் கொலைசெய்வது (தற்கொலை), தீராத – மாறாத நோயினால் அவதிப்படும்போது ஒருவர் தன் உயிரைப்போக்க மருத்துவ ரீதியாக உதவிபுரிவது (கருணைக்கொலை), கருக்கொலை, சிசுக்கொலை எனப் பல வகையுண்டு. இக்கொலைகள் அத்தனையும் தீமையானது, பாவமானது என்பதனை மனித நேயம் கொண்ட யாவரும் அறிவர்! கருணைக்கொலைக்கும், கருக்கொலைக்கும் ஆங்காங்கே சில நாடுகளில் சட்டரீதியான ஆதரவு இருப்பினும் இவை படைத்தவன் பார்வையில் அருவருப்புக்குரியவை என்பனை ஏற்றுக்கொள்ள வேண்டித்தான் இருக்கின்றது. இவற்றில் கொலை, கருணைக்கொலை, கருக்கொலை, சிசுக்கொலை போன்றன ஒருவர் அடுத்தவருக்குச் செய்யும் தீமையான பாவமாகக் கருதப்படுகின்றது. ஆனால் தற்கொலையோ ஒருவர் தனக்கே செய்யும் தீமையும் பாவமும் ஆகும்.

### *வாழ்வதற்கு மாற்று வழிகள் உண்டு!*

காதலில் தோல்வி என்று சொல்லி தற்கொலை செய்ய எண்ணுபவர்கள் வாழ்க்கையைக் காதலிக்க ஏன் எண்ணுவதில்லை என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். பிரச்சினையைத் தீர்க்க வழியில்லை எனத் தற்கொலை செய்ய நினைப்பவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தங்களுக்குத் தெரிந்திராத பல மாற்று வழிகள் உண்டு என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும்.

தங்களுடைய பிரச்சினைகளையும் தீர்க்காமல் தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்குச் சோகத்தையும் தொடர் துன்பத்தையும் ஏற்படுத்துவதாகவே அனைத்துத் தற்கொலைச் சம்பவங்களும் மாறிவிடுகின்றன. ஆக, தற்கொலைச் செயலானது ஒரு தொல்லையைத் தீர்க்கப்போய் பல தொல்லைகளை உருவாக்குவதாகவே இற்றைவரை மாறியிருக்கின்றது.

### *சாகச் சில வழிகளே, வாழப் பல வழிகள்!*

துறவி ஒருவரிடம் சென்ற ஒருவன் தான் உயிர் வாழ்வதைவிட சாவதே மேல் எனத் தன் விரக்தி நிலையை வெளிப்படுத்தி நின்றான். அத்துறவியோ, "அப்படியானால் உயிரை மாய்ப்பதற்கான வழிகளைக் கூறுபார்க்கலாம்?" எனக்கூறிய போது அவன் ஒருசில வழிகளைக் குறிப்பிடுகின்றான். அத்துறவியோ, "உயிரை மாய்ப்பதற்கு இச்சில வழிகளே உண்டென்றால், உயிர்வாழ்வதற்கு எத்தனை வழிகள் உண்டு என்பதை ஏன் இன்னும் நீ எண்ணிப் பார்க்கவில்லை?" என வாழ்வுபற்றி அவனைச் சிந்திக்கத் தூண்டினார்.

முதலில், எக்காரணத்தை முன்னிட்டும் தற்கொலை செய்துகொள்ளக் கூடாது, அப்படிச் செய்ய முற்படுவது பெரும் தீமையான பாவச் செயல் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். யாருடைய உயிரைப் பறிக்க யாருக்கும் உரிமையில்லை என்பதைப்போல ஒருவர் தன்னுடைய உயிரை மாய்ப்பதற்கும் எவ்வித உரிமையும் கிடையாது என்பதை ஒவ்வொருவரும் மனங்கொள்ள வேண்டும்.

### *இழந்ததுகளிடம் இருக்கின்றது!*

பொதுவாக, இயலாமையுடன் கூடிய நபர்கள் தவறான முடிவுகளை எடுப்பது மிகமிகக் குறைவு என்று கூறுவதைவிட இல்லையென்றே சொல்லிவிடலாம். சாதாரணமாக அவர்கள் சாதிக்க வேண்டும், வாழ்ந்து காட்டவேண்டும் என்ற துடிப்போடுதான் வாழ்ந்துகொண்டு இருக்கின்றார்கள். அதனால்தான், 'இழந்ததுகளிடம் இருக்கிறது!...' என்ற ஒரு சிந்தனையைச் சில மாதங்களின் முன் குறிப்புப் புத்தகத்தில் எழுதிவைத்தேன்.

"அங்கே, பார்வை இழந்தவர் ஒழுங்காகவே நடக்கிறார்! காது கேளாதவர் விளக்கமாகவே இருக்கிறார்! வாய் பேசாதவர் சரியாகவே சொல்கிறார்! இங்கே, பார்த்துப் பார்த்தும் சரியாகக் காண்பதில்லை! கேட்டுக் கேட்டும் தெளிவாகப் புரிவதில்லை! சொல்லிச் சொல்லியும் முழுதாய் விளங்குவதில்லை! இயலாமையுடன்கூடிய நபர்களைப் பார்த்து 'வலது குறைந்தவர்கள்' எனக் கருதும் 'வலதுகுறையாதவர்கள்' ஆகிய நாம் இயலாமையுடன் கூடிய நபர்களிடமிருந்து வாழ்க்கையைக் கற்றுக்கொள்ளவேண்டும், வாழ்வதற்கான வழிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கண்ணைத் திறந்து கொஞ்சம் கருத்தோடு சிந்திப்போமா?

**தயவுசெய்து அவதானியுங்கள்**

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம்:** கறுப்பு வெள்ளை 4,500/=, கலர்7,500/=

# புலம்பெயர்ந்தோருக்கென சிறப்பு திருப்பலியாற்றும் திருத்தந்தை

**- திருத்தந்தை பிரான்சிஸ் -**



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 05.07.2018 வியாழன் அன்று வெளியிட்ட டுவிட்டர் செய்தி, ஒரு கேள்வி வடிவில் அமைந்திருந்தது.

"நமது உள்ளங்களை அமைதிப்படுத்தி, இறைவனின் குரலைக் கேட்க நாம் அறிந்துள்ளோமா," என்ற கேள்வியை, திருத்தந்தை தன் டுவிட்டர் செய்தியாக வெளியிட்டார்.

மேலும் 06.07.2018 அன்று காலை 11மணிக்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் புலம் பெயர்ந்தோருக்கான சிறப்பு திருப்பலியை நிறைவேற்றினார், என்று வத்திக்கான் செய்தித் தொடர்பக இயக்குனர் கிரேக் புர்கே அவர்கள் அறிவித்துள்ளார்.

2013ஆம் ஆண்டு யூலை 8ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இத்தாலியின் இலாம்பதூசா தீவுக்குச் சென்று அங்கிருந்த புலம் பெயர்ந்தோரைச் சந்தித்த நிகழ்வின் 5ஆம் ஆண்டு நினைவாக, இத்திருப்பலி ஏற்பாடு செய்யப்பட்டது.

தனிப்பட்ட முறையில் அழைப்புப் பெற்ற புலம்பெயர்ந்தோரும் அவர்களுக்குப் பணியாற்றுவோரும் என 200 பேருக்கு மேல் இத்திருப்பலியில் கலந்து கொண்டனர்.

# விசுவாசத்தில் முழுமையாக

**கையளிப்பதே, குணம்பெறுதலின் முதல் படி**

**- திருத்தந்தை பிரான்சிஸ் -**

கிறிஸ்தவர்கள் மரணத்தைக் கண்டு அஞ்சத் தேவையில்லை, மாறாக, இதயங்களைக் கடினமாக்கி, ஆன்மாவைக் கொல்லும் பாவம் குறித்தே அச்சம் கொள்ள வேண்டும் என உரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இவ்வுலகில் உடலால் மரணம் அடைவதென்பது, ஒரு நொடி தூக்கத்தைப் போன்றது, ஆகவே, அது குறித்து மனத்தளர்ச்சியடைய வேண்டாம், ஆனால், கடின மனம் என்பது இதயத்தின் மரணத்தைக் குறிப்பதாகும், அதற்கே நாம் அஞ்சவேண்டும் என தன் ஞாயிறு நண்பகல் மூவேளை செப உரையில் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நற்செய்தியில் கூறப்பட்ட இயேசுவின் இரு புதுமைகளை மையமாக வைத்து தன் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

பெரு நோயால் அவதியுற்ற பெண்ணை குணமாக்கிய புதுமையிலும், யாயீரின் மகளுக்கு உயிரளித்த புதுமையிலும், விசுவாசமே மையமாக இருப்பதைக் காண்கின்றோம் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசுவில் நம்பிக்கை வைக்கும் எவரும் அவரை அணுக முடியும் என்பது, இங்கு நிரூபிக்கப்படுகின்றது என்றார்.

நாம் குணப்படுத்த வேண்டியவர்கள் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து, இயேசுவில் முழுமையாக சரணடைந்தால், அவரின் இதயத்தில் நாம் இடம்பிடிக்கலாம் எனவும் தன் மூவேளை செப உரையில் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# உலகில் அமைதி நிலவ செபிக்குமாறு அழைப்பு

**- திருத்தந்தை பிரான்சிஸ் -**

வன்முறை மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள நிகராகுவா, சிரியா ஆகிய நாடுகள் குறித்தும், அமைதி பேச்சுவார்த்தைகளை மீண்டும் துவக்கும் எத்தியோப்பியா மற்றும் எரிட்ரியா குறித்தும் தன் மூவேளை செப உரையின் இறுதியில் தன் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நிகரகுவா நாட்டு மக்களுக்காக தான் செபிக்கும் அதேவேளை, அந்நாட்டில் அமைதிக்காக உழைத்து வரும் அந்நாட்டு ஆயர்கள் மற்றும் நல்மனம் கொண்ட அனைத்து மக்களுக்கும் தன் பாராட்டுக்களை வெளியிடுவதாகவும் குறிப்பிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ். சிரியா நாட்டில், குறிப்பாக, அந் நாட்டின் Daraa மாநிலத்தில் இடம்பெற்ற இராணுவ தாக்குதல்களால், பல கல்வி நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகள் சேதமாக்கப் பட்டுள்ளதுடன், பல ஆயிரக்கணக்கான மக்கள் புலம்பெயர்ந்தவர்களாக மாறியுள்ளது குறித்தும் தனது கவலையை வெளியிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும் கடந்த ஒரு வாரமாக, தாய்லாந்தின் அடி நில குகைகளில் காணாமல் போயுள்ளவர்களைக் குறித்தும் தன் கவலையை வெளியிட்ட திருத்தந்தை, அவர்களுக்காக தான் தொடர்ந்து செபித்து வருவதாகவும் தெரிவித்தார்.

ஏறத்தாழ 20 ஆண்டு இடைவெளிக்குப்பின் தற்போது, எரிட்ரியா மற்றும் எத்தியோப்பியா நாடுகள் தங்களிடையே அமைதிப் பேச்சுவார்த்தைகளை துவக்க முன் வந்திருப்பது ஒரு மகிழ்ச்சி தரும் செய்தி என்பதையும் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மத்திய கிழக்கு நாடுகளின் அமைதிக்காக தான் ஏனைய கிறிஸ்தவ சபைத் தலைவர்களுடன் ஒன்று கூடி செபிப்பதாகவும் அதேவேளையில், அனைவரும் செபத்தில் இணையுமாறும் அழைப்பு விடுத்தார்.

# கிறிஸ்துவின் மகிமையை அவரின் சிலுவையிலிருந்து பிரிக்க இயலாது

**- திருத்தந்தை பிரான்சிஸ் -**

திருப்பொழிவு செய்யப்பட்டவரான கிறிஸ்துவின் மகிமையை, அவரின் சிலுவையிலிருந்து பிரிக்க இயலாது என்பதால், கிறிஸ்துவின் பாதையில் முட்டுக்கட்டையாக இருக்க வேண்டாம் என, கிறிஸ்தவர்களைக் கேட்டுக் கொண்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

புனிதர்கள் பேதுரு, பவுல் பெருவிழாவான யூன் 29, வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில், வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில், 14 புதிய கர்தினால்கள், ஏனைய கர்தினால்கள் மற்றும் பேராயர்களுடன் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இப்பெருவிழாவின் நற்செய்தி வாசகத்தை மையப்படுத்தி மறையுரையாற்றினார்.

நீங்கள் என்னை, யார் எனச் சொல்கிறீர்கள் என, இயேசு தம் திருத்தூதர்களிடம் கேட்டபோது சீமோன் பேதுரு, அவரிடம், நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன் (மத் 16,16) என்று விசுவாச அறிக்கையிட்டார், என்றுரைத்த திருத்தந்தை, கடவுளால் திருப்பொழிவு செய்யப்பட்டவரான கிறிஸ்து, தம் தந்தையின் அன்பையும் இரக்கத்தையும் உலகின் கடையெல்லை வரை தொடர்ந்து வழங்கிக்கொண்டே இருக்கிறார் என்றார்.

நமது நல்ல பெயர், வசதிகள், பதவி.. போன்றவற்றை இழக்கவும், ஏன் மறைசாட்சிய வாழ்க்கையும் கூட சந்திக்க நேர்ந்தாலும், உலகில் ஒவ்வொருவருக்கும், வாழ்வின் எல்லா நிலைகளில் உள்ளவர்களுக்கும், இயேசுவின் இந்த இரக்கமுள்ள அன்பை வழங்க வேண்டும் என்று கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசு தம் மரணம் பற்றி அறிக்கையிட்டபோது அதை ஏற்றுக்கொள்ள முடியாமல் பேதுரு இருந்த போது, அவர் ஆண்டவரின் எதிரியாக மாறுகிறார் மற்றும், மெசியாவின் பாதைக்கு முட்டுக்கட்டையாக இருந்தார் என்றுரைத்த திருத்தந்தை, பேதுரு போன்று நாமும், தீயவனின் முணுமுணுப்பைக் கேட்டு சோதனைக்கு உட்படும் போது, மறைப்பணிக்குத் தடைக்கற்களாக மாறுகின்றோம் என்று மறையுரையாற்றினார்.

நம் மனிதத் துன்பங்களோடு தம்மோடு நாமும் இணைய வேண்டுமென இயேசு கேட்கிறார் என்று கூறியத் திருத்தந்தை, கிறிஸ்துவின் மகிமையை அவரின் சிலுவையிலிருந்து பிரிக்க இயலாது என்று கூறினார்.

இத்திருப்பலியில் பாலியம் என்ற கழுத்துப் பட்டைகளை ஆசீர்வதித்த திருத்தந்தை திருப்பலியின் இறுதியில், புதிய பேராயர்களிடம் அவற்றைக் கொடுத்தார். கடந்த ஆண்டு யூன் முதல், இவ்வாண்டு யூன் வரை, இந்தியா உட்பட, உலகின் பல்வேறு நாடுகளில், முப்பது உயர்மறைமாவட்டங்களுக்கு பேராயர்களை நியமித்துள்ளார் திருத்தந்தை. பாலியம் என்பது முக்கிய திருவழிபாடுகளில் உயர்மறைமாவட்ட பேராயர்கள் கழுத்தில் அணியும் கழுத்துப்பட்டையாகும். இத்திருப்பலியில், பொலிவிய அரசுத்தலைவர், மெக்சிகோ, பாகிஸ்தான், ஈராக், மடகாஸ்கர் போன்ற நாடுகளின் முக்கிய அரசு பிரதிநிதிகள் கலந்து கொண்டு, திருத்தந்தையின் ஆசீரைப் பெற்றனர்.

உரோம் நகரில் மறைசாட்சிகளாகக் கொல்லப்பட்ட திருத்தூதர்கள் பேதுரு மற்றும் பவுல், உரோம் நகரின் பாதுகாவலர்கள் ஆவார்கள். இந்நாள், உரோம் மாநகருக்கு அரசு விடுமுறையாகும்.

## புனித சுவக்கின் அன்னம்மாள்




**மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்**

# புனிதர்களின் பாதையில்

**கன்னிமரியின் பெற்றோரான புனிதர்கள்**

இந்தப் பெயர்களை நற்செய்தி நூல்களில் நாம் காண்பதில்லை. கி.பி.165-ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாகக் கூறப்படும் "யாக்கோப்பின் முதல் நற்செய்தி" என்ற நூலில் இவற்றைக் காண்கின்றோம். இந்நூல் இறை ஏவுதலின் அடிப்படையில் காணப்படும் தொகுப்பைச் சாராதது. கி.பி.6-ஆம் நூற்றாண்டில் கொன்ஸ்தான்திநோபிள் நகரில் ஜஸ்டினியன் என்ற மன்னன் ஓர் ஆலயம் எழுப்பி அதைப் புனித அன்னாளின் ஆலயம் என அழைத்தார். இதற்கு 2 நூற்றாண்டுகளுக்குப் பின்னரே கீழ்த்திசைத் திருச்சபையில் புனித சுவக்கீனுக்குரிய பக்தி பரவலாயிற்று.

எபிரேய மொழியில் சுவக்கீன் என்ற சொல்லுக்கு "இறைவன் தயார் செய்கிறார்" என்பது பொருள். கன்னிமரியாவின் பெற்றோர் கலிலேயாவிலிருந்து ஜெருசலேமுக்கு வந்து சேர்ந்தனர் என்றும் அங்கே தங்கள் வாழ்நாள் முழுவதும் இருந்தனர் என்றும் கிறிஸ்தவ மரபு கூறுகிறது. அவர்களின் குழந்தையின் பெயர் மரியம் அல்லது மரி. இப்பெற்றோர் நீண்ட காலமாகப் பிள்ளைப் பேறு இல்லாமலிருந்து தங்கள் செபத்தின் பயனாகப் பெற்ற குழந்தைதான் மரியா.

இன்று சந்தனமாதா திருநாள் பல இடங்களிலும் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்படுவதை அறிவோம். மேலை நாடுகளில் இந்தத் திருநாள் தொடங்கப்பட்டு, இலங்கைக்கு இறக்குமதியாகி, அங்கிருந்து தமிழகத்துக்குப் பரவியதாகச் சொல்லப்படுகிறது.

இவர்கள் இருவரும் வாழ்ந்த வீட்டுமனையில், புனித எலேனா ஓர் ஆலயம் எழுப்பினார் என்று கூறப்படுகின்றது. நாளடைவில் முஸ்லீம்கள் இதனை ஒரு கல்விக் கூடமாக மாற்றிவிட்டார்கள். கி.பி.1889-ல் இவர்களின் கல்லறைகள் புதைகுழிகளாக ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டன. கீழைத் திருச்சபையில் இத்திருநாள் காலம் காலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. மேலைநாட்டுத் திருச்சபையில் இந்தத் திருநாள் 15-ஆம் நூற்றாண்டிலிருந்துதான் இடம் பெறுகின்றது.

**சிந்தனைக்கு**

"சுவக்கீனே! அன்னாளே! நீங்கள் பேறுபெற்றவர்கள். பாவத்தினின்று மிக உறுதியாக விடுதலை பெற்றவர்கள். உங்கள் வயிற்றின் கனியிலிருந்தே இதனைத் தெரிந்துகொள்ளலாம். நம் ஆண்டவர் கூறவில்லையா, அவர்களின் கனியிலிருந்து அவர்களை அறியலாம் என்று? உங்களின் நடத்தை இறைவனுக்கு உகந்ததாய் இருந்தது.

அத்துடன் உங்கள் வயிற்றிலுருந்து தோன்றவிருந்த கனிக்கு மிகப் பொருத்தமாகவும் உள்ளது. உங்கள் இருவரின் மாசற்ற, புனித வாழ்க்கையின் மரபில், கன்னிமையின் அணிகலனாகிய மரியை உலகிற்குக் கொணர்ந்தீர்கள். இவள் இறைவனை ஈன்றெடுக்கு முன்பும், ஈன்றபொழுதும், ஈன்றெடுத்த பின்னரும், ஒரே சொல்லில், முப்பொழுதும் கன்னியானவள்.

புனிதமானதும் ஒழுக்கத்தில் சிறந்ததுமான வாழ்க்கையை நீங்கள் வாழ்ந்து, வானதூதர்களுக்கும் மேலான ஒரு பெண்ணைப் பெற்றீர்கள். ஓ! ஆதாமின் செல்வக் குழந்தையே, இறைவனின் தாயே உம்மை ஈன்றெடுத்த பெற்றோர் வாழ்த்தப் பெறுவார்களாக. இப்பகுதி புனித தமாசீன் அருளப்பரின் விரிவுரையிலிருந்து எடுக்கப்பட்டது.

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### தந்தைக்கு



தாய் கருவினில் சுமந்தாள்
தந்தை தன் நெஞ்சினில் சுமந்தார்
வீட்டில் தந்தைக்கு முதலிடம் - என்
மனதிலும் தந்தைக்கே முதலிடம்

எட்டு வயதினிலே என் தந்தையே
அன்னையாக கரம் பற்றி
அன்னைக்குச் சமமாகவும் வழிநடத்தி
எம் நால்வரையும் அன்போடு வளர்த்தார்.



என் சிறுவயதினில்
அன்பை அமுதமாக ஊட்டி
நல்லொழுக்கங்களையும் எனக்குள்
விதையாக விதைத்தார் - என் அப்பா

பிள்ளைகள் கஷ்டப்படாமல் இருக்க
தம் வாழ்வையே அர்ப்பணித்தார்.
எனது ஈரொன்பது வருடமாக
என்னைப் பெற்று வளர்த்த - என் தந்தைக்கு
சமர்ப்பணம் இக் கவிதை.

### மீட்டு விடு தாயே



அன்னை அன்னை அன்னையவள்
அன்பின் இருப்பிடம் அன்னையவள்!
பத்து மாதம் சுமந்தவள்.
உதிரத்தை பாலாய் தந்தவள்.
பாசத்தை அள்ளிப் பொழிந்தவள்.
அன்பொழுக அணைத்தவள்
அன்புக்கு இனியவள் அன்னையவள்.



வசந்தத்தின் இருப்பிடம் நீ
விவிலியத்தின் பிறப்பிடம் நீ
வாழ்வின் அற்புதங்களை
அள்ளி தருபவளும் நீயே!
என் உயிருக்குள் வாழ்பவளே!
என்னை உறவுக்குள் வளர்ப்பவளே!
வாழ்வில் வசந்தத்தை அள்ளித் தருபவளே
ஓ.... மரியன்னையே!
உன் பாதத்தில் வாழ்ந்து கதறுகின்றேன்
துன்பத்தில் இருக்கும் என்னை மீட்டு விடு தாயே!

### கனவு



மேகத்தின் கனவு வானவில்
இரவின் கனவு நட்சத்திரங்கள்.
பூமியின் கனவு பூக்கள்
சூரியனின் கனவு நிலவு
கண்ணீரின் கனவு புன்னகை
வார்த்தைகளின் கனவு கவிதை
உண்மையின் கனவு பொய்
கடவுளின் கனவு இவ்வுலக மக்கள்
கனவு - கண்மூடிக் காணும் காட்சி
உறக்கத்தின் விழிப்பு
தூக்கம் போடும் புதிர்
ஆசைகளின் வர்ணப் படம்
காயங்கள் முகம் பார்க்கும் கண்ணாடி
நினைவுகளின் உளறல்
சொர்க்கத்தின் வாயில்
நமக்கு நாமே பேசும் புரியாத மொழி.
மரபு இலக்கணம் வெறுத்த மனம் எழுதும் புதுக்கவிதை.
கனவு பொய்யல்ல அது உண்மையின் தோற்றம்.
அங்கே தான் மனிதன் தன் நாடக வேடங்கள்
அனைத்தையும் களைத்து விட்டு நிஜமாக இருக்கிறான்.
கனவுகளே நம்மைக் காத்து நமக்கு சிறகுகள்
தந்து நமது வாழ்வுக்கு வர்ணம் தீட்டுகின்றன.
வாருங்கள்! கனவுகளால் வாழ்கிறவர்களை
வாழ்த்துவோம். கனவுகளில் வாழ்கிறவர்களுக்காக
அனுதாபப்படுவோம்.

### துன்பம் வழிகாட்டும்



வாழ்க்கை என்றால் என்ன என்பதை
அறிய வைத்தது துன்பம்.
இயேசுவின் பாடுகளை - நான்
உணர வைத்தது துன்பம்.
இறைவார்த்தையை நாளும் கற்றிட வைத்தது துன்பம்.
கேட்பவர் நல்லவர் என்று
அறிந்திட வைத்தது துன்பம்.
அடுத்தவர் வேதனையை புரிந்திடும்
அறிவினைத் தந்தது துன்பம்.
உயிர்த்த இயேசுவை நான்
அன்பு செய்ய வைத்தது துன்பம்.




# மருத்துவக் குணங்கள் நிறைந்த இஞ்சி



- ♦ இஞ்சி சாறை பாலில் கலந்து சாப்பிட, வயிற்று நோய்கள் தீரும். உடம்பு இளைக்கும்.
- ♦ இஞ்சி துவையல் பச்சடி வைத்து சாப்பிட, மலச்சிக்கல், களைப்பு மார்பு வலி தீரும்.
- ♦ இஞ்சி சாற்றில், வெல்லம் கலந்து சாப்பிட, வாதக் கோளாறு நீங்கி பலம் ஏற்படும்.
- ♦ இஞ்சியை புதினாவோடு சேர்த்து துவையலாக்கி சாப்பிட, பித்தம், அஜீரணம், வாய் நாற்றம் தீரும், சுறுசுறுப்பு ஏற்படும்.
- ♦ இஞ்சியை துவையலாக்கி சாப்பிட, வயிற்று உப்புசம் இரைச்சல் தீரும்.
- ♦ காலையில் இஞ்சி சாற்றில் உப்பு கலந்து மூன்று நாட்கள் சாப்பிட, பித்த தலைச்சுற்று, மலச்சிக்கல் தீரும். உடம்பு இளமை பெறும்.
- ♦ பத்து கிராம் இஞ்சி, பூண்டு இரண்டையும் அரைத்து ஒரு கப் வெந்நீரில் கலந்து காலை, மாலை இரண்டு நாட்கள் சாப்பிட, மார்பு வலி தீரும்.
- ♦ இஞ்சி சாறோடு தேன் கலந்து சூடாக்கி காலையில் வெறும் வயிற்றில் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வெந்நீர் குடித்துவர, தொந்தி கரைந்து விடும்.
- ♦ இஞ்சி சாற்றில் எலுமிச்சை சாறு கலந்து சாப்பிட, நல்ல பசி ஏற்படும்.
- ♦ இஞ்சி, மிளகு இரண்டையும் அரைத்து சாப்பிட, ஜீரணம் ஏற்படும்.
- ♦ இஞ்சியை வதக்கி, தேன், நீர் விட்டு கலக்கி கொதிக்க வைத்து அந்நீரை காலை, மாலை குடித்துவர, வயிற்றுப் போக்கு தீரும்.
- ♦ இஞ்சியை அரைத்து நீரில் கலந்து தெளிந்தபின், நீரை எடுத்து, துளசி இலை சாறை சேர்த்து ஒருகரண்டி வீதம் ஒரு வாரம் சாப்பிட, வாய்வுத் தொல்லை நீங்கும்.
- ♦ இஞ்சி சாறில், தேன் கலந்து தினசரி காலை ஒரு கரண்டி சாப்பிட்டு வர, நோய் தடுப்பு திறன் கூடும், உற்சாகம் ஏற்படும், இளமை பெருகும்.
- ♦ இஞ்சி சாறுடன் வெங்காய சாறு கலந்து ஒரு வாரம் காலையில் ஒரு கரண்டி வீதம் குடித்துவர, நீரிழிவு குறையும்.
- ♦ இஞ்சி சாறு, எலுமிச்சை சாறு, வெங்காய சாறு மூன்றையும் கலந்து ஒருவேளை அரை அவுன்ஸ் வீதம் சாப்பிட்டுவர, ஆரம்ப கால ஆஸ்துமா, இரைப்பு, இருமல் குணமாகும்.

# கொஞ்சம் சிரிங்க



**கணவன்:** ஏன் மரக்கறி கடையில அம்புலன்ஸ் நிக்கிது?
**மனைவி:** அது வேறொன்றும் இல்லை, மரக்கறி விலையைக் கேட்டு நிறையப்பேர் மயங்கிட்டாங்களாம் அதுதான்!

..................................

**அப்பா:** டேய் செடிகளுக்கு தண்ணீர் ஊத்துடா.
**மகன்:** மழை பெய்துகொண்டு இருக்குதப்பா.
**அப்பா:** அதற்கென்ன குடையைப் பிடித்துக்கொண்டு ஊத்து.
**மகன்:** அப்பா, உங்கட மண்டைல களிமண் நிறையவே இருக்குதுனு எனக்கு இண்டைக்குத்தான் தெரியும்.

..................................

**கணேஸ்:** ரவி நீ ஏன் மீன் சாப்பிடுகிறது இல்லை?
**ரவி:** முள்ளுக் குத்தும் அதனால்தான்.
**கணேஸ்:** அப்ப செருப்பு போட்டுக்கொண்டு சாப்பிடலாம் தானே!

..................................

**நீதிபதி:** பார்த்தா அப்பாவியா தெரியிறாய்?
நீயா பிக்பொக்கெட்? நம்பவே முடியலையே?
**குற்றவாளி:** உங்களை மாதிரித்தாங்க எல்லோரும் ஏமாந்துடறாங்க...
**நீதிபதி:** ???

..................................

**மனைவி:** ஏங்க, நீங்க எனக்காக என்ன கட்டுவீங்க?
**கணவன்:** உனக்காக உன் தங்கைக்கு தாலி கட்டுவேன்.

**டாக்டர்:**உங்களுக்கு வந்திருக்கிறது என்ன வியாதின்னு தெரியல.
**பேஷண்ட்:** அப்படின்னா நீங்களே அதுக்கு நல்லதா ஒரு பெயர் வச்சிடுங்க டாக்டர்.

..................................

**நபர்1 :** உங்கள் மனைவி, ஏன் எப்போதும் கோபமாகவே இருக்கிறாங்க?
**நபர்2:** கோபத்தில் கூட நீ அழகா இருக்கிறாய் என்று ஒரு நாள் தெரியாமல் சொல்லிட்டேன் அதுதான்.
**நபர்1:** ???

..................................

**நோயாளி:** டாக்டர், என் வயித்துக்குள்ளே ஏதோ சத்தம் வருது.
**டாக்டர்:** ஐயையோ என் செல்போனை உள்ளே வைச்சிட்டேனோ...?

..................................

**நீதிபதி:** பட்டப் பகல்ல ஏன் திருடினாய்?
**திருடன்:** தொழில்னு வந்துட்டா ராத்திரி, பகல்னு பார்க்க முடியுமா... எஜமான்!

# மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!



மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவைச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். நன்றி!

**- மன்னா நிர்வாகம்.**

# மன்னா விளம்பரப் பலகை

மற்றவர்களிடம் பழகும் விதத்தையும், ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக் கொண்டானானால் அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.

எவராவது தான் தன்னுடைய வாழ்நாளில் ஒரு பிழையும் செய்ததில்லை என்று நினைத்தால், அவர்கள் தாம் தம் வாழ்வில் புதிய முயற்சிகளை செய்து பார்த்ததில்லை என்று பொருள்.

..........................

நீ தனிமையில் இருக்கும் போது உனக்கு என்ன தோன்றுகிறதோ அதுதான் உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும்.

..........................

துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்து விடு. ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்து விடாதே!

பேசவேண்டிய நேரத்தில் அமைதியாக இருந்துவிட்டால் அமைதியான நேரத்தில் நிம்மதியாக இருக்க முடியாது.

யார் ஒருவன் தனக்கு உள்ள கௌரவமும், மரியாதையும் போய் விடும் என்று பயந்தபடி இருக்கிறானோ, அத்தகையவன் அவமானத்தைத்தான் அடைகின்றான்.

..........................

நாம் நம்மால் முடியாது என்று நினைக்கும் செயல்களை, யாரோ ஒருவர் எங்கோ ஓர் இடத்தில் அதை செய்து கொண்டு தான் இருக்கிறார் என்பதை மறந்து விடாதே.

..........................

மூச்சு விட்டுக் கொண்டிருப்பவன் எல்லாம் மனிதன் இல்லை, அந்த மூச்சிருக்கும் வரை முயற்சி செய்து கொண்டிருப்பவனே மனிதன்.

இதயம் சொல்வதை செய், வெற்றியோ தோல்வியோ.... அதை தாங்கும் சக்தி அதற்கு மட்டும்தான் உண்டு!!

# சமையல் குறிப்பு

## பேரீச்சம்பழ உருண்டை

### தேவையானவை:



பேரீச்சம்பழம் - 1 கிலோ
சீனி - 1/4 கிலோ
தேங்காய் - 1
கோதுமை மா - 1/4 கிலோ
தேங்காய் எண்ணெய் - 1/2 லீற்றர்
மஞ்சள் தூள் சிறிது.



### செய்முறை :

முதலில் பேரீச்சம்பழத்தை விதை நீக்கி அரைக்கவும். தேங்காய்ப் பூவை பொன்னிறமாக வறுக்கவும். அதனுள் சீனியையும் கலந்து பின்பு சிறு சிறு உருண்டைகளாகப் பிடித்து, மாவிற்குள் சிறிது மஞ்சள் தூளைக் கலந்து பதமாகக் கரைத்து அதற்குள் உருண்டையாகப் பிடித்த பேரீச்சம்பழக் கலவையைத் தோய்த்துப் பொரித்து எடுக்கவும். பின்பு பரிமாறவும்.

# குடும்பம் இறை அழைத்தலின் விளைநிலம்

- அருட்திரு. S. ஜோசப் செல்வராஜ் -

"நிலத்தில் கிடந்தமை கால்காட்டும், காட்டும் குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்" (குறள் 959) என்றார். நிலத்தின் தன்மையை அதிலிருந்து கிளம்பும் முளை காட்டும். பிறந்த குலத்தின் அதாவது குடும்பத்தின் தன்மையை ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் காட்டிவிடும் என்கிறார். இதன் மூலம் குடும்பத்தின் மாண்பையும் இதிலிருந்து இறையழைத்தலின் சிறப்பையும் காண்போம்.



### இறைவனும் குடும்பமும்

படைத்தவராகிய கடவுள் தம் படைப்பாகிய உலகின் மீது கொண்டுள்ள அதே அன்பு தான் குடும்பத்திற்கும் ஊற்றாக உள்ளது. இது யோவான் நற்செய்தியில் "தொடக்கத்தில் வாக்கு இருந்தது, அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது" (1:1) என இறைவன் அருமையாக உறுதிப்படுத்தியுள்ளார். "தம் ஒரே மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:16) "கடவுளினின்று கடவுளும் ஒளியினின்று ஒளியும், தந்தையோடு ஒரே பொருளும் ஆகிய தம் ஒரே மகன் மனித வரலாற்றில் தோன்றியது குடும்பத்தின் வழியாகவே கிறிஸ்து தம் திருவுளப்படி ஒரு குடும்பத்திலிருந்தே பிறந்து செயல்படத் தொடங்கினார். தம் வாழ்நாளில் பெரும் பகுதியை நாசரேத்தில் அறியப்படாதவராகவே கழித்தார். தம் வளர்ப்புத் தந்தை யோசேப்புக்கும் தம் தாயாகிய மரியாளுக்கும் அவர் கீழ்ப்படிந்திருந்தார். (லூக் 2:51)

வார்த்தை மனு உரு ஏற்றார் என்னும் மறை பொருள் மனித குடும்பத்துடன் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது எனலாம். இந்தத் தொடர்பினால் நாசரேத்தில் உள்ள சூசை, மரியா எனும் ஒரு குடும்பத்துடன் மட்டுமன்று, உலகில் உள்ள எல்லாக் குடும்பத்துடனும் தொடர்பு கொண்டிருந்தார். பணிவிடை புரிவதற்கே உலகிற்கு வந்தேன்" (மத்தேயு 20:28) கிறிஸ்துவைப் பின்பற்றித் திருச்சபையும் குடும்பத்துக்கு ஊழியம் புரிவதைத் தன் முக்கிய பணியில் ஒன்றாகக் கருதுகின்றது. ஆகவே, தந்தை, மகன், தூய ஆவியே உலகில் உள்ள எல்லாக் குடும்பங்களிலும் மிகச்சிறந்த குடும்பம். இந்தக் குடும்பத்தில் இருந்து தான் மகனாகிய இயேசுகிறிஸ்து மனிதனாகப் பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கிறிஸ்துவின் அன்புப் பணியில் குடும்பம்

திருச்சபை என்பது இறைவாக்குரைக்கின்ற, குருத்துவப் பண்புடைய, அரசப்பணி புரிகின்ற மக்கள் சமூகமேயாகும். கிறிஸ்தவக் குடும்பம் ஆவியின் புதிய சட்டத்தால் உயிரூட்டப்பெற்று வழிநடத்தப்படுகின்றது. அதே நேரத்தில் அரசகுலமாகிய திருச்சபையோடு நெருங்கிப்பிணைந்து தன் அன்புப் பணியை இறைவனுக்கும் சகோதரருக்கும் புரிய அது அழைக்கப்படுகின்றது. மனிதருக்குப் பணிபுரிவதன் வழியாகவே கிறிஸ்து தமது அரச அதிகாரத்தைச் செயற்படுத்துகின்றார். அதுபோல தன் ஆண்டவருக்கே உரித்தான அரச மாண்பில் பங்கேற்பதன் உண்மைப் பொருள் என்னவென்பதைக் கிறிஸ்தவன், ஆண்டவர் மனிதர் மட்டில் கொண்டிருந்த பணி மனப்பான்மையில் பங்கேற்பதன் வழியாகவே கண்டுகொள்கின்றான். "உடலின் இச்சைகளுக்கு உங்களைக் கீழ்ப்படியச் செய்யும் பாவம் சாவுக்குரிய உங்கள் உடலின் மீது ஆட்சி செலுத்த விடாதீர்கள். (உரோ 6:12)

தம் சீடர்களும் அரச சுதந்திரம் கொண்டவர்களாய் தம் ஒறுத்தலாலும், புனித வாழ்வாலும் தம்மில் பாவத்தின் ஆட்சியை வெல்லவும் தம் அயலாரில் கிறிஸ்துவுக்குப்பணி செய்து தாழ்ச்சியுடனும் பொறுமையுடனும் தங்கள் சகோதரர்களையும் கிறிஸ்துவிடம் கூட்டிவர இந்த ஆணையுரிமையை அவர்களுக்கு வழங்கினார். கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதே ஆள்வதாகும்.

ஆண்டவர் தமது அரசைப் பொதுநிலையினரின் மூலமாகவும் பரப்ப விரும்புகின்றார். இவ்வரசு உண்மையின் அரசாகும். இந்த அரசில் இறைவனில் பிள்ளைகளுக்குரிய மாட்சிமிகு சுதந்திரத்திற்குப் படைப்பனைத்தும் அழிவின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்படும்.

"கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு வாழ்வுதரும் தூய ஆவியின் சட்டம், பாவம், சாவு என்பவற்றுக்கு உள்ளாக்கும் சட்டத்தினின்று என்னை விடுவித்துவிட்டது" (உரோ 8:2)

ஆகவே கிறிஸ்தவக் குடும்பம் அன்பினால் திருச்சபையைக் கட்டியெழுப்புகின்றது, அதே சமயத்தில் மனிதருக்கும், உலகுக்கும் பணிபுரியத் தன்னையே அர்ப்பணிக்கின்றது.

குடும்பத்தின் இன்னொரு பணி என்னவென்றால், அன்பைச் செயல்படுத்த அது மனித ஆள்களை உருவாக்க வேண்டும். பிறரோடு கொள்ளும் எல்லா உறவுகளிலும் அன்பைச் செயற்படுத்த வேண்டும். இவ்வாறு செய்யும் போது, குடும்பம் தன்னிலேயே அடைபட்ட ஒன்றாக இராமல், சமூகத்திற்கு உகந்ததாக இருக்கும். அதாவது நீதியுணர்வாலும் பிறர் மட்டில் கொள்ளும் அக்கறையாலும் உந்தப்பட்டு, சமூகம் அனைத்தின் மட்டிலும் தனக்குள்ள பொறுப்பை உணர்ந்ததாகக் குடும்பம் செயற்படும்.

### கிறிஸ்தவக் குடும்பத்தின் உரிமை

ஒவ்வொரு குடும்பமும் தன்னகத்தே ஓர் அழைப்பு இருப்பதை உணர்கின்றது. இந்த அழைப்பு புறக்கணிக்கப்பட இயலாத குடும்பத்தின் மாண்பையும் பொறுப்பையும் வரையறுப்பது. "குடும்பமே! உன் உண்மை நீதியை நீ அடைந்திடுக" என்பதே இவ்வழைப்பு.

குடும்பத்தின் உள்ளார்ந்த தன்மையும் பணிப்பொறுப்புகளும் அன்பாலே வரையறுக்கப்படுகின்றன எனலாம். ஆகவே தான் குடும்பம் அன்பைப் பாதுகாக்கின்ற, அன்பை அறிக்கையிடுகின்ற, அன்பைப் பகிர்ந்து கொள்கின்ற பணிப்பொறுப்பைப் பெறுகின்றது.

குடும்பம் என்பது ஆள்நிலை சார்ந்த உறவுச் சமூகமாகும். இந்தச் சூழ்நிலை உறவுகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உறவு, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமுள்ள உறவு, உற்றார் உறவினரோடு உள்ள உறவு ஆகும்.

இந்த உறவின் அடித்தளம் அன்பே, அந்த உறவு ஒன்றிப்பில் ஆண்டவர் இயேசுவின் பிளவுபடா மறையுடலாகத் திருச்சபை உருவாக்குகின்ற சீரிய ஒற்றுமைப் பண்பின் உயிருள்ள பேருண்மை வாய்ந்த சாயலாக இருக்கின்றது.

குடும்பத்தின் முக்கியப் பணி உயிரைப் பேணுவதாகும். அதாவது மக்கட்பேறு வழியாகத் தலைமுறை தலைமுறையாக இறைச் சாயலை வழங்குவதன் மூலம், படைத்தவர் அளித்த முதல் ஆசியை வரலாற்றுக் காலப்போக்கில் செயற்படுத்துவதில் இப்பணி அடங்கும்.

திருப்பாடல் (127:3,4) இல் "பிள்ளைகள், ஆண்டவர் அருளும் செல்வம், மக்கட்பேறு, அவர் அளிக்கும் பரிசில், இளமையில் ஒருவருக்குப் பிறக்கும் மைந்தர் வீரரின் கையினுள்ள அம்புகளுக்கு ஒப்பானவர்" என்று குடும்பத்திற்கு உள்ள உயிரைப் பேணுகின்ற பணியின் முக்கியத்துவத்தை எடுத்து இயம்புகின்றது.

### சமூகப்பணியில் குடும்பத்தின் பங்கேற்பு

குடும்பங்கள் "சமூகத்தின் உயிரூட்டமான முதல் உயிரணு" சமூகத்தின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் உயிராகவுள்ள சமூக நற்பண்புகளைப் பயில்கின்ற முதல் பள்ளிக்கூடமும் குடும்பம் தான்.

பேதுரு தம் முதல் திருமுகத்தில் மூன்றாவது அதிகாரத்தில் சமூகத்தில் குடும்பங்கள் சிறப்பாக வாழ உதவக் கூடிய பண்புகளைச் சுட்டிக்காட்டுகின்றார். இரக்கம், அன்பு, பரிவுள்ளம், மனத்தாழ்ச்சி, ஆசிகூறுதல், நேர்மை, மரியாதையோடு நடக்கும் பண்புகள் ஆகும்.

மேற்குறிப்பிட்டுள்ள பண்புகளுடைய குடும்பம் நல்லதொரு சமூகத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. சுருங்கச் சொல்லின் குடும்பத்தின் உரிமைகள் என்று சொல்லப்போனால்.

01. குடும்பம் தன்னைச் சார்ந்த வளர்ச்சியின் உரிமை

02. மனித உயிரை வழங்கவும், பிள்ளைகளுக்குக் கல்விப்பணி அளிக்கவும் உரிமை

03. மதச் சுதந்திர உரிமை

04. நமது குழந்தைகளை அனைத்துத் துறைகளிலும் பயிற்றுவிக்க உரிமை (மரபு, சமய பண்பாடு ...)

05. ஏழைகளுக்கும், பணியாளர்களுக்கும் சமூக, அரசியல், பொருளாதாரப் பாதுகாப்பைப் பெறுவதற்குக் குடும்பத்திலுள்ள உரிமை.

06. தன் வாழ்க்கை நிலையை முன்னேற்றும் பொருட்டு குடும்பமாகவே இடம் பெயர்ந்து வேறிடத்தில் குடியேறுவதற்குக் குடும்பத்திலுள்ள உரிமை.

மேற்குறிப்பிட்டுள்ள உரிமைகள் ஒரு குடும்பத்தின் இன்றியமையாத கூறுகள்.

### குடும்பத்தின் மூலம் இறைப்பணி

குடும்பம் என்பது தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டதுபோல நல்ல விளைநிலமாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் திருச்சபைப் பணிக்கு நல்ல முத்துகளை அளிக்க முடியும். கிறிஸ்துவக் குடும்பம் இயேசு கிறிஸ்துவினுடையவும் அவரது திருச்சபையினுடையவும் குருத்துவ இறைவாக்குரைத்தல் துலங்கி நிற்கிறது.

மேற்குறிப்பிட்ட மூன்று கூறுகளைக் கொண்டிருப்பினும் ஒரே அமைப்பாகத் துலங்கும் உள்ளடக்கத்தை இறைவாக்கினரும் குருவும் அரசருமாக விளங்கும் இயேசுவோடு தொடர்புபடுத்திக் கீழே காண்போம். கிறிஸ்தவக் குடும்பம் கீழ்வரும் வகைகளில் விளக்கப்படும்,

01. விசுவசித்து நற்செய்தி அறிவிக்கும் சமூகம்,

02. இறைவனோடு உரையாடும் சமூகம்,

03. மனிதருக்குப் பணிபுரியும் சமூகம்.

கிறிஸ்தவக் குடும்ப இறைவாக்கை ஏற்று அறிக்கையிடுவதன் மூலம் தனது இறைவாக்குரைக்கும் பணியை நிறைவேற்றுகிறது. ஆகவே குடும்பம் சிறப்பாக அமைந்தால் அங்கே துறவற வாழ்வு மலரும்.

குடும்ப வாழ்வும், துறவற வாழ்வும் திருச்சபைத் தாயின் இரு கண்கள், இவைகளில் எது பழுதடைந்தாலும் திருச்சபை பழுதடையும் என்பதில் ஐயமில்லை, நல்ல இல்லறம் தான் நல்ல துறவறத்திற்கு வித்திடும். நல்ல துறவறம் தான் நல்ல இல்லறத்தை மலரச் செய்யும். ஆகவே குடும்பமே அடித்தளம். குடும்பமே நல்ல விளைநிலம். இதிலிருந்து உருவாவதே நல்ல முத்து. ஆகவே குடும்பமே இறை அழைத்தலின் விளைநிலமாகும்.

---

## புனித யோசவ்வாஸ் ........

07ஆம் பக்கத் தொடர்ச்சி

இதை அறியவந்த யோசவ்வாஸ் அடிகளார் அம்மக்கள் மேல் இரக்கம் கொண்டு மிகுந்த முயற்சிகளைச் செய்து பணம் செலவிட்டு அநேகம் பேரை மீட்டுள்ளார். இப்படியாக மீட்கப்பட்டவர்களில் பெண்கள், ஆண்கள பலர் அடங்குவர். இவ்வாறு யோசவ்வாஸ் அடிகளார் செயலாற்றியதற்கான காரணம் உடல்சார்ந்த நலன்களுக்காக அல்லாது ஆன்மாக்கள் மீட்புப் பெறவேண்டுமென்னும் ஆவலினாலேயே.

### கிறிஸ்தவத்திலிருந்து விலகிய மக்களை மீண்டும் தேடினார்.

கிறிஸ்தவத்தை விட்டு விலகிய வேற்று மதவழிபாடுகளில் பங்குகொண்டு வந்த கிறிஸ்தவர்கள் பலரை மனம் மாற்றி மீண்டும் கிறிஸ்தவர்களாக்க அடிகளார் மேற்கொண்ட கடினமான முயற்சிகள் ஏராளம் என்று சொல்லலாம். எடுத்துக்காட்டாக ஓர் சம்பவத்தை இங்கு எடுத்துச் சொல்லலாம்.

முன்பு கிறிஸ்தவனாக இருந்த ஒருவன் அரச உதவி பெற்றவனாகவும், கௌரமுள்ளவனாகவும் இருந்து வந்தான். கிறிஸ்தவர்களோடு உள்ள உறவிலிருந்து பிரிந்து சென்று பிற மதத்தினரோடு சேர்ந்து அவர்களுடன் குடிவேறியில் வாழ்ந்து வந்தான். தான் முன்னர் கிறிஸ்தவனாக இருந்ததை மறுதலித்தான். யோசவ்வாஸ் அடிகளார் அவனையும் குடும்பத்தினரையும் நல்வழிப்படுத்த முயற்சிகள் எடுத்தார். அவனோ அதற்கு இணங்காதவனாக இருந்தான். தன்னையும் தன் குடும்பத்தவர்களையும் தொடர்ந்து பின்வந்தால் கொலை செய்வதாகவும் எச்சரித்து வந்தான். ஆனால் அடிகளார் ஆன்மாக்களை மீட்கும் பணியில் தன் உயிரை இழப்பதற்கு சிறிதும் தயங்காதவர்.

ஒரு நாள் யோசவ்வாஸ் அடிகளார் காணாமல் போன ஆட்டைத்தேடிச் சென்ற ஆயன் போன்று அந்த மனிதனின் வீட்டுக்குச் சென்று அவனை சந்திக்க காத்திருந்தார். அடிகளாரைக் கண்டதும் அவன் மனங்குழம்பினான். அடிகளாரை அறியாதவன் போல நடந்து கொண்டான். பின்பு அடிகளார் தான் தூரவழி நடந்து களைத்துள்ளதாகவும் இக் கிராமத்தில் கிறிஸ்தவருடைய வீடு இருப்பதை அறிந்து இங்கு தங்கிச் செல்வதற்கு வந்ததாகவும் கூறினார்.

அம்மனிதனோ தான் ஒருபோதும் கிறிஸ்தவனாக இருந்ததில்லை என்றும் தான் அனுசரிக்காத மதத்தின் குருவுக்கு தன் வீட்டில் விடுதி கொடுப்பதில்லை என்றும் கூறி உடனடியாக வீட்டைவிட்டு வெளியேறி விடவேண்டுமென்றும் எச்சரித்தான். அடிகளார் சற்றும் பயப்படாதவராக கடவுளில் நம்பிக்கை கொண்டவராக அவ்வீட்டிலேயே தங்கினார். ஊரார் இதனை அறியவந்தனர். இதனால் கடுங்கோபம் கொண்டு அம் மனிதன் அடிகளாரை கடும் சொற்களால் திட்டி அவமதித்தான். அடிகளாரோ மிகவும் சாந்தத்துடன் அவனை நோக்கி ஆன்மாக்களின் பேரில்கொண்ட இரக்கத்தால் மீட்புக்கான வழிகளை காண்பிக்க வந்ததாக பரிவோடு எடுத்துரைத்தார். அநேக நாட்கள் அங்கேயே தங்கி இருந்து பசி, தாகம் பாராது அம்மனிதனும், குடும்பத்தினரும் மனம் மாற்றம் பெறவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து வந்தார். ஈற்றில் அம்மனிதனும் அவன் குடும்பத்தினரும் மனம்மாறி தமது வாழ்வை மாற்றிக் கொண்டார்கள். இவ்வாறாக அடிகளார் தொலைந்து போன ஆடுகளான கிறிஸ்தவர்களை தேடி மீட்டு இறைவன் மறையில் மீண்டும் கொண்டுவரலானார்.

பலவகையான வேலைகளில் யோசவ்வாஸ் அடிகளார் நேரத்தைச் செலவளித்தாலும் ஆண்டவரின் வார்த்தையை பிறருக்கு எடுத்துச் செல்லுவதற்கும் தேவ உண்மைகளைப் படிப்பதற்கும் தவறுவதில்லை. "இறைவார்த்தையை அறிவிக்க, வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் நீ கருத்தாயிரு" என்று கூறும் பவுலின் வார்த்தைக்கு ஏற்ப யோசவ்வாஸ் அடிகளார் தம்மிடம் பிச்சைக்கு வருகிற ஏழை மக்களுக்கும் செபிக்க கற்றுக் கொடுப்பார். கிறிஸ்தவ மறையை கற்றுக் கொடுப்பார். இந்த நல்ல வழக்கத்தை உண்டாக்கிய பெருமை அடிகளாரையே சாரும்.

அவருடைய இரக்க செயல்களினதும் நற்கிரிகைகளினதும் புகழ் எங்கும் பரவியதால் அவரைக் காண்பதற்காகவும் அவரது போதனையை கேட்பதற்காகவும் மக்கள் பலர் அவரிடம் வந்தனர். அவருடைய போதனைகள் கல்லான, கடின இதயம் கொண்டவர்களையும் மெழுகுபோல உருக்கிவிடும் வல்லமையுடையதாக விளங்கியது. "கலப்பையில் கைவைத்த பின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல" என்ற இயேசுவின் அறிவுரைப்படி யோசவ்வாஸ் அடிகளார் இறைவனின் பணியில் தன்னை முழுமையாக கையளித்தார். தாய், தந்தை, சகோதரர், உற்றார், உறவினர் என்ற இரத்த உறவினரோடு உறவைப் பேணிக்கொள்வதை பொருட்படுத்தாது முற்றும் துறந்த ஒருவராகத் தம்மை இறைவனின் ஊழியத்திற்கு கையளித்தார். அவரது பணி வாழ்வு இலங்கை வாழ் மக்களுக்கும் பணியாளர்களுக்கும் ஒளியாக விளங்க இறைவன் அருள்புரிவாராக.

---

## சுதேச குருக்கள், துறவியர் தினம்
## அப்போஸ்தலரான புனித பேதுரு சபை

1889ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் சென் நகரில் ஜான் பீகார் என்ற பெண்மணியால் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் இறையரசைக் கட்டியெழுப்ப ஒளியாகத் திகழவேண்டிய குருக்களையும், துறவற சபையினரையும் பயிற்றுவித்து உருவாக்கவும், இவர்கள் வாழ்வை வளப்படுத்த தேவையான சகல குருக்களை உருவாக்கவும், செபத்தாலும், பரித்தியாகத்தாலும் ஒத்துழைப்பை வழங்கி, திருச்சபைக்கு உதவிக்கரத்தை நீட்டுவதே அதன் நோக்கமாகும்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.192

## தானியேல் (அதிகாரம் 1 முதல் 12 முடிய)

உங்கள் விடைகளை ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | | 03 | | | ❖ | 04 | | | |
| | | 05 | | | 06 | | | 07 | ❖ | |
| | 08 | ❖ | 09 | | | | 10 | | | |
| | | 11 | | | | | | | | |
| | | | ❖ | 12 | | | ❖ | | | |
| | | | | | | | 13 | | | |
| 14 | | | | | | | | | 15 | |
| | | | | 16 | | | | | | |
| | | ❖ | | | | | 17 | | | |
| | 18 | | 19 | | | | ❖ | 20 | | 21 |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. அவ்வாறு ஒருவன் ........................ வெட்டிக்கொண்டிருந்தபோது அவனது கோடரி கழன்று தண்ணீரில் விழுந்தது.
4. இன்றுவரை அப்படியேதான் ......................... பட்டு வருகிறது.
5. பின்பு அவர் இளவரசனை வெளியே கூட்டிவந்து அவனுக்கு முடி ................................... உடன்படிக்கைச் சுருளை அளித்தார். (2வது எழுத்து 3வதாக நிற்கிறது.)
9. அவன் மீண்டும் அவர்களுக்குக் கீழ்க்கண்டவாறு மற்றொரு ................................ அனுப்பினான்.
11. எனவே அரசன் யோராம் உடனே இஸ்ரயேலர் அனைவரையும் ............................ ஒன்று திரட்டினான்.
12. ஆண்டவரின் திருமுன் தன் வாழ்நாள் முழுவதும் ..............................யாய் நடந்து வந்தான்.
16. ஏனெனில் அவர்தம் மைந்தராம் குல ................................ எந்நாளும் காப்பதாக அவளுக்கு வாக்களித்திருந்தார்.
19. உன் புதல்வர்கள் இஸ்ரயேலின் ..............................யில் நான்காம் தலைமுறைவரை வீற்றிருப்பர்.

### மேலிருந்து கீழ்

1. அங்கு அவர்களோடு ......................... செய்துகொண்டார்.
2. அவர்களில் ............................ வரத்தவறக்கூடாது.
6. ஏகு தன் மூதாதையருடன் ............................. கொண்டான். (2வது எழுத்து 1வது எழுத்துக்கு மேலே உள்ளது)
7. அது ......................... மகன் ஏகூவைப் போன்றுள்ளது.
8. நீ போய் ........................விற்று உன் கடனைத் தீர்த்துவிடு.
11. அவளைச் ............................ உடனே விரைந்து செல்.
12. ................................ நாபோத்தின் இரத்தத்தையும், அவன் பிள்ளைகளின் இரத்தத்தையும் கண்டேன்.
14. இங்கே ................... அடியார்கள் மட்டுமே இருக்க வேண்டும்.
15. அவன் தன் தலைவரிடம் வந்து அவர்முன் ..........................

### வலமிருந்து இடம்

2. இஸ்ரயேல் அரசனுக்கு .......................... நம்மிடையே ஒருவன் இருக்கிறான்.
3. ஆண்டவரின் இல்லத்தைப்பழுது பார்த்த வேலையாள்களுக்காக மட்டுமே அது பயன்படுத்தப்.................... (3வது எழுத்து 4வதாக நிற்கிறது.)
7. அங்கே ...................... கதவைத் திறந்துகொண்டு ஓடி வந்துவிடு.
10. ஏனெனில் அவன்தன் தந்தை செய்து வைத்திருந்த ........................ சிலைத் தூணை அகற்றிவிட்டான்.
13. ஆண்டவர் என்னை ....................... நகருக்கு அனுப்பியுள்ளார்.
15. இவ்வாறு கணக்கிடப்பட்ட பணத்தை ஆண்டவரின் இல்லத்தில் பணியைக் கண்காணிக்குமாறு .....................ப் பட்டவர்களிடம் கொடுத்தனர்.
17. அசாவேல் அவனுக்குப் ........................... அரசனானான்.
19. தூதன் ஒருவன் அவனிடம் வந்து .................................. மைந்தர்களின் தலைகளைக் கொண்டுவந்திருக்கின்றனர் என்றான்.

### கீழிருந்து மேல்

6. யோராம் தம் மூதாதையரோடு ............................ கொண்டு தாவீதின் நகரில் அடக்கம் செய்யப்பட்டான்.
8. "ஆண்டவர் இன்று உம் தலைவரை உம்மிடமிருந்து ..........................க் கொள்ளப்போகிறார் என்பது உமக்குத் தெரியுமா"? (3ம் 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.)
12. இங்கே எஞ்சியுள்ள இஸ்ரயேலர் அனைவருக்கும் நேரிடுவதே அவர்களுக்கும் ..........................
15. பின்னர் அவர்கள் நகர்களைத் தகர்த்து எல்லா நல்ல .......................... மீதும் ஆளுக்கு ஒரு கல் வீசி நிரப்பினர்.
18. .....................ம் பேசுவதற்கு நீ யார்?
19. "கடவுளின் ............................. விரைவாய் கீழே இறங்கிவாரும்.
20. அவனைப் பின்தொடர்ந்து வரும் அவன் தலைவனின் ........................ ஓசையும் கேட்கிறதல்லவா?
21. இவ்வாறு அவன் ........................... பெற்று அரசனானான்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 190
### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
E. கொன்சி,
பெரிய பண்டிவிரிச்சான்,
மடு.



**இரண்டாம் பரிசு:**
A. றெபேக்கா,
முருங்கன் பிட்டி,
முருங்கன்.

**மூன்றாம் பரிசு:**
M. டிலைக்சினி,
தாழ்வுபாடு வீதி,
மன்னார்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 63 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 190ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. E. ஒபிவியன்சி, சாவற்கட்டு, மன்னார்.
02. S. சயந்தினி, மடுமாதாவீதி, பெற்றா, மன்னார்.
03. ஜீன்போன் லக்மினி குரூஸ், ஆனாள்நகர், வங்காலை.
04. C. ஆன் பிரஷாந்தினி, நானாட்டான்.
05. E. றமீசன், ஜிம்பிறவுண் நகர், எழுத்தூர்.
06. அருள்லீலா மேரி யூக்கறிஸ்ரா, சின்னக்கடை, மன்னார்.
07. டெபேறா, மோகன்ராஜ், இல: 7, தபாலகவீதி, மன்னார்.
08. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
09. K. கிளரன்ஸ் மரினோ, ஜீவபுரம், எமில்நகர், மன்னார்.
10. A. தெனீஷியா, காத்தான்குளம், வட்டக்கண்டல்.
11. ஜெ. ஜெனிஸ்ரன், அந்தோனியார்புரம், இலுப்பைக்கடவை.
12. கத்தரின் சேவியர், பெரியகடை, மன்னார்.
13. R. துசாளினி, காத்தான்குளம், வட்டக்கண்டல்.
14. ச. மரிய கொண்சிக்கா, குரூஸ், சிலாவத்துறை.
15. K. அபிஜாஸ், இல: 168, மடுக்கரை, நானாட்டான்.
16. அ. கிளேயறா, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
17. D.P. டக்ஷன் யோனாஸ், மாவிலங்கேணி, முருங்கன்.
18. வயலட் யோண், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
19. மேரி. நிவேதினி, கொன்னையன்குடியிருப்பு, தாராபுரம்.
20. P. சோபியா, கொன்னையன் குடியிருப்பு, தாராபுரம்.
21. K. இமல்டா ஜெயமணி, ஜீவபுரம், எமில்நகர், மன்னார்.
22. அ. மேரி பற்றிமா, கீரி, மன்னார்.
23. N. கறிஷன், எமில்நகர், மன்னார்.
24. ப. அன்ரனி சாந்திபுரம், மன்னார்.
25. M. சுஸ்மிதா மிராண்டா, 8ம் வட்டாரம், பேசாலை.
26. அன்ரன், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
27. A. கில்மா, கட்டையடம்பன், மடுவீதி.
28. S. வரதன் குரூஸ், லூக்காவீதி, தாழ்வுபாடு.
29. V. டிவைனா குரூஸ், லூக்காவீதி, தாழ்வுபாடு.
30. S.M. சுசந்திக்கா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
31. P. அன்ரன் சரன்சலா மேரி, துட்டுவாகை.
32. S. சுதேஸ், 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
33. A. நெல்சன், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.
34. K. றெபேக்கா ஏஞ்சலின், ஜீவபுரம், எமில்நகர், மன்னார்.
35. நிசாந்தன், முருங்கன்பிட்டி, முருங்கன்.
36. P. ஜீன் செறின்டன், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.
37. J. சுஜானா, பனங்கட்டுகொட்டு, மன்னார்.
38. X. சிறில் பேரின்பநாயகம், சின்னக்கடை, மன்னார்.
39. J. தணுசிக்கா, எழுத்தூர், மன்னார்.
40. A. றொசாணி, நானாட்டான்.
41. ஆ. றுஸ்மி, நெளுக்குளம், வவுனியா.
42. N. சயந்தினி, பட்டித்தோட்டம், மன்னார்.
43. பியற்றிஸ் வசந்தகுமாரி, சின்னக்கடை, மன்னார்.
44. S. அனுசன், குழந்தையேசு புரம், மன்னார்.
45. A. யூட் அன்றியன், கற்கிடந்தகுளம், முருங்கன்.
46. J.S. அனஸ்ரீனா, பிகிறாடோ, பள்ளிமுனை.
47. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
48. ஆ. மானுசா, அருளினி, குழந்தை யேசு வீதி, மாம்புரி.
49. ஜீவரெட்ணம், யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
50. த. ஆன் கெனோசிக்கா, நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம்.

## அருட்பணி ஜோசவ் ஜெயசீலன்......

**8ஆம் பக்கத் தொடர்ச்சி**

இவர் சிக்காக்கோ கத்தோலிக்க இறையியல் பல்கலைக்கழகத்தில் நடைமுறைச் சாத்திய இறையியல் துறையில் கலாநிதி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவருடைய இந்த புத்தக வெளியீட்டிற்கு முதன்மை விருந்தினராக இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி அதி மேன்மைமிகு கலாநிதி பியர் நுயென் வான் ரொற் அவர்கள் கலந்து சிறப்பித்தார். நூலுக்கான அறிமுக உரையை இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்று இயக்குனர் கலாநிதி ஜெகான் பெரேரா வழங்க, நூல் ஆய்வினை கொழும்பு களனியப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஸ்ரன்லி விஜயசிங்க முன்வைத்தார். இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் பேரருட் கலாநிதி வின்ஸ்ரன் பெனாண்டோ ஆண்டகை நூலாசிரியருக்கு சிறப்புச் செய்தியொன்றினை அனுப்பிவைத்தார். பேராசிரியர் ஸ்ரன்லி விஜயசிங்க தனது நூல் ஆய்வுரையில்: இந்தப் புத்தகமானது கிறிஸ்தவர்களுக்கும் குறிப்பாக கத்தோலிக்க திருச்சபைக்கும் தாக்குமானதும், ஆக்கபூர்வமானதுமான நடைமுறைச் சாத்தியங்களை முன் வைத்திருக்கின்றது என்பதோடு நூலாசிரியரின் இந்த அற்புதமான பணிக்காக அவரை வெகுவாகப் பாராட்டினார்.

இந் நிகழ்க்கு அமைச்சர்கள், இலங்கைக் கத்தோலிக்க துறவற சபைகளின் மேலாளர், கிளறீசியன் சபை ஆண், பெண் துறவிகள், அருட்பணி ஜோசவ் ஜெயசீலன் அவர்களின் உறவினர்கள், நண்பர்கள், பெருந்தொகையான குருக்கள், துறவிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## பள்ளகண்டல் தூய ......

**8ஆம் பக்கத் தொடர்ச்சி**

நீண்டகாலமாக குறிப்பாக முள்ளிக்குளம் தூய பரலோகமாதா ஆலய அருட்பணிப் பேரவை இத் திருத்தலத்திற்குப் பொறுப்பாகவிருந்து ஆன்மிகச் செயற்பாடுகள் அனைத்தையும் ஆன்னொடுத்து வந்தது. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்னர் இத்திருத்தலம் சிலாப மறைமாவட்டத்தின் அருட்பணி எல்லைக்குள் வருவதால் அதனை சிலாபம் மறை மாவட்டத்தினால் நிர்வகிப்பதே பொருத்தமானதென வேண்டுகை முன்வைக்கப்பட்டதால், முன்னைநாள் மன்னார் ஆயர் பேரருட்கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் அதனை சிலாபம் மறைமாவட்ட ஆயரிடம் கையளித்தார்.

## விருது பெற்ற வேதியர் மூவர்......

**8ஆம் பக்கத் தொடர்ச்சி**

பல்வேறுபட்ட திறன்களைப் பெற்ற இவர், எழுத்தாளராக, கலைப்படைப்பாளராக, கவிஞராக, பாடகராக, யோகக்கலை ஆசானாக விளங்கி இத்துறைகளில் பலரை இன்றும் வளர்த்து வருகின்றார். "இயல் ஆசான்" எனும் சிறப்பு விருது இவருக்கு உரித்தாக்கப்பட்டது. பொதுநிலையினர் சிறப்பு ஆண்டின் மூத்த மூன்று பொதுநிலைப் பணியாளர்களுக்கு, கல்விச்சமூகம் விருது வழங்கி மதிப்பளித்துள்ளது. இக்கலைஞர்களைத் திரு அவைக்குத் தந்த முழுமுதற் கடவுளுக்கு நன்றி கூறுவோம். இவர்கள் ஆன்ம, உடல் வளம் பெற்று இனிவரும் நாட்களிலும் இவைவனுக்கு மாட்சியளிக்கும் வகையில் இயங்க வாழ்த்தி இவர்களை வழிநடாத்துமாறு இறைவேண்டல் செய்வோம். மறைமாவட்டம் சார்பாக மன்னா நிர்வாகமும் இவர்களைப் பாராட்டி நிற்கின்றது.

**தகவல், ய. மரியவளன், ஆசிரியர்,**

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்



காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள்.

தரம்கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

## சவேரியார்புரம் ......

**1ஆம் பக்கத் தொடர்ச்சி**

கடந்த 18.06.2018 மாலை 5.00மணிக்கு சிலாவத்துறை, முத்தரிப்புத்துறை பிரதான விதியிலிருந்து ஆலயத்திற்குச் செல்லும் நுழைவாயிலிருந்து, ஆயர் அவர்கள் ஆலய முன்றல்வரை அழைத்து வரப்பட்டு அங்கு மரபு ரீதியான வரவேற்ப்பளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆயர் அவர்கள் புதிய ஆலயத்தை அர்ச்சித்து புனிதப்படுத்தும் திருநிகழ்வை முறைப்படி முன்னெடுத்துச் சென்றார்.

பங்குத்தந்தை அருட்பணி செ.அன்ரன் தவறாஜா அடிகளார் ஆலய இறைமக்கள் சமூகத்தோடும் பணியாற்றும் துறவிகளோடு இணைந்தும் புதிய ஆலய அமைப்புப் பணியையும், இத் திருநிகழ்வையும் மிகவும் சிறப்பாகச் செய்துமுடித்திருந்தார்.

இந் நிகழ்வில் பெருந்தொகையான இறைமக்களும், அரச, அரச சார்பற்ற பணியக முதன்மைப் பணியாளர்களும், குருக்கள் துறவியரும் கலந்து கொண்டனர்.

**மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்**

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே,
உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரியவர்களுக்கு விநியோகிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். **- மன்னா நிர்வாகம்.**

# நீங்காத நினைவுகள்

## 14ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 01 1947



உதிர்வு 18 07 2004

### திரு. பறுனாந்து அந்தோனிப்பிள்ளை

(பாலசிங்கம் )– ஓய்வு பெற்ற விவசாயப் போதனாசிரியர்

(முருங்கன் கமம், முருங்கன்)

மண்ணக வாழ்வை முடித்துக் கொண்டு எம்மைப் பிரிந்து விண்ணகம் நோக்கிச் சென்ற எங்கள் அருமை ஐயாவே ஆண்டுகள் பதின்நான்கு சென்றாலும் ஆறாது உங்கள் இழப்பு எம்வாழ்வில் வலிகளை நீங்கள் சுமந்து வழிகளை எமக்கு காட்டினீர்கள் இன்று ஆயன் இல்லா ஆடுகள் போல அந்தரிக்கின்றோம் ஐயாவே. இறைத் திருவடியில் இன்புற்றிருப்பீர்கள் என்ற நம்பிக்கையில் இறைவனிடம் மன்றாடும்.

**பிரிவால் நினைந்துருகும்,**

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்.

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 11 1937



உதிர்வு 15 07 2016

### திரு. அ. சந்தியாப்பிள்ளை (பொன்ராஜா)

(பெரியகட்டைக்காடு, நானாட்டான்)

**"படைகளின் ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது" (தி.பா. 94:1)**

ஆண்டாண்டு காலம் உம் நினைவுகள் வந்தாலும்
புன்னகைத்த உம் வதனம் எம் கண்களில்
நிழலாய் வந்திருமே! எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உம்மில் நாம் கொண்ட பாசம் மாறிடுமோ?
இன்பத்தில் துன்பத்தில் எம்மோடு இருந்தாய்
இணைந்து வாழ்ந்தோம் ஓர் உறவாய்
இறையவனின் அடியானாய்
இம்புற்று இருந்த உம் வாழ்வு இறைவனில்
இதைய சாந்தி பெற வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவுகள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 21 03 1935



உதிர்வு 04 06 2018

### திரு. பொன்ராசா அன்ரன் ஆனந்தராஜா

(இறம்பைக்குளம், வவுனியா)

**"என்னிடம் நம்பிக்கை கொண்டவன் இறப்பினும் வாழ்வான்"**

அன்பூட்டி அறிவூட்டி பண்புடன் பாசமூட்டி
இப்பதியில் எமை வாழ்வாங்கு வாழவைத்த
அன்பு ஐயாவே!
பரமனின் பாதத்திலே பக்தியோடு நீர் அமர்ந்து
எமக்காக வேண்டிடுவீர்!

04.07.2018 புதன் கிழமை அன்று காலை 06 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

**பிரிவால் நினைந்துருகும்,**

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

## 07ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 01 1930



உதிர்வு 13 06 2011

### திரு. பேதுரு வேதநாயகம்

(சூரியகட்டைக்காடு, நானாட்டான்)

**"இதோ உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம். ஆகவே நீ நமக்கே சொந்தம்" (எசாயா 43:1).**

ஏழு ஆண்டுகள் கழிந்துவிட்டன அப்பா.
விழிகளில் நீருமில்லை;
வாழ்வினில் வசந்தமுமில்லை.
சுமைகளைக் கூற எமக்கு வழிகளும் தெரியவில்லை.
எங்கு அப்பா போய் மறைந்தீர்?
ஆண்டவன் மடியில் அமைதியாய் இளைப்பாற
மீண்டும் உம்மை பேரின்ப வீட்டில்
மகிழ்ச்சியுடன் சந்திப்போம்.
அதுவரை காத்திருப்போம்!

**பிரிவால் நினைந்துருகும்,**

மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்,

## புதிய உதயம்.........

1ஆம் பக்கத் தொடர்ச்சி

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பேர்னாண்டோ ஆண்டகை அவர்களும், முதல் பங்குத்தந்தை அருட்பணி பா. றொசான் அடிகளாரும் மடுறோட் பிரதான வீதியிலிருந்து புதிய பங்கு ஆலயத்திற்கு பாண்ட்வாத்திய இசைக்கருவிகளின் மகிழ்வொலியோடு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து நடைபெற்ற சிறிய வரவேற்போடு நினைவுச் சின்னக்கல் ஆயர் அவர்களினால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து இப்பங்கு புதிய பங்காக ஆயர் அவர்களால் திருப்பொழிவு செய்து ஆசீர்வதிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. இப்பங்கிற்கு முதல் பங்குத்தந்தையாக அருட்பணி பா. றொசான் அடிகளார் ஆயரிடமிருந்து நியமனப்பத்திரத்தைப் பெற்று அறிக்கை செய்தார். திருவழிபாட்டு மரபுப்படி இப்பிரதேசங்களிலுள்ள ஆலயங்களை நிருவகித்த அருட்பணி அருட்பிரகாசம் அடிகளார் முதல் பங்குத்தந்தைக்கு இவ்வாலய நற்கருணை பேழையின் திறப்பை வழங்கினார். தொடர்ந்து ஆயர் அவர்கள் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இப்பங்களிலுள்ள சகல தமிழ், சிங்கள குடும்பங்களும் ஒன்றாக கலந்து சிறப்பித்தமை தனிச்சிறப்பை பெறுகிறது. இப்பங்கு எல்லா இன மக்களுக்கும் மறை பரப்புச் செய்கின்ற புகழ் பெற்ற பங்காகும்.

திருப்பலி முடிவில் ஆயர் அவர்களுக்கு நன்றி கூறப்பட்டது. தொடர்ந்து பணிவிடை பெற்றுச் செல்லும் அருட்பணி அருட்பிரகாசம் அடிகளாருக்கு சேவை நலம்பாராட்டு விழாவும், முதல் பங்குத்தந்தைக்கு வரவேற்பும் சிறப்பாக நடைபெற்றது. அருட்பணி அருட்பிரகாசம் அடிகளார் இந்நிகழ்வுகள் அனைத்தையும், மடுறோட் பகுதி இறைமக்களோடு இணைந்து சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

இந்நிகழ்வில் முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி சுரேந்திரன் றெவ்வல், பல அருட்பணியாளர், அருட்சகோதரிகள், சட்டத்தரணி புனித நாயகம் அவர்கள், அரச அரசசார்பற்ற பணியாளர்கள், வங்காலை பங்குமக்கள் மற்றும் இப்பகுதி இறைமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். இறுதியில் ஆலய அருட்பணிச்சபை செயலாளர் அவர்களின் நன்றியுரையுடன் இவ்வைபவம் நிறைவு பெற்றது.

## முத்தரிப்புத்துறையில் ........

5ஆம் பக்கத் தொடர்ச்சி

இதனைத் தொடர்ந்து முத்தரிப்புத்துறை ஆண்டி ஓடை என்னும் இடத்திற்கு அருகில் அமைந்துள்ள பகுதியில், புனித யோசவ்வாஸ் அவர்களால் நடப்பட்ட திருச்சிலுவை உள்ள இடத்தில் அமைக்கப்பட்டுள்ள புனித அந்தோனியார் சிற்றாலயத்தை, ஆயர் அவர்கள் அர்ச்சித்து திறந்து வைத்தார். இங்கு மறையுரையாற்றிய ஆயர் அவர்கள், குடும்பங்களில் தேவ அழைத்தல்கள் பெருகவேண்டுமென்றும், அதற்கு, விவிலியத்தில் சொல்லப்படுகின்ற மக்கட்பேறு கடவுள் அருளும் செல்வம் என்னும் உண்மையை உணர்ந்து, குடும்பங்களில் பிள்ளைப்பேற்றிற்கு முக்கிய இடம்கொடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வுக்கு பெருந்தொகையான இறைமக்கள், குருக்கள், துறவிகள் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன், வடமாண சபை உறுப்பினர் கௌரவ பிறிமூஸ் சிராய்வா சட்டத்தரணியும், மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியத்தின் தலைவருமான திரு. அன்ரன் புனிதநாயகம், முன்னாள் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வினோதரலிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

அனைத்து நிகழ்வுகளையும் ஆலய அருட்பணிப் பேரவையோடும், அருட்சகோதரிகளோடும், மக்களோடும் இணைந்து, பங்குத்தந்தை அருட்பணி. எ. டெனி கலிஸ்ரஸ் அடிகளார் நெறிப்படுத்தி நடாத்தியிருந்தார்.

## பம்பைமடு பங்கின்.........

1ஆம் பக்கத் தொடர்ச்சி

திரு அவையின் ஒழுங்கு முறைப்படி ஆலயம் அபிஷேகம் செய்யப்பட்டு திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அன்னையின் திருச்சுரூப ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது. இத் திருநிகழ்வு கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை ஆடி மாதம் சிறப்பாக இடம்பெற்றது. மன்னா பத்திரிகை, மறைமாவட்டம் சார்பாக அருட்பணி. ஜெஸ்லி ஜெகானந்தனை பெருமிதத்தோடு பாராட்டுகின்றது. பம்பைமடு பங்கில் பல ஆலயங்களை புணரமைத்து பலரின் உதவியுடன் இடங்கள் பெற்று புதிய ஆலயங்களை அமைத்து பங்கின் வளர்ச்சியில் அரும்பாடுபட்டு உழைத்த பெருமை இவரைச்சாரும்.

## புதுமை மிக்க பழைமை நிறைந்த .....

5ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒரு சில குடும்பங்கள் மட்டும் அதே இடத்தில் வசித்து வருகிறார்கள். இங்கு காட்சியளிக்கும் 1964 ஆம் ஆண்டுகளில் சேதமடைந்த ஆலயத்தின் ஒரு பகுதியாகும். இவ்விடத்தை சூழவுள்ள கிறிஸ்தவர்களும், இந்து சமயத்தவர்களும் அங்கு சென்று செபித்து வருவது வழக்கமாக இருக்கிறது. சிறப்பாக குழந்தைகளுக்கு தாய்ப்பால் வரம் இல்லாத அன்னையர்கள் இவ்வாலயத்தை நாடி, நேர்த்தி செய்து செபிக்கின்ற போது குழந்தைகளுக்கான தாய்ப்பால் வரத்தை பெற்றுக்கொள்ளும் சம்பவங்கள் இவ்வாலயத்தில் நடைபெறும் புதுமைகள், என்று வாய்மொழியாக கூறப்படுகின்ற உண்மை என்று பங்குத்தந்தை அருட்பணி சீமான் மரியதாசன் அடிகளார் மன்னாவுக்கு அளித்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மாந்தைப் பங்காக பிரிக்கப்பட்ட பின்பு பங்குத்தந்தை, குருமுதல்வரோடு அங்கு சென்று இடத்தை தரிசித்து, அவ்விடத்தில் சிற்றாலயத்தை கட்டியெழுப்பியுள்ளார். பின்பு 2 நாட்கள் ஆயத்த வழிபாடுகளுடன் கடந்த 03.05.2018 அன்று மாலை 5.00 மணிக்கு குருமுதல்வர் தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இப்பழைமை வாய்ந்த ஆலயத்தில் மரத்திலான பழைய திருச்சுரூபம் கண்டெடுக்கப்பட்டு இவ்வாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

## வாழ்க்கைப் பெற்றான்கண்டல்........

1ஆம் பக்கத் தொடர்ச்சி

ஞாயிறு மாலை 05.00 மணிக்கு முருங்கன் நானாட்டான் பிரதான வீதியிலிருந்து வாழ்க்கைப் பெற்றான் கண்டல் கிராமத்திற்குச் செல்லும் நுழைவாயிலிருந்து, வாழ்க்கைப் பெற்றான் கிராமம் வரை உந்துருளி அணிவகுப்போடு ஆயர் அவர்கள் ஆலய முன்றல் வரை அழைத்து வரப்பட்டு அங்கு மரபு ரீதியான வரவேற்பளிக்கப்பட்டது.

நானாட்டான் மகாவித்தியாலய இசைக்குழுவின் மேலைநாட்டு மகிழ்வொலியோடு ஆயர் அவர்கள் மதிப்பளித்து வரவேற்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து ஆயர் அவர்கள் புதிய ஆலயத்தை அர்ச்சித்து புனிதப்படுத்தும் திரு நிகழ்வை முறைப்படி முன்னெடுத்துச் சென்றார்.

பங்குத் தந்தை அருட்பணி லீ.சுரெந்திரன் றெவல் அடிகளார் ஆலய இறைமக்கள் சமூகத்தோடும்,பணியாற்றும் துறவிகளோடு இணைந்தும் புதிய ஆலய அமைப்புப் பணியையும், இத் திருநிகழ்வையும் மிகவும் சிறப்பாகச் செய்து முடித்திருந்தார். இந் நிகழ்வில் பெருந்தொகையான இறைமக்களும்,அரச,அரச சார்பற்ற பணியக முதன்மைப் பணியாளர்களும்,குருக்கள் துறவியரும் கலந்து கொண்டனர்.


## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள்.



தரம்கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

# இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து!



**திரு. திருமதி. சந்தியோகு யேசுதாசன் நீற்றா**
**(பள்ளக்கமம், முருங்கன்)**

**1968.07.10 - 2018.07.10**

"நான் ஒருபோதும் அவர்களை கைவிடவும் மாட்டேன் அவர்களை விட்டுப்பிரியவும் மாட்டேன்" (எபி. 13:5)

இல்லறம் என்னும் நல்லறத்தில்
இன்புற்று இறை ஆசியுடன்
50 ஆண்டுகள் நிறைவுற்று
பொன்விழாக் கண்டீரே!
பிள்ளைச் செல்வங்கள் ஐந்தினைப்
பெற்று சீருடனும், சிறப்புடனும்
அருமையாய் வளர்த்திட்டீரே!

முருங்கன் மண்ணில் மங்காப் புகழுடன்
ஏழ்மையிலும் எளிமையாய்
வறுமையிலும் செம்மையாய்
வளர்த்திட்டீரே!

நம்பிக்கையாய் நல் மனதுடன் நிறைவு
செய்யும் நல்லதோர் பொன்விழா!
அந்தோனியாரின் ஆசியோடும்,
ஆண்டவனின் துணையோடும்
பல்லாண்டுகள் வாழ்கவென
மனதார வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர் :** பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார் உறவினர்கள்.

# நீங்காத நினைவுகள்

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி



**அருட்பணி.**
**லாசர் செபஸ்ரியான் குருஸ்**
**(திருவுளப் பணியாளர் சபை - I.V.D - வங்காலை)**
**குருத்துவம் – 04.01.1990**

**மலர்வு : 30 - 06 - 1957**
**உதிர்வு : 19 - 07 - 2016**

**அழிவுக் குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயர் பெற்று எழுகிறது! (1கொரிந்தியர்: 15:42)**

வங்க மண் என்ற இனிய குரு
எளிமையே உருவான உன்னத குரு
இரக்கம் உறை ஒப்பற்ற குரு
இயேசுபணி நிறை உயர் குரு
அமைதி நிறை அன்பு குரு
நோயாளர் பிணி நீங்கிய குரு
அடக்கமே உருவான பணிக் குரு
பணியே குறியென வாழ்ந்த குரு

வானுலகு ஏகி ஆண்டு இரண்டு ஆயினும்
ஆறவில்லை எம் துயர் வல்ல இறைபதம்
அமர்ந்திட அடியோர் வேண்டுகிறோம்.

அமைதி அமைதி அமைதி

**பிரிவால் நினைந்துருகும்,**
சகோதரி, சகோதரிகள், உற்றார் உறவுகள்.

## 09ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 10 1997 — உதிர்வு 14 07 2009



**செல்வி. குமார் றினுஷா லக்ஷி**
**(எமில்நகர். மன்னார்)**

நேற்றுப் போல் உள்ளதம்மா உன் பிரிவு...
விலைமதியாச் செல்வமொன்று விண்ணேறிச் சென்ற நாளோ!
காலங்கள் விரயக் கடந்ததம்மா ஒன்பதாண்டோ!
நீ அன்னை மடி திறந்து விட்டு
இன்று இறைவன் மடி சேர்ந்ததேனோ?
புன்னகை உன் செல்வமம்மா
அதை எம்முள் புதைத்து விட்டாயோ!
உன் நினைவு கொண்டே - எம் துயர்
நீக்கி எம்மை விட்டுச் சென்றாயோ!
உன் ஆன்மா அமைதியில் இளைப்பாற வேண்டுகிறோம்
இறைவனிடம் அது நிலைபெற.

**பிரிவால் நினைந்துருகும்,** அம்மா, அப்பா, அண்ணா, அம்மம்மா, மற்றும் உன் உறவுகள்.

## 05ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 12 1949 — உதிர்வு 21 07 2013



**திருமதி. ஜெபநேசன் விக்ரோறியாள்**
(மாந்தை மேற்கு ப.நோ.கூ. சங்கத்தின் முன்னாள் தலைவி, ஓய்வுபெற்ற மாந்தை மேற்கு பிரதேசசபை உத்தியோகத்தர்)
**(காத்தான்குளம், வட்டக்கண்டல்)**

அன்போடு அள்ளித்தந்து அரவணைத்தீர்கள்.
எம்மை ஆறாத்துயரில் தவிக்கவிட்டு
ஆறுதல்தேடி சென்றுவிட்டீர்களே அம்மா!
வருடம் ஐந்து ஆனதம்மா ஆறவில்லை எம் காயம்.
அன்போடு எமைக்காத்து அறிவுரைகள் பல கூறி
பண்போடு எம்மை உம் கண்ணுக்குள் வைத்து வளர்த்து
பாரினிலே உயரவைத்தீர்கள்.
கண்ணீர் நாம் வடிக்க எங்கு அம்மா போய் மறைந்தீர்?
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
கணவன், மகன், மகள், மருமகன், பேத்தி.

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 09 1952 — உதிர்வு 27 06 2016



**திரு. ச. அந்தோனிப்பிள்ளை**
**(வேந்தக்கோன்)**
**(அச்சங்குளம், நானாட்டான்)**

**"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது" (தி.பா. 115.6)**

அன்பின் உருவே பாசத்தின் இலக்கணமே
ஈராண்டுகள் கடந்து போனாலும்
நீங்கள் என்றும் எம்மோடு எம் மத்தியில்
வாழ்ந்து கொண்டே இருக்கின்றீர்கள் அப்பா
உம் புன்னகை பூத்த முகம் எம் கண்முன்னே
நிலையாய் நிற்குதப்பா ஆறாத துயரில்
எம்மை ஆழ்த்தி விட்டு சென்று விட்டீரே.

**பிரிவால் நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 11 1939 — உதிர்வு 26 07 2017



**திரு. சுவக்கீன் ஜேம்ஸ் பத்திநாதன்**
**(இ.போ.ச. ஓய்வுபெற்ற சாரதி)**
**(சின்னக்கடை. மன்னார். – விடத்தல்தீவு)**

ஓர் ஆண்டு ஓடி மறைந்ததப்பா ஆனால் எங்கள் நினைவை விட்டு நீங்கள் மறையவில்லையப்பா. எங்கள் இதயத்தில் நீங்கள் ஒரு அணையா விளக்கு அப்பா அந்த விளக்கு எங்கள் வீட்டில் எந்த நேரமும் எரிந்துகொண்டே இருக்குதப்பா.

**பிரிவால் நினைந்துருகும்,** மனைவி ராஜேஸ்வரி நியூஸ்லாந்து, மகன்மார் சதீஸ் அவுஸ்ரேலியா, பிரேம், றமேஸ் நியூஸ்லாந்து, மகள்மார் SR. டிலக்ஷி (நிம்மி) மன்னார், பிறிம் மன்னார், நீத்தா, நியூஸ்லாந்து, மருமக்கள் மார், கமலி நியூஸ்லாந்து, S. சுபா. அவுஸ்ரேலியா, P.ஜஸ்மின், R. சர்மிலி நியூஸ்லாந்து, பேரப்பிள்ளைகள், சகோதரங்கள், உற்றார் உறவினர்கள்.

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 08 1955 — உதிர்வு 26 07 2016



**திரு. மருசலீன் ஜோச் குமார்**
**(ஓய்வுபெற்ற கிராம சேவை உத்தியோகத்தர். மடு)**
**(சின்னப்பண்டிவிரிச்சான். மடு)**

"நான்கு பக்கமும் துன்பம்" சூது நிறைந்த மானிடர் மத்தியில் வலையில் அகப்பட்ட மான்போல் ஆதரவின்றி தவிக்கின்றோமப்பா. தரையில் தவழவிடாமல் மடியில் வைத்து வளர்த்த அப்பா தத்தி தடுமாறும்போது மார்பில் சுமந்த அப்பா கனவுலகின் கற்பனையில் அழகான தோட்டம் அமைத்து அதன் விளைச்சல் காணுமுன்னே ஏனப்பா ஓடி மறைந்தீர்கள். மூன்றாண்டும் வந்ததப்பா இன்றுபோல நினைவலைகளப்பா.

**பிரிவால் நினைந்துருகும்,** அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்மார், உற்றார், உறவினர் அனைவரும்.

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 04 1933 — உதிர்வு 15 07 2015



**திரு. அ. அந்தோனி சுபபாக்கியம்**
**(பொன்தீவுகண்டல். முருங்கன்)**

ஆண்டு மூன்று ஆனதே ஐயா!
ஆறவில்லை உங்கள் பிரிவின் துயரம்,
எங்களை இத்தரணியில் சிறப்புடன் வாழவைத்த உத்தமரே!
அல்லும் பகலுமாய் எங்கள் அத்தனை பேரையும்
கண்ணுக்குள் வைத்து காத்த அன்பு ஐயாவே!
சிரிக்க மட்டுமே தெரிந்த உங்கள் செந்தாமரை
முகத்தால் எத்தனையோ துயரங்களை சிரித்த படியே
துடைத்து நின்று எங்களை சிற்பமாய் செதுக்கியும் வைத்தாய்
உத்தமரே, உங்கள் ஆன்மா சாந்திபெற இறைவனை
வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,** அன்பு மனைவி, பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்கள்.